விலை ரூபா 20.00




போர்க் கப்பல்கள்

பக்கம் 09



எதிர்நோக்கும் புதிய சவால்கள்

பக்கம் 13



இந்தியாவிலும் பேரணி

பக்கம் 19



அது அவர்களின் இயல்பு

பக்கம் 23


www.onlineuthayan.com

பக்கங்கள் : 28

# உதயன்

சுடர் 27
கதிர் 156

வள்ளுவர் ஆண்டு 2043 சித்திரை 18 திங்கட்கிழமை (30/04/2012) UTHAYAN - A Lively National Tamil Daily


# 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்த இந்தியா அழுத்தம் கொடுக்க வேண்டும்

### காங்கிரஸ் எம்.பிக்கள் மன்மோகன் சிங்கிடம் கோரிக்கை

கொழும்பு, ஏப்.30

இலங்கையில் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண 13 ஆவது திருத்தச்சட்டத்தை உடன் நடைமுறைப்படுத்த கொழும்புக்கு புதுடில்லி அழுத்தம் கொடுக்க வேண்டும். அத்துடன், 13ஆவது திருத்தம் தொடர்பில் அரசு - கூட்டமைப்பு இடையிலான பேச்சு மீண்டும் ஆரம்பிக்கப்படுவதற்கு இந்தியா ஒத்துழைப்பு வழங்கவேண்டும்.

.-இவ்வாறு இலங்கைக்கு விஜயம் மேற்கொண்ட இந்திய நாடாளுமன்றக் குழுவில் அங்கம் வகித்த காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் இலங்கையின் நிலைவரங்களை விளக்கி இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கிடம் சமர்ப்பித்துள்ள அறிக்கையில் வலியுறுத்தியுள்ளனர்.

சுதர்சன நாச்சியப்பன், சித்தன், அழகிரி உள்ளிட்ட குழுவே நேற்று முன்தினம் பிரதமர் அலுவலகத்தில் வைத்து இந்த அறிக்கையைக் கையளித்துள்ளது.

13ஆவது அரசமைப்புத் திருத்தம், நல்லிணக்க ஆணைக் குழு அறிக்கை, வடக்கு,

04



நெடுந்தீவுக்கு நேற்றுப் பயணம் செய்த எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு அரசு வாகன ஏற்பாடுகளை செய்து கொடுக்கவில்லை. நெடுந்தீவிலும் அவர் வாடகைக்கு வாகனங்களை அமர்த்த ஒரு கட்சி தடை விதித்திருந்ததாக மக்கள் தெரிவித்தனர். இதனால் அவர் 'லாண்ட் மாஸ்ரர்' வாகனத்திலேயே நெடுந்தீவை வலம் வரவேண்டி இருந்தது.

### அரசியல் கட்சி ஒன்றின் பிடியில் இருந்து

# நெடுந்தீவை விடுவியுங்கள்

### ரணிலிடம் மக்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஏப்ரல் 30

நெடுந்தீவைத் தனது கோட்டையாக வைத்திருக்கும் கட்சி ஒன்று ஜனநாயக விரோத செயற்பாடுகள் மூலம் மக்களை அடிமைபோல நடத்துகிறது. இந்த அடிமைத் தளையிலிருந்து நெடுந்தீவு மக்களை விடுவிக்க வேண்டும் என்று நெடுந்தீவு மக்கள், எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரம சிங்கவிடம் நேற்றுக் கோரிக்கை விடுத்தனர்.

எதிர்க்கட்சிகள் இணைந்து யாழ்ப்பாணத்தில் இந்தமுறை நடத்தவுள்ள மே தின நிகழ்வுகளுக்காக யாழ்ப்பாணம் வந்துள்ள ரணில் விக்கிரம சிங்க தலைமையிலான குழுவினர் நேற்று நெடுந்தீவுக்கு சென்றிருந்தனர்.

இதன்போது அங்குள்ள மக்களைச் சந்தித்து அவர்களின் குறை நிறைகள் தொடர்பாகரணில்விக்கிரமசிங்க கேட்டபோதே மேற்குறித்த

04

## தமிழீழ ஆதரவு கூட்டம் இன்று

சென்னை, ஏப்.30

தமிழ்நாட்டில் 1980 களின் மத்தியில் உருவாக்கப்பட்ட தமிழீழ ஆதரவாளர் அமைப்பான டெசோ மீண்டும் உயிர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இதன் முதல் கூட்டம் சென்னையில் இன்று தி.மு.க. தலைவர் கருணாநிதி தலைமையில் நடைபெற உள்ளது.

இது தொடர்பாக தமிழீழ ஆதரவாளர் அமைப்பு (டெசோ) சார்பில் வெளியிடப்பட்டுள்ள செய்திக் குறிப்பு வருமாறு:

தமிழீழம் ஆதரவாளர் அமைப்பின் முதல் கலந்துரையாடல் கூட்டம், சென்னை அண்ணா அறிவாலயத்தில் 30ஆம் திகதி (இன்று) காலை 10.30 மணியளவில் அமைப்பின் தலைவர் கருணாநிதி தலைமை

04

## ஹக்கீமுடன் மஹிந்த நேற்று தொலைபேசியில் அவசரபேச்சு

கொழும்பு, ஏப்.30

தம்புள்ளயில் முஸ்லிம் பள்ளிவாசல் அகற்றப்பட வேண்டும் என்ற உத்தரவால் எழுந்துள்ள சர்ச்சை நிலைமைகள் குறித்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் நீதியமைச்சருமான ரவூப் ஹக்கீமுடன் அவசர தொலைபேசிக் கலந்துரையாடலொன்றை நடத்தியிருக்கிறார்.

நேற்றுக்காலை தொலைபேசியூடாக முஸ்லிம் காங்கிரஸ் தலைவருடன் தொடர்பு கொண்ட ஜனாதிபதி மஹிந்த, தம்புள்ள பள்ளிவாசல் விவகாரம் குறித்து நீண்டநேரம் பேச்சு நடத்தியதுடன், அந்த விடயம் தொடர்பில் முஸ்லிம் காங்கிரஸின் நிலைப்பாடு குறித்தும் வினவினார் என அறியமுடிகின்றது.

தம்புள்ள பள்ளிவாசல் அகற்றப்படும் விவகாரம் குறித்தான

04

## துப்பாக்கிக் கொள்ளையர்களால் முறிகண்டியில் பெரும் பதற்றம்

யாழ்ப்பாணம், ஏப். 30

திருமுறிகண்டிப் பகுதியில் நேற்று அதிகாலை 2 மணியளவில் வீடொன்றுக்குள் துப்பாக்கிகள் சகிதமாகப் புகுந்த மூவர் அடங்கிய குழு வீட்டிலிருந்தவர்களை அச்சுறுத்தி அறையில் பூட்டிவிட்டு வீட்டில் உறங்கிக்கொண்டிருந்த ஏழு வயதுப் பிள்ளையை பணயமாக வைத்து கொள்ளையடித்து விட்டு தப்பிச் சென்றுள்ளது.

இது தொடர்பாகத் தெரியவருவதாவது:

திருமுறிகண்டிப் பகுதியில் உள்ள ... கிறீம்ஹவுஸ் என்ற கடைக்குள்ளும் அதனோடு இணைந்த வீட்டினுள்ளும் ஏ.கே.47 ரகத் துப்பாக்கிகள் சகிதமாக அத்துமீறிப் புகுந்தனர் கொள்ளையர்கள்.

பின்னர் அவர்கள் துப்பாக்கிகளையும், கத்தியையும் காட்டி மிரட்டி அங்கிருந்த ஏழு வயதுப் பிள்ளையைப் பணயமாக பிடித்து வைத்துக் கொண்டு,

04

## நேரடிப் பேச்சு தோல்வியுற்றால் அரசிலிருந்து வெளியேறுவோம்

### முஸ்லிம் காங்கிரஸ் எச்சரிக்கை

கொழும்பு, ஏப்.30

தம்புள்ள பள்ளிவாசல் விவகாரம் தொடர்பில் ஜனாதிபதிக்கும் மு.கா. தலைவர் ரவூப் ஹக்கீமுக்குமிடையில் இடம்பெறவுள்ள நேரடிச் சந்திப்பு தோல்வியடைந்தால் மு.கா. அரசில் இருந்து விலகுவது என்ற தீர்மானத்தை எடுக்கும் என்று மு.கா. முக்கியஸ்தர் ஒருவர் நேற்று உதயனுக்குத் தெரிவித்தார்.

மீண்டும் கட்சியின் உயர் பீடம் கூடி இந்தத் தீர்மானத்தை மேற்கொள்ளும் என்று அவர் மேலும் கூறினார்.

தம்புள்ள பள்ளிவாசல் விவகாரம் மார்க்கத்தோடு தொடர்புபட்ட உணர்வுபூர்வமான

04

## யாழ்.நகரில் சுவரொட்டிகள் பறிப்பு

யாழ்.பிரதான வீதியில் பற்றிக்ஸ் கல்லூரிக்கு அண்மையில் மே தினக் கூட்டம் தொடர்பான சுவரொட்டிகளை ஒட்டிக் கொண்டிருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவாளர்கள் இனம் தெரியாதோரால் அச்சுறுத்தப்பட்டனர். மூன்று மோட்டார் சைக்கிள்களில் வந்த நபர்கள் இவர்களை எச்சரித்ததுடன் அவர்கள் ஒட்டுவதற்காகக் கொண்டு சென்ற சுவரொட்டிகளையும் பறித்துச் சென்றனர் என்று தமிழரசுக் கட்சியின் நிர்வாகச் செயலாளர் எஸ்.எப்.எக்ஸ் குலநாயகம் தெரிவித்தார்.

## பாணின் விலை உயர்வு

நேற்று நள்ளிரவு முதல் பாண் இறாத்தல் ஒன்றின் விலையினை 3 ரூபாவினால் அதிகரிக்க அனைத்திலங்கை வெதுப்பக உரிமையாளர்கள் சங்கம் தீர்மானித்துள்ளது. நேற்றுமுன்தினம் மாலை கூடிய சங்கத்தின் நிறைவேற்று குழு கூட்டத்தில் இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாக, சங்கத்தின் தலைவர் என்.கே.ஜயவர்த்தன தெரிவித்தார். இதன்படி தற்போது 55 ரூபாவாக விற்பனை செய்யப்படும் பாண் இறாத்தல் ஒன்றின் புதிய விலை 58 ரூபாவாக விற்பனை செய்யப்படவுள்ளது.

## புத்தர் சிலையால் ஏழு பேர் கைது

தங்க முலாம் பூசப்பட்ட இரண்டு புராதன புத்தர் சிலைகளை சட்டவிரோதமாக விற்பனை செய்ய முயற்சித்த ஒருவரும் அதனை கொள்வனவு செய்யச் சென்றவர்களும் உட்பட ஏழு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். 17 அடி 20 கிலோ கிராமுடைய புத்தர் சிலையும் 8 அடி புத்தர் சிலையும் ஒரு கோடியே 58 லட்சம் ரூபாவிற்கு விற்பனை செய்யப்படவிருந்ததாக பொலிஸார் கூறியுள்ளனர்.

## மின்னல் தாக்கி ஒருவர் சாவு

மட்டக்களப்பு, புனானையில் மின்னல் தாக்கியதில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் ஒருவர் காயமடைந்துள்ளார். இந்தசம்பவம் நேற்று மாலை 6.15 மணியளவில் இடம்பெற்றுள்ளது. செம்மன் ஓடை 7ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த செய்யது முகமட் சாகுல் கமிட் (வயது 48) என்பவர் உயிரிழந்துள்ளதுடன் மீராவோடையைச் சேர்ந்த கயாத்து முகம்மது கலில் (வயது 38) என்பவர் காயமடைந்துள்ளார்.

## பொலிஸார் தாக்கி ஒருவர் காயம்

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச செயலக கணக்காளர் படுகாயமடைந்த நிலையில் மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சியில் இருந்து யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். தான் போக்குவரத்து பொலிஸாரால் தாக்கப்பட்டே காயமடைந்ததாக அவர் தெரிவித்தார். இந்தச் சம்பவம் நேற்று மாலை இடம் பெற்றுள்ளது. சம்பவத்தில் பிரதேச செயலக கணக்காளரான பத்மநாதன் லுனேந்திரன் (வயது 36) என்பவரே படுகாயமடைந்துள்ளார். மது போதையில் வந்த பொலிஸாரே தன்னைத் தாக்கியதாக லுனேந்திரன் தெரிவித்துள்ளார். எனினும் இதனை பொலிஸார் மறுத்துள்ளனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## கடன்களை மட்டுப்படுத்திய வங்கிகள்

கொழும்பு, ஏப்.30

அரச மற்றும் தனியார் வங்கிகள் சில, கடன் வழங்குவதை மட்டுப்படுத்தியுள்ளன. இலங்கை மத்திய வங்கியின் நிபந்தனைகள் மற்றும் அறிவுறுத்தலுக்கிணங்கவே தனிநபர்களுக்கான கடன் வழங்கலை மட்டுப்படுத்த நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக தனியார் வங்கியொன்றின் உயர் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

வீட்டுக்கடன்கள் மற்றும் ஏனைய தனிநபர்களுக்கான கடன் வழங்கல் தற்போது 50 சதவீதத்தால் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன என்றும் அவர் கூறினார். (ங)

சுத்திச் சுத்திச் சுப்பற்ற கொல்லை....




நன்றி - டெய்லிமிரர்

## மே தினப் பாதுகாப்பு; 10,000 பொலிஸார்

கொழும்பு, ஏப்.30

மே மாதம் முதலாம் திகதி நடைபெற ஏற்பாடாகியுள்ள உலக தொழிலாளர் தினக் கூட்டங்களை முன்னிட்டு 10 ஆயிரத்துக்கும் அதிகமான பொலிஸார் சீருடை மற்றும் சிவில் உடைகளில் கடமையில் ஈடுபடுத்தப்படுவர். அத்துடன் விசேட போக்குவரத்துத் திட்டங்களும் நடை முறைப்படுத்தப்படவுள்ளன என்று பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது.

கொழும்பு, யாழ்ப்பாணம், நுவரெலியா, கினிகத்தேனை, பூண்டுலோயா உள்ளிட்ட பல பகுதிகளில் மே தினக் கூட்டங்கள் இடம் பெறவுள்ளதாகப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

கொழும்பில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, மக்கள் விடுதலை முன்னணி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரேமதாஸ நினைவு தினம் இடம்பெறவுள்ளது.

யாழ்ப்பாணத்தில் எதிர்க் கட்சிகள் மற்றும் ஈ.பி.டி.பி என்பவற்றின் மே தினக் கூட்டங்கள் இடம்பெறவுள்ளன.

நுவரெலியாவில் தொழிலாளர் தேசிய சங்கத்தின் மே தினக் கூட்டமும், கினிகத்தேனையில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் மே தினக் கூட்டமும் பூண்டுலோயாவில் மலையக மக்கள் முன்னணியின் கூட்டமும், மஸ்கெலியாவில் ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸின் கூட்டமும், பொகவந்தலாவையில் இலங்கை தொழிலாளர் ஐக்கிய முன்னணியின் கூட்டமும் ஹற்றனில் தொழிலாளர் விடுதலை முன்னணியின்கூட்டமும்நடைபெற ஏற்பாடாகி உள்ளன.

கொழும்பு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் மே தினக் கூட்டம் மாநகர சபையில் இடம்பெறவுள்ளதோடு இதற்கு கெம்பல் மைதானம், ஆயுர்வேத சுற்றுவட்டம், நாராஹென்பட்ட பகுதிகளில் இருந்து பேரணிகள் வரவுள்ளன.

இதனால் மே முதலாம் திகதி பகல் 12 மணிக்குப் பின்னர் கொழும்பு பேஸ்லைன் வீதி(தெமட்டகொட - பொரளை, கனத்தை - மஹவத்தை), மருதானை வீதி (பொரளை - மருதானை), வீன்ஸ் வீதி, கன்னங்கர மாவத்தை, லிப்டன் சுற்றுவட்டம், ஆயுர்வேத சுற்றுவட்டம், பாடசாலை வீதி, கனத்தை வீதி, திம்பிரி கஸ்யாய வீதி (டொரின்டன் - மஹவத்தை) ஆகிய வீதிகள் மூடப்படும் என்று பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது.

மக்கள் விடுதலை முன்னணியின் மே தினக் கூட்டம் கொழும்பு பீ.ஆர்.சீ மைதானத்தில் இடம்பெறவுள்ளதால் சரணங்கர வீதி, பாமங்கடை சந்தி, ஸ்வேபட் மாவத்தை, ஹைலெவல் வீதி (கிருளபனையில் இருந்து டிக்மன் வீதி வரை) மூடப்பட்டிருக்கும் என பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸவின் நினைவு தினக் கூட்டத்தை முன்னிட்டு சிறிமாவோ பண்டாரநாயக்க மாவத்தை, சேத்தவன வீதி, ஆமர் பாபர் சந்தி, சுமனதிஸ்ஸ மாவத்தை, சங்கராஜ சுற்றுவட்டம், சங்கராஜ மாவத்தை, தொழிநுட்ப கல்லூரி சந்தி, சாந்த பஸ்தியம் கந்த வீதி, மிஹிது மாவத்தை, நீதிமன்ற வீதி என்பன மூடப்படும் என பொலிஸார் அறிவித்துள்ளனர்.

இவ்வாறு மே முதலாம் திகதி வீதிகள் மூடப்படவுள்ளதால் கொழும்புக்கு உள்நுழையும், கொழும்பில் இருந்து வெளியேறும் வாகன சாரதிகள் மாற்று வீதிகளை பயன்படுத்துமாறு பொலிஸார் கேட்டுக் கொண்டுள்ளனர். (ங)

# பொன்சேகாவின் சிறைவாசம் ஒருபோதும் குறைக்கப்படாது

## சிறைச்சாலை ஆணையாளர் திட்டவட்டம்

கொழும்பு, ஏப்.30

நன்னடத்தை அடிப்படையில் கைதிகளுக்கான சிறைத் தண்டனையைக் குறைக்கும் திட்டம் முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவுக்குப் பொருந்தாது என சிறைச்சாலைகள் ஆணையாளர் பி.டபிள்யூ.கொடிப்பிலி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது,

இராணுவ நீதிமன்றத்தின் கீழ் பொன்சேகா குற்றவாளியாக இனம்காணப்பட்டமையால் சாதாரண கைதிகளுக்கு வழங்கப்படுவது போன்று நன்னடத்தையின் அடிப்படையில் அவரது சிறைத்தண்டனை குறைக்கப்படமாட்டாது.

தனது மருமகனுக்கு தொடர்புள்ள நிறுவனத்திற்கு ஒப்பந்தமொன்றை வழங்கியுள்ளமைக்காக சரத் பொன்சேகாவுக்கு இராணுவ நீதிமன்றம் வழங்கிய 30 மாத கால தண்டனை 2010 ஒக்டோபர் மாதம் ஆரம்பமாகி 2013 மார்ச் மாதம் முடிவடைகிறது - என்றார்.



**இராணுவ நீதிமன்றத்தின் கீழ் பொன்சேகா குற்றவாளியாக இனம்காணப் பட்டமையே இதற்குக் காரணம்.**

நன்னடத்தை அடிப்படையில் பொன்சேகாவின் தண்டனைக்காலம் 24 மாதங்களாகக் குறைக்கப்பட்டு கடந்த வியாழக்கிழமையுடன் அவரின் தண்டனைக் காலம் முடிவடையும் எனப் புரவலாக எதிர்பார்க்கப்பட்டது. எனினும் அவர் விடுவிக்கப்படவில்லை. இதற்கான காரணத்தையே சிறைச்சாலை ஆணையாளர் தற்போது வெளிப்படுத்தியுள்ளார்.

வெள்ளைக்கொடி வழக்கிலும் பொன்சேகாவுக்கு 3 வருட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டு அவர் மேன்முறையீடு செய்துள்ள நிலையில் அவருக்குப் பிணை வழங்குமாறு கோரி கடந்த வியாழனன்று உயர் நீதிமன்றத்தில் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டது.

இதேவேளை, இந்த நிலைமை குறித்துக் கருத்துத் தெரிவித்த பொன்சேகாவின் சட்டத்தரணி நளின் லத்துவஹெட்டி, "பொன்சேகாவை இலக்குவைத்து புதிய வாதங்களை சிறைச்சாலை அதிகாரிகள் முன்வைக்கிறார்கள்.

இந்த வாதம் செல்லுபடியாகாது. ஏனெனில் அரசியலமைப்பின்படி இராணுவ நீதிமன்றமும் ஏனைய நீதிமன்றங்களைப் போன்றதாகும் என பொன்சேகாவின் ஒரு வழக்கில் உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது என அவர் கூறினார்.

இராணுவ நீதிமன்றத்தினால் குற்றவாளியாகக் காணப்பட்டு நன்னடத்தை அடிப்படையில் தண்டனைக் காலம் குறைக்கப்பட்ட ஏனைய கைதிகளை என்னால் இனங்காட்ட முடியும்"- எனவும் அவர் கூறினார்.(ங)

## சந்தேக நபர்கள் இருவர் கைது

இலங்கையர்கள் 269 பேரை கனடாவுக்கு அழைத்துச்செல்வதாகக் கூறி டோகோவில் அநாதரவாக்கிச் சென்ற சம்பவம் தொடர்பிலான பிரதான சந்தேக நபர்கள் இருவர் கொழும்பு மோசடி தவிர்ப்பு பிரிவின் அதிகாரிகளால் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் முக்கியமானவராகக் கருதப்படும் கிராண்ட்பாஸ் பிரதேசத்தைச் சேர்ந்த கந்தையா ஜெயராஜன் என்பவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டார். அவர்தெரிவித்த தகவலின் அடிப்படையில் இன்னொருசந்தேகநபரான கந்தையா பூபாலசிங்கம் எனப்படும் மோகன் ராஜ் என்பவர் வெள்ளவத்தை பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டார். இவர் மலேசியா, டோகோ, கினி, மாலி போன்ற நாடுகளுக்குச் செல்லும் இலங்கை அகதிகளை கப்பல் ஊடாக கனடாவிற்குக் கொண்டு செல்வதற்கான வசதிகளை மேற்கொள்பவராகச் செயற்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

யாழ்ப்பாணம் போகாதீங்க....!



யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ள எதிர்க்கட்சிகளின் மேதினக் கூட்டத்தில் கலந்து கொள்ளாமல், கொழும்பில் நடைபெறவுள்ள முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசவின் நினைவுதினக் கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு வலியுறுத்தி ஐக்கிய தேசியக் கட்சியின் மறுசீரமைப்புக் குழு கொழும்பில் நேற்றுத் துண்டுப்பிரசுரங்களை விநியோகம் செய்தது.

## மரக்கறிகளை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கு அரசு முடிவு

கொழும்பு, ஏப்.30

நாட்டில் தற்போது மிதமிஞ்சிய அரிசி மற்றும் மரக்கறிகள் உற்பத்தி செய்யப்படுகின்றன, இதனால் அவற்றைச் சந்தைப்படுத்த முடியாமல் விவசாயிகள் நஷ்டமடைந்து வருகிறார்கள். எனவே அவர்களுக்கு கூடுதல் வருமானத்தைப் பெற்றுகொடுக்கும் வகையில் அரிசி, மரக்கறி வகைகளை ஏற்றுமதி செய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன என்று பொருளாதார அருவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

அரசின் விவசாய அபிவிருத்தித் திட்டங்களின் விளைவாலேயே அதிகளவான விளைச்சலை விவசாயிகள் பெற்றுள்ளனர். எனினும் விளைச்சலுக்குரிய பயனை அவர்கள் பெறமுடியாதுள்ளனர். உள்ளூர்ச் சந்தைகளை விடவும் ஏற்றுமதி மூலம் விவசாயிகள் பயன்பெற முடியும். மேலதிகமாகவுள்ள உணவுப் பொருள்களை பதப்படுத்தும் திட்டம் மற்றும் வெளிநாட்டுச் சந்தைகளுக்கு அனுப்புதல் உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகளை அரசு முன்னெடுக்கவுள்ளது. பொதுமக்களால் வீட்டுத் தோட்டங்களில் மேற்கொள்ளப்படும் பயிர்ச்செய்கை காரணமாகவே அளவுக்கதிகமான உணவுப் பொருள்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன - என்றார்.(ங)

## அனுராதபுரத்தில் தேடுதல்; 17 பேர் நேற்றுக் கைது

கொழும்பு, ஏப்.30

அநுராதபுரம் - கல்நெவ - மக்குலான பிரதேசத்தில் நேற்று மேற்கொள்ளப்பட்ட விசேட சோதனை நடவடிக்கையின்போது பெண் ஒருவர் உட்பட 17 பேர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 17 ஆம் திகதி கல்நெவ பகுதியில் இடம்பெற்ற புதுவருட உற்சவத்தில் இரு குழுக்களுக்கு இடையில் இடம்பெற்ற மோதலில் ஒருவர் உயிரிழந்தார். இந்தத் மோதல் சம்பவத்துடன் தொடர்புடைய மூன்று சந்தேகநபர்கள் கடந்த 21ஆம் திகதி கைது செய்யப்பட்டனர்.

சம்பவத்தில் உயிரிழந்த நபரின் இறுதிக் கிரியை நடைபெற்றபோது தாக்குதல் நடத்தியதாகக் கூறப்படும் சந்தேக நபர்களின் வீட்டுக்கு இறந்தவரின் உறவினர்கள் அவரின் சடலத்தை எடுத்துச் சென்று அங்கு கலகத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது வீடுகளுக்கு சேதம் ஏற்படுத்தப்பட்டதுடன் வாகனங்களும் சேதமாக்கப்பட்டன.

இந்தச் சம்பவத்தை கட்டுப்படுத்தச் சென்ற பொலிஸார் ஐவர் மீதும் பொது மக்கள் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இது குறித்து சில நபர்களை நீதிமன்றில் முன்னிலையாகுமாறு அறிவித்தல் விடுத்திருந்த போதும் அவர்கள் அதனைப் புறக்கணித்ததாலேயே விசேட தேடுதலின் பின்னர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட 17 பேரும் நேற்று கெக்கிராவ நீதிமன்றில் முன்னிலைப் படுத்தப்பட்டனர். (ங)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆயுள்வேத மருந்து உற்பத்தி வடக்கில் பெரும் பின்னடைவு

## வைத்தியர் செல்வமகேந்திரன் கவலை



யாழ்ப்பாணம், ஏப்.30

*சித்த மருத்துவத்துக்கான மருந்து உற்பத்தியில் பெரிய பின்னடைவுகளை வடமாகாண சித்த வைத்தியர்கள் எதிர்கொண்டு வருகின்றனர்.*

*இதற்கு தீர்வு காணப்படவேண்டுமானால் மூலிகைத் தோட்டங்களை அமைத்து மருந்துப் பொருள்களை பெற்றுக் கொள்வதற்கான மேம்படுத்தல் நடவடிக்கைகளை சித்த மருத்துவத் துறை அமைச்சு மேற்கொள்ள வேண்டும்.*

சித்த ஆயுள்வேத பாதுகாப்புச் சபை இணையத்தின் தலைவர் வைத்திய கலாநிதி எஸ். செல்வமகேந்திரன் இவ்வாறு தெரிவித்தார்.

சித்த ஆயுள்வேத வைத்தியர்களுக்கான விசேட மாநாடு நேற்று யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் தலைமையுரையை நிகழ்த்தும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சித்த ஆயுள்வேத வைத்தியர்கள் தற்போது எதிர்கொள்கின்ற பிரச்சினைகள் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சித்த வைத்தியத்தை மேற்கொண்டு வரும் வைத்தியர்கள் பலர் வைத்தியத்துறையில் ஏற்பட்ட பின்னடைவு காரணமாக தொழில் துறையைக் கைவிட்டு விட்டனர்.

இது மீளக் கட்டியெழுப்பப்படவேண்டும் என்னும் நோக்குடனேயே வடமாகாண ஆயுள்வேத பாதுகாப்புச் சபையின் இணையத்தை ஆரம்பித்து வைத்துள்ளோம். இதன் முதற்படியாக இந்த மாநாட்டை நடத்துகின்றோம். தொடர்ந்தும் புத்தளத்தில் இதேபோல் மாநாடு ஒன்றை நடத்துவதற்கு திட்டமிட்டுள்ளோம் என்றார்.

இந்த நிகழ்வில் வடமாகாண ஆயுள்வேத பிரதிப் பணிப்பாளர் திருமதி சியாமளா துரைரத்தினம், கொழும்பு ஆயுள்வேத திணைக்கள வைத்திய கலாநிதி திருமதி. விக்கினவேணி செல்வநாதன் ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர்.

சித்த ஆயுள்வேத வைத்தியகர்களின் தற்போதைய பிரச்சினைகளை ஆராய்வது தொடர்பான இந்த மாநாட்டில் கலந்துகொண்ட வைத்தியர்களுக்கு மூலிகை மரக்கன்று ஒவ்வொன்று வழங்கப்பட்டது. அத்துடன் பிரதேச ரீதியாக பாரம்பரிய வைத்தியர்கள் கௌரவிக்கப் பட்டனர். (ம-14)

# தெல்லிப்பழை பிரதேச செயலக சித்திரைப் புத்தாண்டு நிகழ்வுகள்



வலி. வடக்கு, ஏப்.30

தெல்லிப்பழை. பொலிஸாரும் தெல்லிப்பழை பிரதேச செயலகமும் இணைந்து நடத்திய சித்திரைப் புத்தாண்டு விழா சனிக்கிழமை தெல்லிப்பழை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி லலித் வீரசிங்கா தலைமையில் மல்லாகம் மகா வித்தியாலய மைதானத்தில் இடம் பெற்றது.

காலையில் சைக்கிள் ஓட்டப் போட்டிகள், மரதன் ஓட்டப் போட்டிகளைத் தொடர்ந்து பல்வேறு போட்டிகளும் இடம் பெற்றன.

விருந்தினர்கள் மல்லாகம் பிள்ளையார் ஆலய முன்றிலில் இருந்து மங்கள வாத்தியத்துடன் அழைத்து வரப்பட்டனர். மகாஜனக் கல்லூரி அதிபர் எஸ்.வேல் சிவானந்தன், பொலிஸ் அத்தியட்சகர், 513 ஆவது படைகளின் மேஜர் ஜெகத்குமார மற்றும் நிர்வாகக் கிராம அலுவலர் கு. சாந்தமோகன் உட்பட ஏனைய விருந்தினர்களும் அழைத்து வரப்பட்டனர். தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கையம்மன் ஆலய பிரதம குரு எ.அகிலேஸ்வரக் குருக்கள் மங்கள விளக்கை ஏற்றி ஆசி வழங்கினார்.

வலைப்பந்தாட்டம், கபடி, கரப்பந்தாட்டப் போட்டிகளுடன் பொது மக்களுக்கான பலூன் உடைத்தல், முட்டி உடைத்தல், யானைக்கு கண்வைத்தல், கயிறு இழுத்தல், மெதுவான சைக்கிள் ஓட்டம், தேங்காய் துருவுதல் போட்டிகள் எனப் பல போட்டிகளும் இடம் பெற்றன.

போட்டிகளுக்கு பிரதம விருந்தினராக காங்கேசன்துறை பொலிஸ் அத்தியட்சகர் காமினி நவரட்ண கலந்து கொண்டதுடன் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில்களையும் வழங்கினார். (ம-86)

# விரயமாகும் குடிதண்ணீர் விசனத்தில் மட்டுவில் மக்கள்

தென்மராட்சி, ஏப்.30

பொது மக்கள் பாவனைக்குரிய நன்னீர்க் கிணற்றை பயிர்ச் செய்கைக்கு பயன்படுத்துவதால் மக்கள் குடிதண்ணீருக்கு அலையும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

மட்டுவில் வடக்கு லூர்து மாதா தேவாலயத்துக்கு அருகில் உள்ள மக்களின் குடிதண்ணீர் கிணறே இவ்வாறு பயன்படுத்தப்படுகிறது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மக்கள் தேவைக்காக சாவகச்சேரி கிராம சபையால் அமைக்கப்பட்ட பொதுக் கிணறு நீண்ட காலமாக அந்தப் பகுதி மக்களால் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

இந்தப் பொதுக் கிணறுக்கு அருகில் உள்ள தோட்டங்களுக்குச் சொந்தக்காரர் இந்த வருடம் தமது காணிகளில் தோட்டம் செய்வதற்காக இந்த கிணற்று நீரைப் பயன்படுத்தியுள்ளனர்.

தற்போது மூன்று வேளையும் நீரிறைக்கும் இயந்திரம் மூலம் நீர் எடுப்பதால் இந்த கிணற்றில் குடி தண்ணீர் பெற்ற மக்கள் வேறு இடத்துக்குச் சென்று தண்ணீர் பெறவேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

இந்த விடயத்தில் சாவகச்சேரிப் பிரதேச சபையினர் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம-9)

# இக்கட்டான சூழ்நிலையிலும் முன்னேறியுள்ள மானிப்பாய் இந்து

## ஆசியாவின் திட்டப் பணிகள் நிர்வாக இயக்குநர் திருக்குமார் நடேசன்

யாழ்ப்பாணம், ஏப்.30

30 வருட காலமாக நாட்டில் ஏற்பட்ட போரால் இக்கட்டான நிலைமையிருந்த போதும் மானிப்பாய் இந்துக் கல்லூரி எல்லாவற்றையும் எதிர்கொண்டு சிறப்பாக வளர்ந்து வந்திருக்கிறது. இன்று இது தேசியப் பாடசாலையாக வளர்ச்சி கண்டுள்ளது. இவ்வாறு ஆசியாவின் திட்டப் பணிகள் நிர்வாக இயக்குநர் திருக்குமார் நடேசன் தெரிவித்தார்.



மானிப்பாய் இந்துக் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா கல்லூரியின் மண்டபத்தில் நேற்று நடைபெற்றது. அதில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட உரையாற்றும்போது இதனைத் தெரிவித்தார்.

எவ்வாறான நிலை காணப்பட்டாலும் கல்வியைக் கைவிடாது முன்னேற வேண்டும். படித்த காரணத்தாலேயே இன்றும் நாம் நிமிர்ந்து நிற்கின்றோம். ஏனையவர்களை விட எமது பெற்றோரும் குருவும் நல்லவர்கள். எமது பிரதேசம், பாடசாலை சொர்க்கத்திலும் விட சுகமானது. எல்லாவற்றிலும்விட மேலானது.

இந்தப் பாடசாலை வைத்தியர்கள், பேராசிரியர்கள், இசைக் கலைஞர்கள், ஆசிரியர்கள் எனப் பல துறைசார்பான வர்களையும் உருவாக்கியுள்ளது.- என்று மேலும் கூறினார்.

கல்லூரி அதிபர் எஸ்.சிவனேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் சிறப்பு விருந்தினராக ஆளுநரின் செயலாளர் எல்.இளங்கோவனும் கௌரவ விருந்தினராக வலிகாமம் கல்வி வலயப் பணிப்பாளர் ஏ.ராஜேந்திரனும் பாடசாலை மட்ட, வலய, மாவட்ட, தேசியமட்டப்போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்குப் பரிசில்களை விருந்தினர்கள் வழங்கினர். (ம-4)

# உடுவில் பிரதேச அழகியல் கண்காட்சி



வலி. வடக்கு, ஏப். 30

வட மாகாண கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் ஆதரவுடன் வலி. தெற்கு உடுவில் பிரதேச செயலர் பிரிவின் மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் ஏற்பாட்டிலான தையல், மனையியல், அழகியல் கண்காட்சி வெள்ளிக்கிழமை கிராம அபிவிருத்தி அலுவலர் என். பஞ்சலிங்கம் தலைமையில் சுன்னாகம் கந்தரோடை வீதியில் அமைந்துள்ள அலுவலகத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக உடுவில் பிரதேச செயலர் மு.நந்தகோபாலன் கலந்துகொண்டு கண்காட்சியைத் திறந்து வைத்தார்.

பயிற்சி நெறியில் கலந்து கொண்டு சித்தி அடைந்தவர்களுக்கான சான்றிதழ்களை நிகழ்வில் விருந்தினர்களாகக் கலந்து கொண்ட உடுவில் உதவிப் பிரதேச செயலர் நேசரட்ணம் செல்வகுமாரி, உதவித் திட்டமிடல் பணிப்பாளர் திருமதி ரதி நகுலேஸ்வரன், மாவட்ட கிராம அபிவிருத்தித் திணைக்கள் அலுவலர் திருமதி நவமணி அலோசியஸ் ஆகியோர் வழங்கிக் கௌரவித்தனர். (ம-86)

# வடக்கில் அதிகரித்த சிறுவர் துஷ்பிரயோகம்: தடுப்பதற்கு கூடுதல் கவனம் எடுக்கப்படும்

## ஜனாதிபதியின் பணிப்பு என்கிறார் அனோமா திஸநாயக்க

யாழ்ப்பாணம், ஏப். 30

வட பகுதியில் பெரும் எண்ணிக்கையில் சிறுவர் துஷ்பிரயோகங்கள் நடைபெற்று வருகின்றன. இவ்வாறு வடக்கில் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் மீது அதிக கவனம் செலுத்துமாறு ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார்.

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தாலைவி அனோமா திஸநாயக்க இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் ஏற்பாட்டில் சிறுவர் பாதுகாப்பு பிரகடனப்படுத்தல் சத்தியப் பிரமாணமும், கையெழுத்திடலும் மற்றும் வறுமைப்பட்ட மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வும் யாழ். செயலக கேட்போர் கூடத்தில் இடம் பெற்றன. அந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நான் கடமையிலிருந்து ஓய்வு பெற்ற பின்னரும் சிறுவர்களுக்காக என்னால் முடிந்த உதவிகளை மேற்கொள்வேன்.

இன, மத, மொழி பேதமின்றி, பிரதேச அடிப்படை பேதமின்றி அனைத்து சிறுவர்களையும் எனது குழந்தைகள் போன்று அரவணைப்பேன். கடவுள் தந்த அரிய சொத்து சிறுவர்கள்.

இன்றைய சிறுவர்கள் எத்தனை பேருக்கு அரவணைப்பும், அன்பும் கிடைக்கின்றன. பெற்றோர்கள் சிறுவர்களை அன்போடு அரவணைக்க வேண்டும்.

இலங்கையின் சிறார்களின் தொடர்பில் யாழ். அரச அதிபர் முழுதாக செயற்பட்டு வருவது மகிழ்ச்சியைத் தருகிறது. ஒவ்வொரு அதிகாரிகளும் பொது மக்களும் சிறுவர்களின் எதிர் காலத்துக்காக உழைக்க வேண்டும். சமூகத்திலோ, அயல் வீடுகளிலோ சிறுவர் துஷ்பிரயோகங்கள் நடைபெற்றால் உடனே பொலிஸ் நிலையத்துக்குத் தெரியப்படுத்த வேண்டும்.

இலங்கை சிறுவர் உதவி தொலைபேசி சேவை 1929 எனும் இலக்கத்துக்கும் முறைப்பாடுகள் செய்ய முடியும்.- என்றார்.

இந்த நிகழ்வில் சிறுவர் துஷ்பிரயோகம் தடுப்பதற்காக ''தேசத்தின் பிள்ளைகளுக்காக மனசாட்சியின் உறுதி மொழி'' எனும் சத்தியப் பிரமாணமும் அனைத்து அரசு உத்தியோகத்தர்களாலும் எடுத்துக் கொள்ளப்பட்டது. (ம-13)

# நிகழ்வுகள் இன்று

**கலந்துரையாடல்**

அச்சுவேலி கைத்தொழில் பேட்டை முதலீட்டாளர்களுடனான கலந்துரையாடலும் முன்னேற்ற மீளாய்வும் பிற்பகல் ஒரு மணிக்கு யாழ். பொதுநூலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

**நிறைவுவிழா**

சுதுமலை தெற்கு அம்பாள் சனசமூக நிலையத்தின் 43 ஆவது ஆண்டு நிறைவு விழா பிற்பகல் ஒரு மணிக்கு மேற்படி நிலைய விளையாட்டு அரங்கில் நிலையத் தலைவர் இ.மனோகரன் தலைமையில் நடைபெறும். பிரதம விருந்தினராக வலி. தென்மேற்குப் பிரதேச சபையின் மானிப்பாய் உப அலுவலக பொறுப்பதிகாரி ஆர். செல்வகுமார் கலந்து கொள்வார். (ம-100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கைத் தூதரகத்தின் முன் இன்று முற்றுகைப் போராட்டம்

### வைகோ அறிவிப்பு

சென்னை, ஏப்.30



இலங்கையில் தம்புள்ளயில் முஸ்லிம்களின் பள்ளிவாசல் இடிக்கப்பட்டதைக் கண்டித்து சென்னையில் உள்ள இலங்கைத் தூதரகத்தை இன்று முற்றுகையிட்டுப் போராட்டம் நடத்தப் போவதாக ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இலங்கையில் தமிழர்களின் வழிபாட்டுத் தலங்களை, இலங்கை அரசு தாக்கியளிப்பது பல ஆண்டுகளாகத் தொடர்கதையாக நடந்தேறி வருகிறது.

இலங்கையை தனி பௌத்த நாடாக மட்டுமே உருவாக்குவதற்கே இத்தகைய வழிபாட்டுத் தலங்கள் மீதான தாக்குதல்களை சிங்கள அரசு மேற்கொண்டு வருகிறது. ஆரம்பத்தில் தமிழர்களின் வழிபாட்டுத் தலங்கள் மீது கைவைத்த அரசு இப்போது முஸ்லிம் சகோதரர்களின் மத உணர்வையும் சிதைக்கத் தொடங்கிவிட்டது. அதன் ஒரு கட்டமாகவே தம்புள்ள பள்ளிவாசல் மீதான தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

தமது புனித பிரதேசத்தில் வேறு மதத்தவர்களின் வழிபாட்டுத் தலங்கள் இருக்கக் கூடாது என்று தெரிவித்து கடந்த 20ஆம் திகதி தம்புள்ள என்ற இடத்தில் உள்ள பள்ளிவாசலை 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட புத்த பிக்குகள் முற்றுகையிட்டு ஆயுதங்களால் இடித்துள்ளனர்.

இதற்கு கண்டனம் தெரிவிக்கும் வகையில் ஏப்ரல் 30ஆம் திகதி (இன்று) சென்னையில் உள்ள இலங்கைத் துணைத் தூதரகத்தை முற்றுகையிடும் போராட்டத்தை மனிதநேய மக்கள் கட்சி நடத்த உள்ளது. இந்தப் போராட்டத்தில் ம.தி.மு.கவும் பங்கேற்கும்- என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ங)

## துப்பாக்கிக் கொள்ளையர்களால் முறிகண்டியில் பெரும் பதற்றம்

01↘ வீட்டு அறைக்குள் அடைத்தனர். பின் னர் வீட்டைச் சல்லடை போட்டுத் தேடுதல் நடத்தி அங்கிருந்த பணம், நகை உட்பட பெறுமதியான பொருள்களைக் கொள்ளையிட்டுள்ளனர்.

அதன்பின்னர் வீட்டிலுள்ளோரிடம் கிறீம் ஹவுஸ் திறப்பை வாங்கி, அதனைத் திறந்து அங்கிருந்த 80 ஆயிரம் ரூபா பணம் மற்றும் சுமார் 10 ஆயிரம் ரூபா பெறுமதியான கைத் தொலைபேசி மீள்நிரப்பு அட்டைகள் போன்றவற்றையும் கொள்ளையடித்துவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

தப்பிச் செல்லும்போது கொள்ளையர்கள் வீட்டிலிருந்த தொலைபேசிகளைப் பறிமுதல் செய்து அதன் பற்றரிகளைக் கழற்றிவிட்டு வீட்டுக்கு அருகிலுள்ள பிறிதொரு இடமொன்றில் எறிந்துவிட்டு சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சம்பவ இடத்துக்கு விரைந்த மாங்குளம் பொலிஸாரும் இராணுவத்தினரும் அப்பகுதியைச் சுற்றிவளைத்து தீவிர தேடுதலை நடத்தியதுடன் இதுகுறித்த விசாரணைகளையும் மேற்கொண்டனர்.

ஏ.கே. 47 ரகத் துப்பாக்கிகளுடன் ஏ-9 பிரதான வீதியோரமாகவுள்ள வீட்டுக்குள் புகுந்து நடத்தப்பட்ட இந்தக் கொள்ளையால் அப்பகுதியெங்கும் நேற்றுப் பெரும் பதற்றம் நிலவியது. (ங-15-426)

# நெடுந்தீவை விடுவியுங்கள்

01↘ கோரிக்கையை மக்கள் அவரிடம் முன்வைத்தனர். இதன்போது பொதுமக்கள் ரணிலிடம் தெரிவித்தவை வருமாறு:


ஜனநாயக விரோத செயற்பாடுகளில் தொடர்ச்சியாக ஈடுபட்டு வரும் கட்சி ஒன்று நெடுந்தீவைத் தனது கோட்டையாக வைத்துக் கொண்டு மக்களை அடிமை போல நடத்தி வருகிறது. இங்கு ஜனநாயகம் என்பது துளியளவும் இல்லை. குறித்த கட்சியின் உத்தரவுகளை மீறுபவர்கள் பழிவாங்கப்படுகிறார்கள். இதனால் நெடுந்தீவில் மக்கள் பீதியுடனேயே வாழ்கின்றார்கள்.

ஜனநாயகச் செயற்பாடுகளுக்காக இங்கு மாற்று அரசியல் கட்சிகள் வருவதைக் கூட அவர்கள் தடை செய்துள்ளனர். அதையும் மீறி வரும் கட்சிகள் மீது கடும் அழுத்தங்களை அவர்கள் மேற்கொள்வார்கள். இன்று எதிர்க்கட்சித் தலைவரான நீங்கள் பயணிப்பதற்குக் கூட எவரும் வாகனங்களை கொடுக்கக் கூடாது என்று எம்மில் பலர் மிரட்டப்பட்டனர். இவ்வாறு அவர்களின் சொற்படி தலையாட்டும் மந்தைகளாகவே எம்மை நடத்துகிறார்கள். இல்லாவிட்டால் பயங்கரமான விளைவுகளை சந்திக்க வேண்டி இருக்கும் என்று எச்சரிக்கிறார்கள். இப்போது இந்த உண்மைகளை உங்களிடம் தெரிவித்ததால் சில வேளைகளில் வெள்ளை வானிலோ அல்லது வெள்ளைப் படகிலோ நாங்கள் கடத்தப்படும் நிலையும் ஏற்படலாம். - என்றனர்.

இதற்குப் பதிலளித்த ரணில் விக்கிரமசிங்க தெரிவித்ததாவது,

வடக்கில் குறிப்பாக நெடுந்தீவில் அரசியல் கட்சி ஒன்று மக்கள் மீது அடக்குமுறைகளைப் பிரயோகித்து வருவதை நானும் அறிவேன். இங்கு ஜனநாயக விரோத செயற்பாடுகளில் அந்தக் கட்சி இறங்கியுள்ளது. கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையிலும் இந்த விடயம் தொடர்பாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஜெனிவா மாநாட்டிலும் இது பதிவு செய்யப்பட்டுள்ளது. மக்கள் சுதந்திரமாக நடமாட முடியாத நிலைமையை நீக்க வழி செய்யுமாறு நெடுந்தீவுப் பொலிஸ் அதிகாரியின் கவனத்துக்கு கொண்டு வரவுள்ளேன். நாடாளுமன்றத்திலும் இது பற்றி நான் தொடர்ந்தும் குரலெழுப்புவேன்.

வடக்கில் அபிவிருத்தி இடம்பெறுகிறது என்று வெற்றுப் பேச்சுக்காக மட்டும் கூறுவதை விடுத்து, உண்மையான அபிவிருத்தி இடம்பெற அரசு செயலாற்ற வேண்டும். தற்போது மேற்கொள்ளப்படும் அபிவிருத்தித் திட்டங்களில் பல்வேறு குறைபாடுகள் காணப்படுகின்றன. எதிர்க்கட்சிகள் மற்றும் மக்களின் ஆலோசனைகளை மதிக்காது மேற்கொண்டதாலேயே இந்தத் திட்டங்கள் குறைபாடுகளுடன் காணப்படுகின்றன. மக்களை ஒன்றிணைப்பதன் மூலமே உண்மையான அபிவிருத்தியை அடைய முடியும்.



நயினாதீவு விகாரையில் ரணில் விக்கிரமசிங்க

தென்பகுதி மக்களுக்கு உள்ள சுதந்திரம், உரிமையை வட பகுதி மக்களும் அனுபவிக்கவேண்டும். அதற்காகத் தான் மஹிந்த ராஜபக்ஷ என்ற அராஜக அரசுக்கு எதிராக மேதின ஆர்ப்பாட்டத்தை யாழில் நடத்துகின்றோம்.

நான் வடபகுதிக்கு அடிக்கடி வந்து செல்வதால் எனக்கும் பயங்கரவாதிகளுக்கும் தொடர்பு இருப்பதாக தென்னிலங்கையில் அரசு கதை கட்டி விடுகிறது. இதன்மூலம் இங்குள்ள மக்கள் அனைவருக்கும் பயங்கரவாதிகள் என்ற சாயத்தை அரசு பூசுவதன் மூலம் தென்பகுதி மக்களிடையே இனத்துவேசத்தை வளர்த்து மீண்டும் ஒரு இனக்கலவரத்தை உருவாக்க அது முனைகிறது.

தற்போதுள்ள விலையேற்றத்தை சமாளிக்கக் கூடிய வகையில் சம்பள உயர்வு, மக்களது வாழ்வாதாரம் உயர்த்தப்பட வேண்டும். இல்லையேல் இன்னும் இரு மாதங்களுக்குள் எதிர்க்கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைந்து நாடு முழுவதும் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடவுள்ளன.

சகல இன மக்களும் ஏற்றுக்கொள்ளக்கூடிய அரசியல் தீர்வு என்பது நாடாளுமன்ற தெரிவுக்குழு மூலமே பெறப்பட வேண்டும். நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் எதிர்க்கட்சிகள் இடம்பெற வேண்டுமாயின் அந்தக் குழுவில் அதற்கான சாதகமான நிலைமை ஏற்படுத்தப்பட வேண்டும்.

நாடாளுமன்றத் தெரிவுக்குழு மூலம் மஹிந்த அரசு தமிழ்த்தேசியக் கூட்டமைப்புடன் பேசியே இனப் பிரச்சினைக்கான தீர்வை எட்ட முடியும். - என்றார்.

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் நெடுந்தீவுப் பயணத்தில் ஐக்கியதேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான திஸ்ஸ அத்தநாயக்க, ரவி கருணாநாயக்க, திருமதி விஜயகலா மகேஸ்வரன் ஆகியோரும் கலந்து கொண்டனர். (ங-3)

## தமிழீழ ஆதரவு கூட்டம் இன்று

01↘ யில் நடைபெற உள்ளது.

இந்த கூட்டத்தில் டெசோ அமைப்பின் உறுப்பினர்களான தி.மு.க. பொதுச்செயலாளர் பேராசிரியர் க.அன்பழகன், திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி, திராவிடர் இயக்க தமிழர் பேரவைத் தலைவர் சுப.வீரபாண்டியன், சுப்புலட்சுமி ஜெகதீசன் ஆகியோர் பங்கேற்கின்றனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

டெசோ அமைப்பை மீண்டும் புத்துயிர் பெறச் செய்து அதன்மூலம் அகிம்சை ரீதியில் போராடி ஈழத் தமிழர்களுக்கு தமிழீழத்தைப் பெற்றுக் கொடுப்பேன் என்று அண்மையில் தி.மு.க. தலைவர் கருணாநிதி தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ங)

## நேரடிப் பேச்சு தோல்வியுற்றால் அரசிலிருந்து வெளியேறுவோம்

01↘ விடயம் என்பதால் மக்களின் விருப்பத்திற்கு எதிராக எந்தவொரு அரசியல் தீர்மானத்தையும் தம்மால் எடுக்கமுடியாது என்று அவர் மேலும் கூறினார்.

அந்த முக்கியஸ்தர் மேலும் கூறுகையில்,

தம்புள்ள பள்ளிவாசல் மீதான தாக்குதல் இலங்கை முஸ்லிம்கள் அனைவரையும் ஆத்திரமடையச் செய்துள்ளது. பள்ளிவாசலை அந்த இடத்தில் இருந்து அகற்ற வேண்டுமென்ற பௌத்த தேரர்களின் கோரிக்கையை எந்தவொரு முஸ்லிமும் ஏற்கவில்லை.

முஸ்லிம்களின் ஒட்டுமொத்த விருப்புகளை நிறைவேற்றுவதற்காகத்தான் அவர்கள் அரசியல் பிரதிநிதிகளைத் தெரிவுசெய்துள்ளனர்.

அந்த மக்களின் விருப்புகளை அவமதித்து எந்தவொரு பிரதிநிதியாலும் செயற்பட முடியாது.

இந்த விடயத்தில் முஸ்லிம்களின் விருப்பு, வெறுப்புகளை மதித்துத்தான் முஸ்லிம் காங்கிரஸ் செயற்படும்.

அந்த அடிப்படையில் ஹக்கீமுக்கும் ஜனாதிபதிக்குமிடையிலான சந்திப்பின்போது எமக்குச் சாதகமான வகையில் தீர்ப்புக்கிடைக்காவிட்டால் முஸ்லிம் காங்கிரஸின் உயர்பீடத்தைக்கூட்டி அரசில் இருந்து விலகுவது பற்றிப் பரிசீலிக்கப்படும் - என்றார்.

## ஹக்கீமுடன் மஹிந்த நேற்று தொலைபேசியில் அவசரபேச்சு

01↘ முஸ்லிம் மக்களின் மனநிலைமை, தாக்கம் என்பன பற்றி இந்தத் தொலைபேசி உரையாடலின் போது ஜனாதிபதிக்கு சிறு விளக்கமொன்றை அளித்திருக்கும் அமைச்சர் ஹக்கீம், இவை குறித்து விரிவாக ஜனாதிபதியுடன் நேரடிப் பேச்சு நடத்த வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

அமைச்சர் ஹக்கீமின் வேண்டுகோளை ஏற்ற ஜனாதிபதி, இன்று அல்லது நாளைய தினம் தம்மைச் சந்திக்குமாறு தெரிவித்திருக்கிறார். ஜனாதிபதிக்கும் ஹக்கீமுக்கும் இடையிலான இந்தச் சந்திப்பானது மிக முக்கியமானதாக இருக்குமென்று அரசியல் வட்டாரங்களில் எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேவேளை, தம்புள்ள பள்ளிவாசல் விடயம் குறித்தும் அந்தப் பிரச்சினையை எவ்வாறு தீர்ப்பது என்பது பற்றியும் முன்னதாகத் தமது ஆலோசகர்களுடன் ஜனாதிபதி மஹிந்த பேச்சுகளை நடத்தியுள்ளார் என நம்பகரமாக அறிய முடிகின்றது.

## 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்த இந்தியா அழுத்தம் கொடுக்க வேண்டும்

01↘ கிழக்கில் இராணுவப் பிரசன்னம், உயர்பாதுகாப்பு வலயங்கள் உட்பட முக்கிய பல விடயங்கள் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

அத்துடன், மேற்கூறப்பட்ட விடயங்கள் தொடர்பில் இலங்கை அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், மத்திய அரசு கொழும்புக்கு அழுத்தம் கொடுக்கவேண்டும் என்றும், இலங்கைக்குப் பயணம் செய்த காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அறிக்கை வாயிலாகப் பிரதமரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இலங்கை விவகாரம் தொடர்பில் பிரதமரிடம் அறிக்கை கையளிக்கப்பட்டமை குறித்து உதயனிடம் கருத்து வெளியிட்ட காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் சுதர்சன நாச்சியப்பன் கூறியவை வருமாறு:-

''13ஆவது அரசமைப்புத் திருத்தத்தை நடைமுறைப்படுத்தும் விவகாரம் தொடர்பில் இலங்கை அரசும், கூட்டமைப்பும் மீண்டும் பேச்சுகளை ஆரம்பிக்க வேண்டும். இதற்கு இந்தியா ஒத்துழைப்புகளை நல்க வேண்டும் என நாம் பிரதமருக்கு கையளித்த அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளோம்.

வடக்கு, கிழக்கில் இராணுவப் பிரசன்னத்தை முற்றாக நீக்கி, அங்கு பாதுகாப்புக் கடமையில் பொலிஸார் அமர்த்தப்படவேண்டும் என்றும், நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளை இலங்கை அரசு முழுமையாக அமுல்படுத்தவேண்டும் என்றும் அதில் குறிப்பிட்டுள்ளோம்.

அத்துடன், உயர் பாதுகாப்பு வலயங்கள் என்ற பெயரில் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள மக்களின் காணிகள் விடுவிக்கப்படவேண்டும் என்ற விடயம் உட்பட இலங்கையின் சமகால நிலைவரங்கள் குறித்தும் நாம் தெளிவுபடுத்தியுள்ளோம்.

இந்த விடயங்களை இலங்கைஅரசுஉரியவகையில் செய்து முடிப்பதற்கு மத்திய அரசு அழுத்தம் கொடுக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளோம் எனக் குறிப்பிட்டார் சுதர்சன நாச்சியப்பன்.

அதேவேளை, இலங்கைக்கு விஜயம் செய்து நிலைவரங்களை ஆராய்ந்த இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவை பிரதமர் மன்மோகன் சிங் இந்த வாரத்துக்குள் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவுக்குத் தலைமை வகித்த எதிர்க்கட்சித் தலைவி சுஷ்மா சுவராஜ், இலங்கையின் நிலைவரம் குறித்து லோக்சபாவில் தெளிவுபடுத்தியிருந்தாலும், அவர் இன்னும் இலங்கை விடயம் குறித்தான அறிக்கையைப் பிரதமருக்கு உத்தியோகபூர்வமாகக் கையளிக்கவில்லை. எனவே, இந்தச் சந்திப்பின்போது அவர் கையளிப்பார் எனத் தெரிய வருகின்றது.

கடந்த 16ஆம் திகதி இலங்கைக்கு வந்த இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு இங்கு அரசியல் கட்சிகளின் பிரதானிகளைச் சந்தித்துப் பேசியது. அத்துடன், வடக்கு, கிழக்கு, தெற்கு, மலையகம் ஆகிய பகுதிகளுக்கு நேரடியாகவே விஜயம் செய்து நிலைமைகளை ஆராய்ந்ததும் தெரிந்ததே. (ங-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்


## ஜெனிவாத் தீர்மானத்தின் வழித்தடம்...

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிரான தீர்மானம் நிறைவேற்றப்பட்டவேளை, அது இலங்கை அரசைக் கட்டுப்படுத்தாது என்று அரச தரப்பில் தெரிவிக்கப்பட்டது. ஆனால், தீர்மானம் நிறைவேற்றப்பட்டு ஒரு மாதம் நிறைவேறிய நிலையில், நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளை செயற்படுத்துவது தொடர்பான நிகழ்ச்சித் திட்டம் ஒன்றை அமெரிக்கா கோரி உள்ளது. இந்த விவகாரம், ஜெனிவாவோடு முடிந்தவிடயம் அல்ல என்பதை இது கோடி காட்டுகிறது எனலாம்.

போர் முடிவுற்று மூன்று வருடங்கள் பூர்த்தி அடையும் மே 18ஆம் திகதி, அமைச்சர் பீரிஸ் தலைமையில் சஜின்வாஸ் குணவர்த்தன, நாமல் ராஜபக்ஷ, லலித் வீரதுங்க ஆகியோர் அமெரிக்கா சென்று-

அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் ஹிலாரி கிளின்டனுடனும், இலங்கையின் மனித உரிமைகள் விவகாரத்தை மிகவும் உன்னிப்பாக அவதானித்துவரும் அமெரிக்க உயர் அதிகாரிகளான சர்வதேச போர்க் குற்றங்கள் தொடர்பான விவகாரங்களைக் கையாளும் அமெரிக்க நிபுணர் ஸ்ரீபன் ராப், ஐ.நாவுக்கான அமெரிக்காவின் நிரந்தரப் பிரதிநிதி சூசன் ஈரைஸ், சிவிலியன் பாதுகாப்பு, ஜனநாயகம் மற்றும் மனித உரிமைகளுக்கான அமெரிக்க உதவிச் செயலாளர் மரியா ஒரேரோ உட்படப் பலரைச் சந்திக்க இருப்பது இலங்கை மீதான அமெரிக்க அழுத்தங்களின் அறிகுறியே; ஒரு வகையில் ஆரம்பமே.

அமைச்சர் பீரிஸ் தலைமையிலான குழுவினர் அமெரிக்கா செல்லும்போது நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தும் இலங்கையின் நிகழ்ச்சித் திட்டத்தை ஹிலாரி கிளின்டனிடம் கையளிக்க வலியுறுத்தப்பட்டுள்ளது. அது மட்டுமன்றி, பீரிஸின் பயணத்துக்கு ஒரு வாரத்துக்கு முன்பதாக, அதனைக் கொழும்பிலும் பகிரங்கமாக வெளியிடுமாறு ஒபாமா நிர்வாகம் இலங்கை அரசிடம் கோரி உள்ளது. அமெரிக்காவையும் மேற்குலக நாடுகளையும், இலங்கை வெளிப் படையாகக் கண்டித்தாலும், அந்த நாடுகளை அனுசரித்துப்போக வேண்டிய அவசியமும் தேவையும் உள்ளன.

நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையில், இனப்பிரச்சினை, நல்லாட்சி, போரின் இறுதியில் இடம்பெற்றதாகக் கூறப்படும் சம்பவங்களுக்குப் பொறுப்புக் கூறல் ஆகிய மூன்று முக்கிய பிரதான அம்சங்கள் அடங்கி உள்ளன.

அவற்றில் மூன்றாவது விடயத்திலேயே அமெரிக்கா அதிக கவனத்தை அழுத்திச் செலுத்தி வருகிறது.

நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை, போரின் இறுதிப் பகுதியில் இடம்பெற்றதாகக் கூறப்படும் சம்பவங்களுக்குப் பொறுப்புக்கூறும் விடயத்தில், நிலைமையை திருப்திகரமாக வெளிக்கொணரவில்லை என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது. மொத்தத்தில், ஆணைக்குழுவின் அறிக்கை, ஒரு விதத்தில், இலங்கைக்கு இக்கட்டான நிலைமையை ஏற்படுத்தியுள்ளது என்றும் கருதலாம்.

ஜெனிவாவில் இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை அமெரிக்காவே கொண்டு வந்தது என்பதனை இலங்கை அரசு மறந்துவிடக்கூடாது. தனது தீர்மானத்தை நடைமுறைப் படுத்துவதற்கான அழுத்தங்களை, இலங்கை அரசு மீது செலுத்துவதற்கு, அமெரிக்கா உறுதியுடன் இருக்கிறது. அமைச்சர் பீரிஸின் அமெரிக்க பயணம் இதனைப் புலப்படுத்துகிறது.

ஜெனிவாத் தீர்மானம் எந்த ஒரு நாட்டையும் கட்டுப் படுத்தாது. ஆனால் அமெரிக்கா போன்ற ஒரு பலம் வாய்ந்த நாடு இதில் அக்கறை கொண்டுள்ளதை இலங்கை மறந்து விடுவது புத்திசாலித்தனமல்ல. அமெரிக்கா அழைக்கும்போது, அமைச்சர் பீரிஸ் நிகழ்ச்சித் திட்டத்துடன் போகிறார் என்றால், அதனை நடைமுறைப்படுத்துவதில் அமெரிக்கா மிகவும் அக்கறையுடனும் உறுதியுடனும் இருக்கிறது என்பதனை இலகுவில் புரிந்துகொள்ளலாம்.

போர்க் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் உரிய, உகந்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதில் அமெரிக்கா அதீத அக்கறை காட்டுவதைப் புரிந்து கொண்டு -

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் விசாரணைகளின் போது வெளிப்படுத்தப்பட்ட மனித உரிமை மீறல்கள் தொடர்பான குற்றச்சாட்டுக்கள் குறித்து விசாரிக்கப்படும் என்று அமைச்சரவையின் சட்ட ஆலோசகரும் முன்னாள் பிரதம நீதியரசருமான மொஹான் பீரிஸ் அதிரடியாகத் தகவல் வெளியிட்டிருக்கிறார்.

நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ள அனைத்து மனித உரிமை மீறல்கள் தொடர்பாகவும், சட்ட மா அதிபர் திணைக்களம் தனித்தனியாக ஆராயும். குற்றம் இழைத்தவர்கள் என்று கண்டறியப்படுவோர் மீது, வழக்குத் தொடரப்படும் -

படையினர் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டதற்கு ஆதாரங்கள் இருப்பின், இராணுவத் தளபதிக்கு நேரடியாக முறைப்பாடு செய்யலாம். குற்றச்சாட்டுக்கள் உண்மை எனக் கண்டறியப்பட்டால் சம்பந்தப்பட்டவர்கள் மீது வழக்குத் தொடரப்படும் -

மொஹான் பீரிஸ் இவ்வாறு உறுதி அளித்துள்ளார்.

வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ், அமெரிக்கா செல்வதற்கு முன்பாக, அமைச்சரவையின் சட்ட ஆலோசகர் மொஹான் பீரிஸ் விழுந்தடித்துக்கொண்டு, நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபார்சுகள் குறித்து அரசு நடவடிக்கை எடுக்கும் என்று கூறுவது, அமெரிக்காவை ஆசுவாசப் படுத்துவதற்கான முன் முயற்சி என்பதில் சந்தேகமில்லை.

அமெரிக்காவுடன் முரண்டுபிடிப்பதை விட, அதனை அண்டிப்போவது எல்லாம் நன்மைக்கே என்பதனை புலப்படுத்துவதாகவும் இதனைக் கருதலாம்.



# வடக்குப் பாடசாலைகளின் சித்தி வீதம் உயர வேண்டும்

### கல்வி அதிகாரிகளுக்கு அறிவுறுத்து

யாழ்ப்பாணம்,ஏப்.30

எதிர்வரும் சாதாரண தரப் பரீட்சையில் வட பகுதியிலுள்ள சகல பாடசாலைகளதும் சித்தி வீதம் 60 இற்கு மேற்பட்டதாக இருக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

வலயக் கல்விப்பணிப்பாளர்கள், பாட ரீதியான உதவிக் கல்விப்பணிப்பாளர்கள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் இந்த இலக்கை எட்டுவதை உறுதி செய்ய வேண்டியவர்கள்.

முன்னணிப் பாடசாலைகளின் சித்தி வீதம் 80 இற்கு மேற்பட்டதாக இருக்க வேண்டும்.

கல்வி அதிகாரிகளுக்கு இந்த அறிவுறுத்தல்கள் விடுக்கப்பட்டுள்ளன.

கடந்த வருட சாதாரண தரப் பரீட்சை முடிவுகள் தொடர்பாக ஆராய்வுக் கூட்டம் ஒன்று யாழ். பிராந்திய சுகாதார திணைக்கள கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் வடக்கு மாகாண ஆளுநர், கல்வி அமைச்சின் வடக்கு மாகாண செயலாளர், மாகாணக் கல்விப் பணிப்பாளர் உள்ளிட்ட கல்வி அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

இதன் போது கடந்த வருட சாதாரண தரப் பரீட்சை முடிவுகளின் வீழ்ச்சிக்கான காரணங்கள் தொடர்பாகக் கல்வி வலயம் ரீதியாக ஆராயப்பட்டது. அத்துடன் இதற்கான தீர்வு குறித்தும் ஆராயப்பட்டது.

மாணவர்களுக்கு விசேட வகுப்புகள் நடத்துதல், அலகுப் பரீட்சைகள், மாதாந்தப் பரீட்சைகள், கடந்த கால வினாத்தாள் பயிற்சிகள், பெற்றோர் சந்திப்புகள் நடத்துதல் போன்றன தொடர்பாக ஆராயப்பட்டது.

இவ்வாறான செயற்திட்டங்ளை முன்னெடுத்து வடபகுதியிலுள்ள பாடசாலைகளில் சித்தி வீதம் 60 இற்கு கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். முன்னணிப் பாடசாலைகளின் சித்தி வீதம் 80 இற்கு மேற்பட்டதாக இருக்க வேண்டும். இந்த இலக்குகள் எட்டப்பட வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

இந்த இலக்கை எட்டுவதற்கு பொறுப்புக் கூறவேண்டியவர்கள் உரிய முறையில் தமது வேலைதிட்டத்தை முன்னெடுக்க வேண்டும்.

இலக்கு உரிய முறையில் எட்டப்படுமானால் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளின் செயலாற்றுகை மதிப்பீட்டின் போது புள்ளிகள் வழங்கப்படும் எனவும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. (ம-3-5)

# சர்வதேச நீதிமன்ற நீதிபதியாக இந்திய நீதிபதி தல்வீர் பண்டாரி

இருபது ஆண்டுகளுக்குப் பிறகு சர்வதேச நீதிமன்ற நீதிபதியாக, இந்திய நீதிபதி தல்வீர் பண்டாரி தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

ஐ.நாவின் சர்வதேச நீதிமன்றம் நெதர்லாந்தில் உள்ள ஹோக் நகரில் உள்ளது. இந்த நீதிமன்றத்தின் நீதிபதிகளை தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் நடந்தது.

இதில் இந்தியாவின் சார்பில் முன்னாள் உச்ச நீதிமன்ற நீதிபதி தல்வீர் பண்டாரி போட்டியிட்டார். இவரை எதிர்த்து பிலிப்பைன்ஸ் நீதிபதி புளோரின்டினோ பெலிசியானோ போட்டியிட்டார்.

ஐ.நா. பொதுச் சபையில் நடந்த தேர்தலில், 122 வாக்குகள் மற்றும்



ஐ.நா. பாதுகாப்பு ஆணைக் குழுவில் உள்ள 15 பேரில் 13 பேரின் வாக்குகளை தல்வீர் பண்டாரி பெற்று வெற்றி பெற்றார்.

புளோரின்டினோ 58 வாக்குகள் பெற்றார். இதன் மூலம் 20 ஆண்டுகளுக்கு பிறகு சர்வதேச நீதிமன்ற நீதிபதியாக, இந்திய நீதிபதி ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது.

இதற்கு முன் கடந்த 1988ஆம் ஆண்டு முதல் 1990ஆம் ஆண்டு வரை உச்ச நீதிமன்ற முன்னாள் தலைமை நீதிபதி ஆர்.எஸ்.பதக், சர்வதேச நீதிமன்ற நீதிபதியாக பணியாற்றி உள்ளார்.

தற்போது 64 வயதாகும் நீதிபதி தல்வீர் பண்டாரி, 20 ஆண்டுகளுக்கு மேலாக நீதித் துறையில் பணியாற்றிய அனுபவம் உள்ளவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ம)

# 16 வயதுக்கு உட்பட்ட சிறுமிகள் துன்புறுத்தப்படுவது அதிகரிப்பு

உலகளாவிய ரீதியில் 16 வயதுக்கு உட்பட்ட சிறுமிகள் துன்புறுத்தப் படுவது அதிகரிக்கப்பட்டுள்ளது.

60 சதவிகிதமான பாலியல் வன்முறைகள் 16 வயதுக்கு உட்பட்ட சிறுமிகளின் மீதே மேற்கொள்ளப்படுகின்றன என்ற அதிர்ச்சித் தகவல் வெளியாகி உள்ளது.

ஐ.நாவில் குடித்தொகை நிகழ்ச்சித் திட்டங்களைக் கண்காணித்தல், கட்டிளமைப் பருவத்தினர் மற்றும் இளைஞர் மீதான விசேட கவனம் என்னும் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.

இந்த அறிக்கையில்:-

மில்லியன் கணக்கான பெண் பிள்ளைகள் தேவையற்ற கர்ப்பம், பாதுகாப்பு, கருக்கலைப்பு, இதனால் ஏற்படும் நோய்கள் என்பது குறித்து அறியாமல் உள்ளனர்.

இதன் காரணமாக 2008ஆம் ஆண்டில் வளர்ச்சியடைந்து வரும் நாடுகளில் 15- 19 வயதுப் பெண்களிடையே மூன்று மில்லியன் பாதுகாப்பற்ற கருக்கலைப்புகள் நடந்துள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பிரச்சினைகள் வளர்ந்து வரும் நாடுகளில் இன்னும் பெரிய சவாலாக உள்ளன என்று ஐ.நா. மக்கள் தொகை நிதியத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் பிபாதுண்டே ஒஸோதிமிஹின் கூறியுள்ளார். (ம)

# சங்கிலி அபகரிப்பு

மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் நடு வீதியில் வைத்து 55 வயதுப் பெண்ணின் தங்கச்சங்கிலியை அறுத்துக் கொண்டு தப்பிச் சென்றார்கள்.

இந்தச்சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது:-

மந்திகையிலிருந்து கொடிகாமம் வீதியால் குறித்த பெண் வெள்ளிக் கிழமை மாலை 4 மணியளவில் வீடு நோக்கிச் சென்று கொண்டிருந்தார்.

அவ்வேளை ஒரு மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் அப்பெண்ணைக் கடந்து சென்றுள்ளார்கள். சிறிது தூரம் சென்ற பின்னர் ஒருவர் மோட்டார் சைக்கிளால் இறங்கி கைத்தொலைபேசியில் கதைப்பது போல் நின்றுள்ளார். நடந்து சென்ற பெண் அவர்களை நெருங்கிச் சென்ற போது, இறங்கி நின்றவர் திடீரெனப் பாய்ந்து அப்பெண்ணின் தங்கச் சங்கிலியை அறுத்துக் கொண்டு அங்கு நின்ற மோட்டார் சைக்கிளில் தப்பிச்சென்றனர். (ம-190)

# சீனாவின் வர்த்தகக் கண்காட்சியை பார்வையிடச் சென்ற இந்தியர் கைது

பீஜிங், ஏப்.30

சீனாவின் ஷாங்காய் நகரில் நடைபெற்று வரும் வர்த்தகக் கண்காட்சியைப் பார்வையிடச் சென்ற இந்தியர்களில் சுமார் நான்கு பேரை அந்த நாட்டுப் பொலிஸார் கைது செய்து சிறையில் அடைத்துள்ளனர்.

சீனாவின் ஷாங்காய் நகரில் சைக்கிள் மற்றும் மோட்டார் சைக்கிள் வர்த்தகக் கண்காட்சி நடைபெற்று வருகிறது.

இதனைப் பார்வையிட இந்தியாவிலிருந்து வர்த்தகக் குழுவினர் சென்றிருந்தனர். அவர்கள் அனைவரும் ஷாங்காய் நகரில் உள்ள ஹோட்டல் ஒன்றில் தங்கியிருந்தனர்.

அப்போது ஹோட்டலில் விசாரணை நடத்திய சீனப் பொலிஸார் விபசார வழக்கில் இந்தியர்கள் நான்கு பேரைக் கைது செய்தனர்.

இது குறித்து தகவல் அறிந்த இந்தியத் தூதரக அதிகாரிகள் சீனப் பொலிஸ் அதிகாரிகளுடன் பேச்சு நடத்தி நான்கு பேரையும் விடுவிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

கடந்த 2010 ஆம் ஆண்டில் நடைபெற்ற வைரம் கண்காட்சியின் போது வைரக் கடத்தலில் ஈடுபட்டதாக 23 பேரைக் கைது செய்தது. அவர்களில் 13 பேர் மட்டும் விடுதலை செய்த பொலிஸார் 10 பேருக்கு இரண்டு ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்தது. இந்த நிலையில் தற்போது நான்கு பேரைக் கைது செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

# ஏ-9 வீதியில் காப்பெற் பணி

சாவகச்சேரி வேம்படிச் சந்தியிருந்து தபால் பெட்டிச் சந்தி தபால் அலுவலக சந்தி வரையான ஏ-9 வீதி காப்பெற் வீதியாக மாற்றப்பட்டுள்ளது. சாவகச்சேரி நவீன சந்தை, டிறிபேர்க் கல்லூரி, பேருந்து நிலையம், நீதிமன்றம், நகர மண்டபம், தேவாலயம் ஆகியவற்றை உள்ளடக்கிய வீதி நேற்று காப்பெற் வீதியாக மாற்றப்பட்டுள்ளது.

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் நிர்மாணிக்கப்பட்ட புதிய விடுதிகளை திறந்து வைக்க ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வருகை தந்தபோது சாவகச்சேரி வேம்படிச் சந்தியிலிருந்து வைத்தியசாலை வரையான வீதி ஏற்கனவே காப்பெற் வீதியாக மாற்றப்பட்டிருந்தது. அதன் தொடர்ச்சியாக மேலும் சுமார் 500 மீற்றர் தூரத்துக்கு நேற்று தார்க் கலவை போடப்பட்டது. (ம-9)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனியார் கல்வி நிலையங்கள் ஞாயிறு தினங்களில் இயங்கும்

## இனி வெள்ளிக்கிழமைகளில் வகுப்புக்கள் இல்லை

வவுனியா, ஏப்.30

தூர இடத்தில் இருந்து வரும் மாணவர்களின் நன்மைகருதி ஞாயிற்றுக்கிழமைகளில் தனியார் கல்வி நிலையங்கள் இயங்குவதற்கு வவுனியா நகரசபை அனுமதி வழங்கியுள்ளது.

வவுனியா மாவட்டத்திலுள்ள தனியார் கல்வி நிலைய நிர்வாகிகள் மாணவர்களின் நன்மைகருதி ஞாயிற்றுக் கிழமைகளில் தனியார் கல்வி நிலையங்களை மூட வேண்டும். தவறும் பட்சத்தில் தனியார் கல்வி நிலையங்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என்று வவுனியா பிரதேச செயலர் அறிவித்தல் விடுத்திருந்தார்.

இதனை அடுத்து தனியார் கல்வி நிலைய ஒன்றியத்துக்கும் நகர சபை உறுப்பினர்களுக்குமான சந்திப்பொன்று கடந்த புதன்கிழமை மாலை நகரசபை சபா மண்டபத்தில் நகர சபைத் தலைவர் ஐ.கனகையா தலைமையில் இடம்பெற்றது.

> வெளிமாவட்டங்களிலிருந்து கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த மாணவர்கள் மற்றும் தூர இடங்களிலிருந்து வரும் மாணவர்களின் நன்மைகருதி.

வெளிமாவட்டங்களிலிருந்து குறிப்பாகக் கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த மாணவர்கள் மற்றும் தூர இடங்களிலிருந்து வரும் மாணவர்களின் நன்மை கருதி ஞாயிற்றுக்கிழமைகளில் தனியார் வகுப்புகளை நடத்தி அதற்குப் பதிலாக வெள்ளிக்கிழமைகளில் வகுப்புகளை நிறுத்துவதாகவும் அதற்கு நகரசபை அனுமதி வழங்க வேண்டும் என்றும் ஒன்றியத்தினர் கோரிக்கை விடுத்தனர்.

இதனையடுத்து அங்கு பிரசன்னமாகியிருந்த நகர சபை ஆளும் கட்சி எதிர்க் கட்சி உறுப்பினர்கள் அனைவரும் இந்தக் கோரிக்கையை ஏற்று ஆதரவளித்தனர். கடந்த போர்க் காலங்களிலும் வவுனியா மாவட்ட மாணவர்களின் கல்விப் பெறுபேறுகளின் உயர்ச்சிக்குத் தனியார் கல்வி நிலையங்கள் காத்திரமான பங்களிப்பை வழங்கியுள்ளன. வவுனியா மாவட்டத்தின் எதிர்காலக் கல்வி அபிவிருத்தியை நோக்கமாகக் கொண்டு தனியார் கல்வி நிலைய ஒன்றியத்தின் கோரிக்கைகளை ஏற்க வேண்டும் எனவும் அனைத்து உறுப்பினர்களும் கோரிக்கை விடுத்தனர்.

இதனைச் செவிமடுத்த நகரசபைத் தலைவர் ஞாயிற்றுக்கிழமைகளில் வகுப்புகளை நடத்துவதற்கும் அதற்குப் பதிலாகப் பிரதி வெள்ளிக்கிழமைகளில் வகுப்புகளை நிறுத்துவதற்கும் அனுமதி அளிப்பதாகவும்-

இது தொடர்பாக உடனடியாக வவுனியா மாவட்ட அரச அதிபர், வவுனியா பிரதேச செயலர் மற்றும் ஏனையோருக்கும் கடிதம் அனுப்புவதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் உறுதியளித்தார்.

இந்தக் கலந்துரையாடலில் நகரசபை உப தலைவர் எம்.எம்.ரதன் உட்பட நகர சபை உறுப்பினர்கள், தனியார் கல்வி ஒன்றியத்தின் தலைவர், செயலாளர் மற்றும் நிர்வாகிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (க-400)

## யானை தாக்கியதில் குடும்பஸ்தர் மரணம்

### நெடுங்கேணியில் சம்பவம்

நெடுங்கேணி, ஏப்.30

நெடுங்கேணியில் குடும்பஸ்தர் ஒருவரை யானை தாக்கியதில் அவர் மரணமாகியுள்ளார்.

புதுக்குடியிருப்பைச் சேர்ந்த 40 வயதான கோவிந்தசாமி அன்னராசா என்பவர் இன்னமும் மீளக்குடியமர்த்தப்படாத நிலையில் வவுனியா ஆனந்தகுமாரசுவாமி முகாமில் வசித்து வந்தார். இவர் விசேட அனுமதி பெற்று முகாமிலிருந்து வெளியே வந்து நெடுங்கேணி சேனைப்புலவில் உள்ள தனது தாயாருடன் வசித்து வந்தார். இவர் மீன்பிடித் தொழிலில் வழமையாக ஈடுபட்டு வருபவர். நேற்று முன்தினம் தான் பிடித்த மீன்களை நெடுங்கேணி நகரப் பகுதிக்கு விற்பனைக்கென எடுத்துச் சென்றுள்ளார். விற்பனை முடிந்து இரவு 7.30 மணியளவில் வழக்கம் போலத் தனது தாயாரின் வீட்டுக்குச் சென்று கொண்டிருந்தார்.

வீட்டிலிருந்து 50 மீற்றர் தொலைவில் ஈட்டி முறிஞ்சான் குளத்தைத் தாண்டி இவர் வந்து கொண்டிருக்கும்போது எதிரே வந்த யானை ஒன்று இவரை அடித்துக் கொன்றது. பின்னர் பற்றைகளால் உடலை மூடிவிட்டுச் சென்றுள்ளது.

இவரது மனைவியும் மகனும் ஆனந்தகுமாரசுவாமி முகாமில் இருந்து மரணச் சடங்கில் கலந்துகொள்ள அனுமதி பெற்று வந்துள்ளார்.

பொலிஸாரும், இராணுவத்தினரும் சம்பவ இடத்துக்கு வந்து விசாரணைகளை மேற்கொண்டனர். (க-435)

## தாமதமாக வீடு செல்வதால் இடர்படும் மன்னார்ப் பெண்கள்

மன்னார், ஏப்.30

மன்னாரிலுள்ள வர்த்தக நிலையங்களில் கடமையாற்றும் பெண்கள் வேலை முடிந்து தனியாக வீடு செல்லும் போது பல்வேறு இடர்களுக்கு முகம் கொடுத்து வருவதாகத் தெரிவித்துள்ளனர்.

மன்னார் பஸார் பகுதிகளில் உள்ள வியாபார நிலையங்களில் கடமையாற்றுகின்ற பெண்களை, வியாபார நிலையங்களின் உரிமையாளர்கள் இரவு 7 மணிக்குப் பின்பே வீடு செல்ல அனுமதிப்பதாகவும், இதனால் தாம் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருவதாகவும் இவர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மன்னார் பஸார் பகுதியில் உள்ள வர்த்தக நிலையங்களில் பல பெண்கள் கடமையாற்றி வருகின்றனர். இவர்கள் காலை 8 மணிக்கு வந்தால் மாலை 7 மணிக்கே வீடு திரும்ப அனுமதிக்கப்படுகின்றனர்.

அதிகளவில் இளம் யுவதிகளே வர்த்தக நிலையங்களில் கடமையாற்றுகின்றனர். ஒரு சில வர்த்தக நிலையங்களில் கடமையாற்றுகின்ற பெண்களை மாலை 5.30 மணிக்கு முன்னர் வீடு செல்ல அனுமதிக்கின்றனர்.

ஆனால் பல வர்த்தக நிலையங்களில் கடமையாற்றுகின்ற பெண்கள் மாலை 7 மணிக்கு பின்பே வீடு செல்ல அனுமதிக்கப்படுகின்றனர். நாங்கள் தனியாக வீடு செல்கின்ற போது பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகின்றோம்.

எனவே உரிய அதிகாரிகள் இதில் தலையிட்டு நாங்கள் உரிய நேரத்திற்கு வீடு செல்ல ஆவன செய்யுமாறு வேண்டுகோள் விடுக்கின்றனர் பாதிக்கப்பட்டு வரும் பெண்கள். (க-12)

## டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளில் துணுக்காய் பிரதேச சபையினர்

துணுக்காய், ஏப்.30

துணுக்காயில் டெங்கு நுளம்புகள் பெருகாமல் இருப்பதற்கான நடவடிக்கைகளில் துணுக்காய்ப் பிரதேச சபையினர் ஈடுபட்டுள்ளனர்.

கடந்த 19 ஆம் திகதி பிரதேச செயலகத்தில் பிரதேச செயலர் எஸ்.குணபாலன் தலைமையில் இடம்பெற்ற விசேட கூட்டத் தீர்மானத்துக்கு அமைவாக இந்த நடவடிக்கைகள் பிரதேச சபையால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதன் பிரகாரம் 20 கிராம சேவையாளர் பிரிவுகளில் டெங்கு பெருகும் இடங்கள் இனம்காணப்பட்டுக் கழிவுகள் அகற்றப்பட்டு வருகின்றன.

மேலும் கடந்த சில நாள்களாக மழை பெய்து வருவதால் நுளம்புகளின் பெருக்கம் அதிகரித்துக் காணப்படுகின்றது.

> கழிவுகளை அகற்றும் வேலைகள் பிரதேச சபை ஊழியர்களால் சிறந்த முறையில் மேற்கொள்ளப்படுகின்றன. மேலும் மக்களும் தாமாகவே நுளம்பு பெருகக் கூடிய இடங்களை அழித்து வருகின்றனர்.

இதனால் டெங்கு நோய் பரவும் அபாயமும் தோன்றியுள்ளது. இதனைக் கட்டுப்படுத்தும் முகமாகவே கடந்த 23 ஆம் திகதி தொடக்கம் பிரதேச சபை இந்த நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றது.

கிராமங்களில் ஒலிபெருக்கி மூலம் அறிவித்தல்கள் விடுக்கப்படுகின்றன. இதனால் கிராம மக்களின் ஆதரவும் ஒத்துழைப்பும் கிடைத்து வருகின்றன. கழிவுகளை அகற்றும் வேலைகள் பிரதேச சபை ஊழியர்களால் சிறந்த முறையில் மேற்கொள்ளப்படுகின்றன.

மேலும் மக்களும் தாமாகவே நுளம்பு பெருகக் கூடிய இடங்களை அழித்து வருகின்றனர். பிரதேச செயலர் எஸ்.குணபாலன், பிரதேச சபைத் தலைவர் எஸ்.இராசரத்தினம், பிரதேச சபைச் செயலாளர் கிருஷ்ண நவரத்தின ராஜா ஆகியோர் நேரடியாகச் சென்று இந்த வேலைகளைப் பார்வையிட்டு வருகின்றமையை அவதானிக்க முடிகின்றது. (க-415)

## கவிச்சரம் சஞ்சிகை

வேப்பங்குளம், ஏப்.30

வவுனியாவில் கவிதைகளை மையப்படுத்திச் சஞ்சிகையொன்று வெளியிடப்பட்டு வருகின்றது.

கவிஞர்கள், வளர்ந்து வரும் கவிஞர்கள் ஆகியோருக்குக் களம் அமைத்துக் கொடுக்கும் வகையிலேயே வவுனியா கலை, இலக்கிய நண்பர்கள் வட்டத்தினால் 'கவிச்சரம்' என்னும் இந்தச் சஞ்சிகை வெளியிடப்பட்டு வருகின்றது.

இதன் நான்காவது இதழின் வெளியீட்டு விழா அண்மையில் வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் மண்டபத்தில் கவிஞர் அகளங்கன் தலைமையில் இடம்பெற்றது.

இந்த இதழில் 25 கவிஞர்களின் ஆக்கங்கள் இடம்பெற்றுள்ளன.

(க-421)

## கற்றல் உபகரணங்கள்

வவுனியா,ஏப்.30

வவுனியா மகாரம்பைக்குளம் பகுதியில் உள்ள அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கு சேவாலங்கா நிறுவனத்தினால் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

சேவாலங்கா நிறுவனத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட இந்த நிகழ்வில் மகாறம்பைக்குளம் ஆலடி சித்தி விநாயகர் ஆலயத்தின் பிரதம குரு கலந்து கொண்டு மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்கள் வழங்கினார். (க-421)

## சட்ட விரோத மது விற்பனை; 70 வழக்குகள் நீதிமன்றில்

வவுனியா,ஏப்.30


வவுனியா மாவட்ட மதுவரித் திணைக்களத்தினால் இந்த வருடம் மட்டும் இதுவரை 70 சட்ட விரோத மது விற்பனையாளருக்கு எதிராக வவுனியா நீதிமன்றில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

வவுனியா மாவட்ட மதுவரித் திணைக்களப் பொறுப்பதிகாரி பி.ரகுநாதன் தலைமையில் மேற்கொள்ளப்பட்ட திடீர்ச் சோதனை நடவடிக்கைகளின்போதே சட்டவிரோதகள் விற்பனை, சாராய விற்பனை என்பவை தொடர்பாக கைது செய்யப்பட்டவர்களுக்கு எதிராகவே வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

இந்த வழக்குகளில் குற்றம் சாட்டப்பட்டவர்களிடமிருந்து சுமார் 89 ஆயிரம் ரூபா தண்டமாக அறவிடப்பட்டுள்ளது.

இதே வேளை வவுனியா ஈரப்பெரியகுளப் பகுதியைச் சேர்ந்த கஞ்சா வைத்திருந்த ஒருவருக்கு வவுனியா நீதிமன்றத்தினால் 9 ஆயிரம் ரூபா தண்டமாக விதிக்கப்பட்டுள்ளது.

வவுனியா ஈரப்பெரியகுளம் பகுதியைச் சேர்ந்த எஸ்.அமிர்தீன் என்பவருக்கு எதிராகக் கஞ்சா வைத்திருந்தார் என்ற குற்றச் சாட்டில் மதுவரித் திணைக்கள பொறுப்பதிகாரியால் வவுனியா மாவட்ட நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டதை அடுத்தே நீதிபதியால் இந்தத் தண்டம் விதிக்கப்பட்டது. (க-400)



மன்னார், குஞ்சுக்குளம் தொங்கு பாலம் பாதிப்படைந்த நிலையில் காணப்படுகின்றது. இதனால் அந்தப் பாலத்தினூடாக பயணிக்கும் மக்கள் அச்சத்துடனேயே பயணிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. (12)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



துரையப்பா விளையாட்டு அரங்குக்கு அருகில் உள்ள யாழ். மாநகர வளாகத்தில் நான்கு பொது மலசலகூடங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. இந்த வளாகத்தில் உள்ள சுற்றுச் சூழல் அலுவலக கட்டடத்துக்கு பின்புறமாக இந்த மலசலகூடங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. இந்த வளாகத்தில் ஏற்கனவே அமைக்கப்பட்ட தற்காலிக மலசலகூடங்கள் அகற்றப்பட்டுள்ளன. தற்போது இந்த நான்கு புதிய மலசலகூடங்களும் அவசர அவசரமாக அமைக்கப்பட்டு வருகின்றன. (ம-17)

# காணிகள் வழங்கப்பட்ட போதும் கட்டடம் அமைக்கப்படவில்லை

## மட்டுவில் வடக்கில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதில் தாமதம்

தென்மராட்சி, ஏப்.30

ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைப்பதற்கு மக்கள் காணிகள் வழங்கிய போதிலும் அதற்குள் கட்டடம் அமைக்கச் சுகாதாரத் திணைக்களத்தினர் முன் வரவில்லை என்று மக்கள் தெரிவித்தனர்.

மட்டுவில் வடக்கு, மிருசுவில் வடக்கு ஆகிய பகுதிகளில் அங்குள்ள பொது அமைப்புக்களின் கட்டடங்களில் தாய், சேய் சிகிச்சை நிலையங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. இதனால் ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு நிரந்தரக் கட்டடங்கள் அமைக்க அந்தப் பகுதி மக்களால் அன்பளிப்பாகக் காணிகள் வழங்கப்பட்டன.

> நிரந்தரக் கட்டடங்கள் அமைப்பதற்கான எந்தவொரு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படாதது குறித்து மக்கள் கவலை தெரிவித்தனர்.

இந்தக் காணிகளில் நிரந்தரக் கட்டடங்கள் அமைப்பதற்கான எந்தவொரு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படாதது குறித்து மக்கள் கவலை தெரிவித்தனர்.

மறவன்புலோ பகுதியில் மக்களால் வழங்கப்பட்ட காணியில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் வடக்கின் துரித மீட்சித் திட்டத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தது போன்று மட்டுவில் வடக்கு, மிருசுவில் வடக்கு ஆகிய இடங்களில் ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு நிரந்தரக் கட்டடம் அமைக்க உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ம-9)

# வடமராட்சித் தண்ணீர் கொழும்புக்கு ஆய்வுக்கு

வடமராட்சி, ஏப். 30

பருத்தித்துறை, வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் பிரிவில் உள்ள பொதுக் கிணறுகள் சிலவற்றின் தண்ணீர் ஆய்வுக்காக கொழும்பில் உள்ள மருத்துவ ஆராய்ச்சி நிலையத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இந்தப் பிரதேசத்தில் உள்ள பொதுக் கிணறுகளிலிருந்து பெறப்படும் தண்ணீரை, பலரும் குடி தண்ணீராகப் பயன்படுத்தி வருகின்றனர். இந்த நிலையில் இந்தக் கிணறுகளிலிருந்து பெறப்படும் தண்ணீர் குடிக்க உகந்ததா எனக் கண்டறியும் நடவடிக்கைகளில் பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் ஈடுபட்டுள்ளது.

> இந்தப் பிரதேசத்தில் உள்ள பொதுக் கிணறுகளிலிருந்து பெறப்படும் தண்ணீரை, பலரும் குடி தண்ணீராகப் பயன்படுத்தி வருகின்றனர்.

இந்த நடவடிக்கையில் ஒன்றாக பொதுக் கிணறுகளிலிருந்து மாதிரி தண்ணீர் எடுக்கப்பட்டு அதனை குடிக்க உகந்ததா இல்லையா என்பதைக் கண்டறியும் பொருட்டு ஆய்வுக்காக கொழும்பில் உள்ள மருத்துவ ஆராய்ச்சி நிலையத்துக்கு பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகார பிரிவு அலுவலகம் அனுப்பி வைத்துள்ளது.

பொதுக் கிணறுகளின் தண்ணீர் தொடர்பான ஆய்வறிக்கை கிடைத்ததும், பொதுக் கிணறுகளின் தண்ணீர் தொடர்பாக தொடர் நடவடிக்கை எடுப்பதா இல்லையா என்பதை பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு அலுவலகம் தீர்மானிக்கும் எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்தப் பிரதேசத்தில் உள்ள சுமார் 25 கிணறுகளிலிருந்து பெறப்பட்ட தண்ணீர் மாதிரிகள் தனித் தனியாகப் பொதிசெய்யப்பட்டு பரிசோதனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-8)

# நீரிழிவு நோயாளர்களுக்கு தனியார் மருந்தகங்களில் மருந்துகள் வழங்கத் தடை

தென்மராட்சி, ஏப்.30

தென்மராட்சி பிரதேசத்தில் நீரிழிவு நோயாளர்களுக்கு இந்தப் பகுதியில் உள்ள தனியார் மருந்தகங்கள், வைத்திய அதிகாரிகளால் அன்றைய திகதியில் வழங்கிய மருத்துவ சிட்டை இன்றி மருந்துகள் விநியோகிக்க வேண்டாம் என்று வைத்திய வட்டாரங்கள் அறிவித்துள்ளன.

இதனை மீறும் தனியார் மருந்தகங்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரதேசத்தில் உள்ள நீரிழிவு நோயாளர்களின் நலன்கருதி பிரதி வியாழக் கிழமைகளில் நீரிழிவு சிகிச்சைப் பிரிவு இயங்கி வருகிறது.

இருந்தும் அண்மைக் காலமாக நீரிழிவு நோயால் மோசமாகப் பாதிக்கப்பட்ட பலர் சாவகச்சேரி வைத்திய சாலை விடுதிகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் பெரும்பாலானோர் போதிய விழிப்புணர்வு இன்மையால் தனியார் மருந்தகங்களில் மருந்துகள் வாங்கி வருடக் கணக்கில் பாவித்து வருகின்றனர்.

இந்த மாதம் சாவகச்சேரி வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டவர்களில் நால்வருக்கு கால்கள் அகற்றப்பட்டன. இருவர் இந்த நோய்த் தாக்கம் அதிகரித்த நிலையில் மரணம் அடைந்துள்ளனர்.

நோயின் தாக்கத்தைக் குறைக்க வைத்தியர்களில் ஆலோசனையின்றி அளவுக்கு அதிகமாக குளிசைகளைப் பாவித்து கோமா நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டும் வருகின்றனர்.

நீரிழிவு நோயாளர்கள் குளிசைகள் பெற வந்தால் வைத்தியசாலை கிளினிக்குக்குச் செல்லுமாறு ஆலோசனை வழங்க வேண்டும். வைத்தியசாலையில் நடைபெற்ற கிளினிக்கில் கலந்து கொண்டு குளிசை முடிந்து விட்டதென வருபவர்களுக்கு இரண்டு தினங்களுக்குத் தேவையான மருந்து மட்டுமே வழங்க வேண்டும். இதற்கு மேல் வழங்கக் கூடாது.

இந்த அறிவுறுத்தலை மீறும் தனியார் மருந்தகங்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.- எனவும் வலியுறுத்தப்பட்டுள்ளது.(ம-9)

# அண்மைய சம்பவங்களுக்கு கண்டனத் தீர்மானங்கள்

## சாவகச்சேரி நகரசபை நிறைவேற்றியது

தென்மராட்சி, ஏப்.30

சாவகச்சேரி நகர சபையில் அண்மைய நிகழ்வுகள் தொடர்பான கண்டனத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

தம்புள்ள முஸ்லிம் பள்ளிவாசல் மீது தாக்குதல், திருகோணமலை வைத்திய சாலை வளாகத்திலிருந்து பிள்ளையார் கோயில் அகற்ற மேற்கொண்ட முயற்சி, சாவகச்சேரி நகர சபைத் தலைவர் இல்லத்தின் மீது நடத்தப்பட்ட தாக்குதல், தென்மராட்சிப் பிரதேசத்துக்கான மின் தடை போன்ற சம்பவங்கள் குறித்த பிரேரணைகள் சபை உறுப்பினர்களால் முன் வைக்கப்பட்டன. இந்த நிலையில் இவை ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளன என்று தலைவர் இ.தேவசகாயம் பிள்ளை தெரிவித்தார்.

சபை உறுப்பினர்களான சிறிதரன், சுதர்சன் ஆகியோர் தம்புள்ள முஸ்லிம் பள்ளிவாசல் மீது தாக்குதல், திருகோணமலை பிள்ளையார் ஆலயத்தை அகற்ற எடுத்த நடவடிக்கைகள் தொடர்பான பிரேரணைகளை முன்வைத்தனர். இவ்வாறான செயற்பாடுகளால் இனங்களுக்கிடையில் பகைமை உணர்வுகளை வளர்க்க அரசு முயற்சிக்கிறது என்றும் தெரிவித்தனர்.

சபை எதிர்க்கட்சித் தலைவர் சூ.அலெக்ஸாண்டர், நகராட்சி மன்றத் தலைவரின் இல்லத்தின் மீது நடத்தப்பட்ட தாக்குதல் சம்பவம் அநாகரிகமான செயல். இவ்வாறான சம்பவங்கள் எந்த வகையிலும் ஏற்றுக் கொள்ள முடியாது என கண்டனத் தீர்மானம் கொண்டு வந்தார்.

எதிர்க்கட்சியைச் சேர்ந்த ந.திருக்குமரன் தென்மராட்சிப் பகுதியில் நீண்டகாலமாக ஒன்றுவிட்டு ஒரு நாளைக்கு நடைமுறைப்படுத்தப்படும் மின்தடையால் பொதுமக்களும் மாணவர்களும் சிரமங்களை அனுபவிப்பதாகவும் பிரதேசத்தில் உள்ள வர்த்தகர்கள், தொழிற்சாலை வைத்திருப்போர் உள்ளிட்ட அனைவரும் பாதிக்கப்படுகின்றனர். இது சீர் செய்யப்பட வேண்டும் என்று கண்டனத் தீர்மானத்தை முன்மொழிந்தார். இந்தக் கண்டனத் தீர்மானங்கள் சபையால் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. (ம-9)

# தீவகத்தில் மீள்குடியமரும் மக்களுக்கு மின்சாரம்

## வேலணைப் பிரதேச சபைத் தலைவர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப்.30

தீவகப் பிரதேசத்தில் மீள் குடியமர்வோருக்கு மின் இணைப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தீவுப் பகுதியின் எப்பகுதியில் மீள்குடியமர்ந்தாலும் மின்சார இணைப்பு வடக்கின் வசந்தத்தின் கீழ் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று வேலணைப் பிரதேச சபைத் தலைவர் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

யாழ்ப்பாணத்தில் இருந்து தீவகத்துக்குள் மீள்குடியமர்ந்தவர்களுக்கு மின் வழங்கப்படாது என்ற கூற்று பிழையானது. மீள்குடியமரும் சகலருக்கும் மின் இணைப்பு வழங்கப்படும்.

1991 இடப்பெயர்வுக்குப் பின்னர் மக்கள் தற்போது மீள்குடியமர்ந்து வருகின்றனர். மண்கும்பான் பகுதியில் 60 குடும்பங்கள் மின் இன்றி உள்ளன. அவர்களுக்கு வடக்கின் வசந்தத்தின் கீழ் மின் வழங்குமாறு மின் அத்தியட்சகரைக் கோரியுள்ளேன்.

விரைவில் அந்தப் பகுதி மக்களுக்கு மின் கிடைக்கும். மண்டைதீவுப் பிரதேசத்துக்கு மின்சார சபையின் மின் கிடைக்கும் வரை உடனடியாக ஜெனரேட்டர் மூலம் மின் வழங்கக் கோரியுள்ளேன்.- என்றார்.

வேலணை பிரதேச சபையின் கூட்டம் சபைத் தலைவர் தலைமையில் இடம்பெற்றது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதில் கலந்துகொண்ட வேலணை பிரதேச சபையின் முன்னாள் தலைவரும் உறுப்பினருமான ந.கருணாகரமூர்த்தி தெரிவித்ததாவது:-

மற்றைய பிரதேசங்களோடு ஒப்பிடும்போது தீவகப் பிரதேசம் இன்னும் அபிவிருத்தி அடைய வேண்டும்.

இதற்கு அரச சார்பற்ற நிறுவனங்களும் தொண்டு நிறுவனங்களும் உதவ முன் வரவேண்டும். அபிவிருத்தியில் கல்வி, சுகாதாரம், உட்கட்டுமானம், வீதி அபிவிருத்தி என்பவற்றில் கவனம் செலுத்தப்பட வேண்டும்.- என்றார். (ம)



குடாநாட்டில் தற்போது பெரும் காற்று வீசத் தொடங்கியுள்ளது. இந்த நிலையில் நேற்று முன்தினம் மாலை வீசிய கடும் சுழல் காற்றால் தோட்டங்களில் வாழை மரங்கள் சில குலைகளுடன் முறிந்து வீழ்ந்துள்ளன. கோப்பாய் இராச வீதியில் விவசாய தோட்டங்களில் இவ்வாறு பெரும் எண்ணிக்கையில் வாழைகள் முறிந்து வீழ்ந்துள்ளதைக் காணமுதுடிகிறது. பருவபெயர்ச்சில் காற்று ஆரம்பமாகியதை அடுத்தே இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது. இதனால் விவசாயிகள் பெரும் நஷ்டம் இடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ஜனாதிபதித் தேர்தல்குறித்து

# கருணாநிதியைச் சந்தித்து அந்தோனி ஆலோசனை

சென்னை, ஏப்.30

ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்பாளர் குறித்து தி.மு.க. தலைவர் கருணாநிதியுடன் மத்திய அமைச்சர் ஏ.கே. அந்தோனி நேற்று சென்னையில் ஆலோசனை நடத்தினார்.

தற்போதைய ஜனாதிபதி பிரதீபா பட்டீலின் பதவிக் காலம் முடிவடைய உள்ள நிலையில் ஜூலை மாதம் தேர்தல் நடைபெறுகிறது. ஜனாதி பதித் தேர்தலில் யாரை வேட்பாளராக நிறுத்துவது என்பது குறித்து ஆளும் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு கூட்டணிக் கட்சிகளுடன் தீவிர ஆலோசனை மேற்கொண்டு வருகிறது. சில தினங்களுக்கு முன்பு தேசியவாத காங்கிரஸ் தலைவர் சரத்பவாருடன் ஆலோசனை நடத்தப்பட்டது.

இந்தநிலையில் தி.மு.க. தலைவர் கருணாநிதியின் ஆலோசனையைக் கேட்பதற்காக ஏ.கே. அந்தோனி நேற்றுக்காலை சென்னைக்குச் சென்றார். அவரை விமான நிலையத்தில் தி.மு.க. மற்றும் காங்கிரஸ் பிரமுகர்கள் வரவேற்றனர். பின்னர் கருணாநிதியை சந்திப்பதற்காக சி.ஐ.டி. காலனி வீட்டுக்குச் சென்றனர்.



அங்கு நடந்த ஆலோசனைக் கூட்டத்தில் கருணாநிதியுடன் டி.ஆர்.பாலு, கனிமொழி, டி.கே.எஸ். இளங்கோவன் ஆகியோர் உடனிருந்தனர்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் பெண் ஒருவரை நிறுத்தலாம் என்று கருணாநிதி தெரிவித்த யோசனையின் அடிப்படையிலேயே பிரதீபா பாட்டீல் நிறுத்தப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (வ)

### அமெரிக்க திரைப்பட விழாவில் இந்திய பெண்ணுக்கு விருது

அமெரிக்க திரைப்பட விழாவில் கனடாவைச் சேர்ந்த இந்திய வம்சாவளிப் பெண் உருவாக்கிய ஆவணப்படத்துக்கு விருது கிடைத்துள்ளது.

அமெரிக்காவின் நியுயோர்க் நகரில் ஆண்டுதோறும் ட்ரைபேகா திரைப்பட விழா நடைபெறுகின்றது.

இந்தாண்டு விழாவில், கனடாவைச் சேர்ந்த இந்திய வம்சாவளிப் பெண் நிஷா பகுஜா உருவாக்கிய திவேர்ல்ட் பிபோர் ஹெர், என்ற ஆவணப் படம் தெரிவு செய்யப்பட்டது. இந்தியப் பெண்கள் வாழ்க்கையில் சந்திக்கும் போராட்டங்களை படத்தில் எடுத்து காட்டியிருந்தார் நிஷா.

மொத்தம் 46 நாடுகளைச் சேர்ந்த 89 ஆவணப் படங்களில் இருந்து அவரது படம் சிறந்ததாகத் தெரிவு செய்யப் பட்டுள்ளது. விருதோடு நிஷாவுக்கு 25 ஆயிரம் டொலர்கள் பரிசாக வழங்கப்பட்டன. இது அவருக்கு 3ஆவது படமாகும்.

வைர வியாபாரம் பற்றிய அவரது முதல் படம் 'டயமண்ட் றோட்', கனடாவின் ஜெமினி விருதைப் பெற்றது. (வ)

# மதுரை ஆதீன 293 ஆவது ஆதீனமாக நித்தியானந்தா



தமிழகத்தின் மிகப் பெரிய ஆதீ னமான மதுரை ஆதீனத்தின் 293ஆவது ஆதீனமாக நித்தியானந்தா முடிசூட்டப் பட்டுள்ளார்.

மதுரைக்கு அண்மையில் நித்தியா னந்தா சென்றார். அங்கு மதுரை ஆதீன கர்த்தரைச் சந்தித்து ஆசி பெற்றார். பின்னர் அவரிடம் 5 அடி உயரம் கொண்ட தங்க முலாம் பூசப்பட்ட செங்கோலை வழங்கினார். அதன் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய மதுரை ஆதீனம், நித்தியானந்தாவை வெகுவாகப் பாராட்டிப் பேசினார்.

நித்தியானந்தாவின் மதுரை ஆதீன மட வருகை அப்போது பரபரப்பாகப் பேசப்பட்டது. இந்த நிலையில் தான் மதுரை ஆதீனகர்த்தராக அவருக்கு முடி சூட்டப்பட்ட தகவல் வெளி யாகியுள்ளது.

பெங்களூர் அருகே உள்ள பிடாதியில் உள்ள நித்தியானந்தாவின் தியான பீட தலைமை அலுவலக வளாகத்தில் வைத்து முடிசூட்டல் நிகழ்ச்சி இடம்பெற்றுள்ளது.

மதுரை ஆதீனமாக தற்போது உள்ள அருணகிரிநாத ஞானசம்பந்த தேசிகர், நித்தியானந்தாவுக்கு கிரீடம் சூட்டி தனது அடுத்த வாரிசாக நித்தியானந்தாவை அறிவித்தார்.

பின்னர் மதுரை ஆதீனம் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

மதுரை ஆதீனத்தின் 293 ஆவது குரு மகா சந்நிதானமாக நித்தியானந்தாவை நாம் இன்று அறிவித்து பிரகடனம் செய்கிறோம். அவர்தான் மதுரை ஆதீனத்தின் சட்டபூர்வமான அடுத்த மகா குரு. அவர் இனிமேல் ஸ்ரீலஸ்ரீ ஸ்ரீ பரமஹம்ச நித்தியானந்த ஸ்ரீ ஞானசம்பந்த தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் என்று அழைக்கப்படுவார்.

மதுரை ஆதீன மடத்தின் வழிபாடு உள்ளிட்ட அனைத்து உரிமைகளும் அவருக்கு வழங்கப்பட்டுள்ளன. மதுரை ஆதீனத்தை அவர் இனி முழுமையாகச் செயற்படுத்துவார் - என்றார் அவர். (வ)


# புனேயில் வசிக்கும் முடிவை கைவிட்டார் ஜனாதிபதி பிரதீபா

ஜனாதிபதி பிரதீபாட்டீல் பதவியில் இருந்து ஓய்வு பெற்றபின் வசிப்பதற்காக, புனேயில் புதிய மாளிகை கட்டுவதற்காக, நிலம் ஒதுக்கப்பட்டதில் சர்ச்சை எழுந்ததை அடுத்து, அங்கு வசிக்கும் முடிவை, அவர் கைவிட்டுள்ளார்.

ஜனாதிபதி பிரதீபாவின் பதவிக்காலம், எதிர்வரும் ஜூலை மாதத்துடன் முடிவடைகிறது. பதவியில் இருந்து ஓய்வு பெற்றதும், அவர் வசிப்பதற்காக, மாளிகை கட்டுவதற்கு, மகாராஷ்டிர மாநிலம் புனேயில், அவருக்கு நிலம் ஒதுக்கப்பட்டது. இந்த இடம் இராணு வத்துக்குச் சொந்தமானது. விதிமுறைகளை மீறி, அனுமதிக்கப்பட்ட அளவை விட, ஆறு மடங்கு அதிகமாக நிலம் (2.6 லட்சம் சதுர அடி) ஒதுக்கப்பட்டதாக சர்ச்சை எழுந்தது. ஓய்வுபெற்ற இராணுவத்தினர், போரில் உயிர் நீத்த ராணுவத்தினரின் விதவை மனைவிகளுக்காக ஒதுக்கப்படும் நிலத்தில், இந்த முறைகேடு நடந்த தாகவும் புகார் தெரிவிக்கப்பட்டது.

இந்தநிலையில், ஜனாதிபதி அலுவலகம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:-

பணியில் இருந்து ஓய்வு பெற்றதும், ஜனாதிபதி வசிப்பதற்காக, பங்களா கட்டுவதற்கு நிலம் ஒதுக்கப்பட்டதை மையமாக வைத்து, சர்ச்சை எழுந்துள்ளது, கவலை அளிக்கிறது. ஒரு சிலர், இதை தவறாக பிரசாரம் செய்து வருகின்றனர். இதுகுறித்து, ஜனாதிபதி அலுவலகம் சார்பில் விளக்கம் கொடுக்கப்பட்டும், தொடர்ந்துதவறாகப் பிரசாரம் செய்து வருவது துரதிர்ஷ்டவசமானது என்று அதில் குறிப் பிடப்பட்டுள்ளது. (வ)



இந்தியாவுக்கு பயணம் மேற்கொண்டுள்ள ஐ.நா. பொதுச்செயலாளர் பான் கீ மூனுக்கு நேற்று முன்தினம் டில்லி ஜாமியா மில்லியா இஸ்லாமிய பல்கலைக் கழகம் டாக்டர் பட்டம் வழங்கிக் கௌரவித்தது.

# இந்துக்கட்சிகள் அதிர்ச்சி; கண்டனம்

நித்தியானந்தாவை, 1500 ஆண்டு பழமை வாய்ந்த இந்தியாவின் மூத்த ஆதீனமான மதுரை ஆதீனத்தின் 293வது குரு மகா சன்னிதானமாக தற்போதைய ஆதீனம் நியமித்துள்ளது குறித்து பல்வேறு இந்துக் கட்சிகளும், அமைப்புகளும் அதிர்ச்சியும் கண்டனமும் தெரிவித்துள்ளன. இந்த விவகாரம் குறித்துப்பேச அவசரக் கூட்டம் ஒன்றுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பொதுமக்கள் மத்தியிலும் மதுரை ஆதீனத் தின் இந்தத் திடீர் முடிவு பெரும் சலசலப்பை ஏற்படுத்தியுள்ளது. மதுரை ஆதீனத்தை மக்கள் தற்போது கேலிப் பொருளாகப் பார்க்கும் நிலையும் ஏற்பட்டுள்ளது.

இந்த விவகாரம் குறித்து இந்து மக்கள் கட்சித் தலைவர் அர்ஜுன் சம்பத் தெரிவித்ததாவது:-

இன்னும் ஓரிரு நாளில் அவசரக் கூட்டம் ஒன்றுக்கு ஏற்பாடு செய்யவுள்ளோம். தற்போது நடந்து வருவது மிகவும் அபாயகரமான சூழல் ஏற்பட்டிருப்பதையே உணர்த்துகிறது. மதுரை ஆதீனம் மிகவும் மோசமான முன்னுதாரணத்தை ஏற்படுத்திவிட்டார். இந்துக்கள் அனைவரையும் அவர் அவமானப் படுத்தியுள்ளார், களங்கப்படுத்தியுள்ளார்.

மதுரை ஆதீனமாக நியமிக்கப்பட்டவருக்கு பெங்களூரில் வைத்து முடி சூட்டியுள்ளார். அங்கு போய் மதுரை ஆதீனத்தின் அடுத்த வாரிசு யார் என்பதை அவர் தெரிவித்துள்ளார். இது தவறான செயல் - என்றார். (வ)

### எண்ணெய் ஆலையில் தீ

உத்தரப்பிரதேச மாநிலத்தில் உள்ள எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையொன்றில் ஏற்பட்ட பயங்கர தீ விபத்தில் பல கோடி ரூபா மதிப்புள்ள பொருள்கள் எரிந்து சேதமடைந்துள்ளன.

உத்தரப் பிரதேச மாநிலம் வாரணாசி மாவட்டத்தில் ஆஷாபூர் நகரில் ஜூகூன் ஜூவாலா என்ற எண்ணெய் சுத்திகரிப்பு தொழிற்சாலை உள்ளது. இங்கு நேற்றுமுன் தினம் நள்ளிரவில் திடீரென தீ விபத்து ஏற்பட்டதால் எண்ணெய் குடோன்கள் தீப்பற்றி எரிந்தன.

இந்த தீ விபத்தால் அப்பகுதி முழுவதும் புகை மண்டலமாகக் காட்சி யளித்தது.

இந்த தீ விபத்து ஏற்பட்டதும் 12 இற்கும் மேற்பட்ட தீயணைப்பு வாகனங்கள் வரவழைக்கப்பட்டு, தீயை அணைக்க தீயணைப்புப் படையினர் போராடி வருகின்றனர். எனினும் இந்தத் தீ விபத்தால் உயிர்ச்சேதம் ஏற்பட்டதாக தகவல் இல்லை. (வ)

### லஞ்சம் பெற்ற குற்றச்சாட்டு:

# பா.ஜ.க. முன்னாள் தலைவருக்கு நான்கு ஆண்டுகள் சிறைவாசம்

இராணுவத்தினருக்கு நவீன கருவிகளை வழங்கும் ஒப்பந்தம் ஒன்றைப் பெற்றுத் தருவதாகக் கூறி இலஞ்சம் பெற்ற வழக்கில் பாரதீய ஜனதாக் கட்சியின் முன்னாள் தலைவர் பங்காரு லட்சுமணனுக்கு 4 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவின் முன்னாள் பிரதமர் வாஜ்பாயின் ஆட்சிக்காலத்தின்போது இடம் பெற்ற இந்தச்சம்பவம் தொடர்பிலான வழக்கிலேயே இவருக்கு மத்திய புலனாய்வுக்கழக நீதிமன்றம் 4 ஆண்டுகள்சிறைத் தண்டனை வழங்கித் தீர்ப்பளித்துள்ளது.

2000, 2001ஆம் ஆண்டுகளில் இந்தியாவின் பிரதமராக வாஜ்பாய் இருந்தபோது பாரதீய ஜனதாக் கட்சியின் தலைவராக பங்காரு லட்சுமணன் பதவி வகித்திருந்தார்.

அப்போது, தெஹல்கா இணையத்தளம் இந்திய இராணுவத்துக்கு ஆயுதங்களைக் கொள்வனவு செய்வதுதொடர்பில் இடம்பெறும் ஊழல்களை வெளிப்படுத்த ஒரு நாடகத்தை அரங்கேற்றியது.

அதன்படி, தெஹல்கா செய்தியாளர் ஆயுதத்தளபாட நிறுவனங்களைச் சேர்ந்தவர்களைப் போல் வேடமிட்டுபங்காரு லட்சுமணனைச் சந்தித்திருந்தார்.

இதன்போது, இந்திய இராணுவத்துக்கு நவீன கருவிகளை விநியோகம் செய்வதற்கான ஒப்பந்தம் ஒன்றை வழங்குமாறு பாதுகாப்புத் துறை அமைச்சிடம் பரிந்துரைக்குமாறு கேட்டுக்கொண்டார்.

இதற்காக அவர்கள் பங்காரு லட்சுமணனுக்கு ஒரு [illegible] கொடுத்துள்ளதுடன், அதனை



தங்கள் இரகசிய ஒளிப்பதிவுக் கருவியில் பதிவு செய்து கொண்டனர்.

இதனையடுத்து, அந்தக் காணொலியை தெஹல்கா இணையத்தளம் வெளியிட்டதைத் தொடர்ந்து, பாரதீய ஜனதாக் கட்சியின் தலைவர் பதவியில் இருந்து பங்காரு லட்சுமணன் விலகியிருந்தார். இந்தநிலையில், இவ்வழக்கு தொடர்பான விசாரணை முடிவடைந்து நேற்றுமுந்தினம் டில்லி மத்திய புலனாய்வுக்கழக நீதிமன்றம் பங்காரு லட்சுமணனை குற்றவாளி என்று அறிவித்தது. (வ)

# கோவா, ராஜஸ்தான், உத்தரகாண்ட் மாநிலங்களுக்கு புதிய ஆளுநர்கள்

இந்தியாவில் கோவா, ராஜஸ்தான் மற்றும் உத்தரகாண்ட் ஆகிய மாநிலங்களுக்கு புதிய ஆளுநர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

காங்கிரஸ் கட்சியின் உயர் மட்டக் குழுக் கூட்டம் கடந்த வெள்ளிக் கிழமை தலைநகர் டில்லியில் நடைபெற்றது.

பிரதமர் மன்மோகன் சிங், தலைவர் சோனியா காந்தி ஆகியோர் பங்கேற்ற இந்தக் கூட்டத்தில், நாட்டின் தற்போதைய அரசியல் நிலவரம் மற்றும் மாநில ஆளுநர்கள் நியமனம் குறித்து விவாதிக்கப்பட்டதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

மேலும் இந்த விவாதத்தின் அடிப்படையில் கோவா, ராஜஸ்தான், உத்தரகாண்ட் ஆகிய மாநிலங்களில் உள்ள ஆளுநர்கள் மாற்றப்பட்டுள்ளனர்.

இதுகுறித்து ஜனாதிபதி மாளிகை வட்டாரங்கள் வெளியிட்ட தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

சிறப்புப் பாதுகாப்புப் படையின் முன்னாள் தலைவர் வாஞ்சு, கோவா மாநில ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ளார்.

மத்தியப் பிரதேச முன்னாள் அமைச்சரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான அஜிஸ் குரேஷி, உத்தரகாண்ட் மாநில ஆளுநராகவும் உத்தரகாண்ட் ஆளுநராக உள்ள மார்க்கரேட் ஆல்வா ராஜஸ்தான் ஆளுநராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர் என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்க இரகசிய சேவைக்கான உத்தியோகத்தருக்கு புதிய ஒழுங்கு




அமெரிக்க ஜனாதிபதி முதலான பிரமுகர்களுக்குப் பாதுகாப்பு வழங்குவதற்குப் பொறுப்பான அமெரிக்க இரகசிய சேவை உத்தியோகத்தர்களுக்கு புதிய ஒழுங்குவிதிகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

இதன்படி, இரகசிய சேவை உத்தியோகத்தர்கள் வெளிநாட்டுப் பயணங்களில் கடமையிலிருக்கும் போது மதுபானம் அருந்துதல், மதிக்கப்படமுடியாத இடங்களுக்குச் செல்லுதல், ஹோட்டல் அறைகளுக்கு வெளிநாட்டவர்களை அழைத்துவருதல் என்பன தடுக்கப்படும்.

கொலம்பியாவில் அண்மையில் நடைபெற்ற பிராந்திய உச்சி மாநாட்டுக்காக அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா அங்கு செல்வதற்கு முன்னர் அங்கு சென்றிருந்த அமெரிக்க இரகசிய சேவை உத்தியோகத்தர்கள் 12 பேர் மதுபோதை மற்றும் பாலியல் குற்றச்சாட்டுக்களுக்கு ஆளாகியுள்ளனர்.

இதனால் அவர்களில் சிலர் ராஜினாமாச் செய்துள்ளனர். ஏனையோர் ஒழுக்காற்று நடவடிக்கையை எதிர்கொள்கின்றனர்.

இந்த நிலையில் இது போன்ற சம்பவங்கள் இடம் பெறுவதைத் தடுப்பதற்காக புதிய ஒழுங்கு விதிகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

இதேவேளை, 2011 ஆம் ஆண்டு எல்சல்வடோருக்குச் சென்ற தமது உத்தியோகத்தர்கள் சிலர் துகிலுரி நடன விடுதிக்குச் சென்றதாகவும் மற்றும் விபச்சாரிகளுக்காக பணம் செலவிட்டதாகவும் வெளியான செய்திகள் குறித்து தாம் விசாரணை நடத்துவதாக அமெரிக்க இரகசிய சேவை உத்தியோகத்தர்கள் தெரிவித்துள்ளனர். (ம)

## நாடு கடத்தப்பட்டது பின்லேடன் குடும்பம்

அல் குவைதா இயக்கத்தின் தலைவர் ஒசாமா பின் லேடனின் விதவை மனைவியர் மூவரையும் அவர்களின் பிள்ளைகளையும் சவூதி அரேபியாவுக்கு பாகிஸ்தான் நாடு கடத்தியுள்ளது.

கடந்த வருடம் மே 2 ஆம் திகதி பாகிஸ்தானின் அபோதாபாத் நகரில் வைத்து அமெரிக்கப் படையினரின் முற்றுகையின்போது ஒசாமா பின் லேடன் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இந்தச் சம்பவம் இடம்பெற்று ஒரு வருடம் பூர்த்தியாகவுள்ள நிலையில் ஒசாமாவின் குடும்பத்தினரை பாகிஸ்தான் நாடு கடத்தியுள்ளது.

ஒசாமாவின் மனைவிகள் மூவரையும் மூத்த புதல்விகள் இருவரையும் சட்டவிரோதமாக நாட்டுக்குள் நுழைந்த குற்றச்சாட்டின் காரணமாக 45 நாள் தடுப்புக் காவலில் வைக்குமாறும் அதன்பின் நாடுகடத்துமாறும் பாகிஸ்தான் நீதிமன்றமொன்று உத்தரவிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில் அவர்கள் தடுத்துவைக்கப்பட்டிருந்த வீட்டிலிருந்து வியாழக்கிழமை நள்ளிரவு மினி பஸ் ஒன்றில் ஏற்றிச் செல்லப்பட்டனர் என்றும் விசேட விமானமொன்றின் மூலம் சவூதி அரேபியாவுக்கு அனுப்பப்பட்டனர் எனவும் தகவல்கள் வெவியாகியுள்ளன.

பாகிஸ்தானிலிருந்து நாடு கடத்தப்பட்டவர்களில் ஒசாமாவின் மனைவியர் மூவர், ஒசாமாவின் 8 பிள்ளைகள், ஒரு பேரப்பிள்ளை ஆகியோர் அடங்குகின்றனர். (ம)

## டமஸ்கஸ்ஸில் குண்டுவெடிப்பு

சிரியாவின் தலைநகர் டமஸ்கஸ்ஸில் இடம்பெற்ற குண்டுவெடிப்பால் 9 பேர் உயிரிழந்தனர் என்று அந்த நாட்டு அரச தொலைக்காட்சி ஒன்று தெரிவித்துள்ளது.

பள்ளிவாசலொன்றுக்கு அருகில் மக்கள் தொழுகை முடிந்து வெளியேறும்போது தற்கொலை குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவத்தில் மேலும் 20 பேர் காயமடைந்துள்ளனர். இறந்தவர்களில் பொது மக்களும் பாதுகாப்புப் படையினரும் அடங்குகின்றனர் என்று செய்திகள் தெரிவிக்கின்றன.

ஹமா நகரில் இடம்பெற்ற சிரிய அரச படையினரின் தாக்குதல்களில் 70 பேர் கொல்லப்பட்டனர் என்று சிரிய எதிர்க் கட்சியினர் தெரிவித்தனர்.

ஜனாதிபதி பஷார் அல் அஷாத்துக்கு எதிராக கடந்த வருடம் மார்ச் மாதம் ஆர்ப்பாட்டங்கள் ஆரம்பமாகின. இதனை அடுத்து மூண்ட மோதல்களால் சுமார் 9000 பேர் உயிரிழக்கின்றனர் என்று ஐ.நா. புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. (ம)

## பிரான்ஸில் அதிகரிக்கும் வேலையில்லாத் திண்டாட்டம்

பிரான்ஸில் 1999ஆம் ஆண்டில் 16 ஆயிரத்து 600 என்ற அளவில் இருந்த வேலையில்லாத் திண்டாட்டம் தற்போது 2.88 மில்லியனாக உயர்ந்துள்ளது.

2007ஆம் ஆண்டில் நடந்த தேர்தலின் போது சர்கோசி வேலையில்லாத் திண்டாட்டம் 5 சதவிகிதமாக குறைக்கப்படும் என உறுதி அளித்தார்.

ஆனால், தற்போது வேலையில்லாத் திண்டாட்டம் 9.3 சதவீதம் அதிகரித்துள்ளது.

அத்துடன் ஏனைய புள்ளி விவரங்களை கணக்கில் எடுத்துக் கொண்டால் வீட்டுப் பொருள்களுக்கான விற்பனை சதவிகிதமும் கடந்த மாதத்துடன் ஒப்பிடுகையில் 2.9 சதவிகிதம் சரிந்து காணப்பட்டது.

இந்த நிலையில் சர்வதேச நாணய நிதியத்தின் சமீபத்திய மதிப்பீட்டின் படி, ஐரோப்பிய ஒன்றிய கூட்டமைப்பில் உள்ள நாடுகளின் பொருளாதாரத்தில் பிரான்ஸ் இரண்டாம் இடம் வகிக்கின்றது.

இந்த வருடம் 0.5 சதவிகிதம் வளர்ச்சி பெறும் என்று நாணய நிதியம் கணித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ம)

**வீட்டுப் பொருள்களுக்கான விற்பனை சதவிகிதமும் கடந்த மாதத்துடன் ஒப்பிடுகையில் 2.9 சதவீதம் சரிந்து காணப்பட்டது.**

## ஆசிய பசுபிக் பிராந்தியத்துக்கு அமெரிக்கப் போர்க் கப்பல்கள்

### நகர்த்துவதற்கு ஒப்பந்தம்



ஜப்பான் அரசு அதன் கடற்பரப்பில் இருந்த அமெரிக்காவின் போர்க் கப்பல்களை, ஆசிய பசிபிக் பிராந்தியத்துக்குள் நகர்த்த முடிவு செய்துள்ளது. இதற்கான ஒப்பந்தமும் கைச்சாத்தாகியுள்ளது.

இது குறித்து ஜப்பான் வெளிவிவகாரத்துறை அமைச்சர் கொய்ச்சிரோ கெம்பா, இது ஒரு முன்னேற்றகரமான சாதனை என்று தெரிவித்தார்.

இதேநேரம் ஜப்பானின் பாதுகாப்புத்துறை அமைச்சர் நவோனி டனாகா கூறுகையில், இந்த ஒப்பந்தத்தின் மூலம் அமெரிக்க படையினரால் கட்டாயமாக மேற்கொள்ளப்பட்டு வந்த குற்றங்களை தடுத்து நிறுத்த முடியும் என்றும் அமைதியை நிலை நாட்டும் செயற்பாடுகளை உறுதிப்படுத்த முடியும் என்றும் தெரிவித்துள்ளார்.

இந்த ஒப்பந்தம் ஜப்பான் பிரதமர் நோடா வாஷிங்டனுக்கு பயணம் மேற்கொண்டிருந்தபோது கையெழுத்தானது. இந்த இரு தரப்பினரும் ஒகினவாவில் உள்ள ஃபுதென்மா இராணுவ தளத்தை மாற்றுவது தொடர்பாகவும் சம்மதம் தெரிவித்துள்ளனர். (ம)

## ஒபாமாவுக்காக கிளிண்டன் திரட்டுகிறார் நிதி

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் ஜனநாயகக் கட்சி சார்பில் போட்டியிடும் பராக் ஒபாமா தேர்தல் செலவுக்காக நிதி திரட்டி வருகிறார்.

இதற்காக அவரது ஆதரவாளர்கள் விருந்து நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்துள்ளனர். இதில் பற்றுச் சீட்டு விற்பனை மூலம் வசூலாகும் பணம் தேர்தல் நிதியில் சேர்க்கப்படுகிறது.

இத்தகைய நிகழ்ச்சிகளில் முன்னாள் ஜனாதிபதியான பில் கிளிண்டன், கருத்து வேறுபாட்டின் காரணமாக கலந்து கொள்ளாமல் இருந்தார்.

இந்த நிலையில் வாஷிங்டனில் நடைபெற்ற நிதி திரட்டும் நிகழ்ச்சியில் ஒபாமாவும், பில் கிளிண்டனும் பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த விருந்தை கிளிண்டனின் நண்பர் ஒருவரே ஏற்பாடு செய்திருந்தார். (ம)



அமெரிக்காவின் ஜேக்சன் நகரில், குடியேற்றத்துறையில் மேற்கொள்ளப்பட வேண்டிய சீர்திருத்தங்கள் குறித்து ஆலோசனை நடத்தும் பெக்கி குர்ரி (வலது) கல்விக்குழு தலைவர் ஜான் மோரே. (ம)

## உயிருடன் புதைக்கப்பட்ட இளைஞன்

டமாஸ்கஸ், ஏப்.30

சிரியாவில் ஜனாதிபதி பஷர் அல் அசாத்தின் ஆதரவாளர்கள் இளைஞன் ஒருவனை உயிருடன் மண்ணுக்குள் புதைத்த சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

அப்போது மக்கள் கூட்டத்துக்குள் சக்தி வாய்ந்த குண்டு வெடித்தது. அதில் 11 பேர் உடல் சிதறி பலியாகினர், 28 பேர் காயம் அடைந்தனர். இதேபோன்று டமாஸ்கஸ், பனியாஸ் உள்ளிட்ட பல இடங்களில் போராட்டக்காரர்கள் கூடிய இடங்களில் குண்டுகள் வெடித்தன.

இந்தச் சம்பவங்களுக்கு மத்தியில் இளைஞர் ஒருவன் நடுத்தெருவில் வைத்து தாக்கப்பட்டு, குழி தோண்டப்பட்டு புதைக்கப்பட்டான்.

இந்த நேரத்தில் ஐ.நாவின் பிரதிநிதிகள் சிலரும் அங்கு கூடியிருந்தனர், இளைஞனைக் காப்பாற்ற பல்வேறு முயற்சிகள் எடுத்தும், அது தோல்வியில் முடிந்தது.

இந்த தாக்குதலுக்கு ஐ.நா. பொது செயலாளர் பான் கி மூன் கண்டனம் தெரிவித்துள்ளார். ச

அரசின் இதுபோன்ற செயல்கள் சமாதான நடவடிக்கைக்கு ஊறு விளைவிக்கும் எனவும் கூறியுள்ளார். ஆனால் இதனை சிரியா அரசு மறுத்துள்ளது. (ம)

## 4 பேரைத் துப்பாக்கி முனையில் சிறைப்பிடித்தவர் கைதானர்

பிரிட்டன், ஏப்.30

மத்திய லண்டனில் உள்ள அடுக்குமாடி குடியிருப்பில் துப்பாக்கி முனையில் நான்கு பேரைச் சிறைப் பிடித்து வைத்திருந்த நபர், நீண்ட போராட்டத்துக்குப் பின்னர் கைது செய்யப்பட்டார். சிறைப் பிடித்த பின் அங்கு காஸ் சிலிண்டர்களை வெடிக்கச் செய்வதாகவும் அச்சுறுத்தி வந்துள்ளார்.

இது குறித்து லண்டன் பொலிஸ் செய்தித் தொடர்பாளர் கூறியதாவது:-

டாட்டென்காம் கோர்ட் சாலையில் உள்ள அடுக்கு மாடி குடியிருப்பில் 100 மீற்றர் இடைவெளியில் இந்தச் சம்பவம் நடந்தது.

5 ஆவது மாடியிலிருந்து ஜன்னல் வழியாக சத்தம் மட்டுமே வந்தது. ஏனைய விவரங்கள் எதுவும் அப்போது தெரிந்திருக்கவில்லை. இந்த நிலையில் லண்டன் பொலிஸாரின் நீண்ட முயற்சிக்குப் பின், சிறைப் பிடித்து வைத்திருந்த நபர் கைது செய்யப்பட்டார்.- என்றார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலேசியாவில் தேர்தல் சீர்திருத்தம் செய்யுமாறு கோரி மக்கள் பேரணி


மலேசியாவில் விரைவில் தேர்தல் நடைபெற உள்ள நிலையில் தேர்தல் சீர்திருத்தங்களில் மாற்றம் கொண்டு வர வேண்டும் என்று ஒருதரப்பினர் போராட்டம் நடத்தி வருகின்றனர். தலைநகர் கோலாலம்பூரில் இதனை வலியுறுத்தி நடைபெற்ற போராட்டத்தில் பொலிஸ் வாகனத்தை கவிழ்க்கும் போராட்டக்காரர்கள். (ம)

## தடியடி நடத்தினர் பொலிஸார்

கோலாலம்பூர், ஏப்.30

தேர்தல் சீர்திருத்தம் கோரி, மலேசியாவில் ஆயிரக் கணக்கானோர் திரண்டு பேரணியில் ஈடுபட்டனர்.

பொலிஸார் தடியடி நடத்தியும், கண்ணீர்ப் புகைக் குண்டுகளை வீசியும் பேரணியில் ஈடுபட்டவர்களை விரட்டி அடித்தனர்.

மலேசிய தலைநகர் கோலாலம்பூரில், தேர்தல் சீர்திருத்தம் கோரி, எதிர்க் கட்சிகள் ஆதரவுடன், தன்னார்வ அமைப்பு ஒன்றின் தொண்டர்கள், சுதந்திர சதுக்கத்தில் பேரணி நடத்த முடிவு செய்திருந்தனர்.

தேர்தலுக்கான வாக்காளர் பட்டியலில், போலி வாக்காளர்கள் இடம் பெற்றுள்ளனர் என்றும், தேர்தல் ஆணைக் குழு ஒரு தலைப் பட்சமாக செயல்படுவதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

பேரணிக்கு, நகர நிர்வாகம் அனுமதி மறுத்து விட்ட நிலையில் வேறு பகுதிகளில் பேரணி நடத்த, அதன் அமைப்பாளர்கள் மறுத்து விட்டனர்.

இந்த நிலையில், திட்டமிட்டபடி, நேற்று முன்தினம் காலை பேரணி நடத்த, 25 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர், சுதந்திர சதுக்கம் அருகே திரண்டனர். இவர்களில், வழக்கறிஞர்கள், கல்வியாளர்கள், எதிர்க்கட்சியினர் என பலரும் கலந்து கொண்டனர்.

பேரணி நடத்த தடை விதித்திருப்பது குறித்து, பொலிஸார் தெரிவித்தனர். ஆனால், அதை அவர்கள் பொருட்படுத்தவில்லை. இதையடுத்து, பேரணிக்கு வந்தவர்கள் மீது, பொலிஸார் தடியடி நடத்தினர்.

இருப்பினும், அவர்கள் அங்கிருந்து கலையாமல் இருந்ததை அடுத்து, கண்ணீர்ப் புகைக் குண்டுகளை வீசியும், தண்ணீரை பாய்ச்சி அடித்தும், அவர்களை விரட்டினர். (ம)

# பின்லேடனைச் சுட்டுக் கொன்ற ஆவணங்களை வெளியிட கோரிய மனு தள்ளுபடி

ஒசாமா பின்லேடனைச் சுட்டுக் கொன்ற படங்கள் மற்றும் வீடியோவை வெளியிடக் கோரி தொடரப்பட்ட வழக்கை அமெரிக்க நீதிமன்றம் தள்ளுபடி செய்தது.

பாகிஸ்தான் அபோதாபாத் நகரில் கடந்த ஆண்டு மே 2 ஆம் திகதி ஒசாமா பின்லேடன் சுட்டுக் கொல்லப்பட்டார்.

அந்தக் கடைசி நேரத்தில் என்ன நடந்தது என்பது தொடர்பான படங்கள், வீடியோவை வெளியிடக் கோரி, நீதித்துறை கண்காணிப்பு என்ற சமூக அமைப்பினர் அமெரிக்க நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தனர்.

தகவல் அறியும் சட்டத்தின் கீழ் தொடரப்பட்ட இந்த வழக்கை நீதிபதி ஜேம்ஸ் இ போஸ்பெர்க் விசாரித்தார். இந்த வழக்கின் தீர்ப்பு கடந்த வியாழக் கிழமை வழங்கப்பட்டது.

தீர்ப்பில் நீதிபதி கூறியிருப்பதாவது:- ஆயிரம் வார்த்தைகளுக்கு ஒரு படம் சமம் என்று சொல்வார்கள். சுட்டுக் கொல்லப்பட்ட பின்லேடனின் படங்களை வெளியிட்டால், அமெரிக்கர்களுக்கு எதிராக வன்முறை ஏற்படும் வாய்ப்பு உள்ளது.

அமெரிக்காவின் பாதுகாப்பை முன்னிட்டு இந்த படங்கள், தகவல்களை தகவல் அறியும் சட்டத்தின் கீழ் பெற முடியாது. அவை தடை செய்யப்பட்ட விடயங்கள். எனவே பின்லேடன் சுட்டுக் கொல்லப்பட்ட காட்சிகள், அவரது இறுதிச் சடங்கு தொடர்பான படங்கள் தகவல்கள் எதையும் வெளியிட முடியாது.- என்று கூறித் தீர்ப்பு வழங்கியுள்ளார். (ம)

# இரகசிய பேச்சு நடத்திய அமெரிக்கா– தலிபான்கள்

ராஜீய விவகாரங்களுக்காக கட்டார் நாட்டில் திறக்கப்பட்ட தலிபான்களின் அலுவலகத்தில், அமெரிக்கா - தலிபான்கள் இடையே இரகசிய பேச்சு நடைபெற்றுள்ளது என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

பேச்சுகள் குறித்து முழு விவரங்கள் எதுவும் தெரியாத நிலையில், இரு தரப்பும் தங்களது நிலைப்பாட்டில் உறுதியாக இருக்கின்றன என்று தகவல்கள் வெளிவந்துள்ளன.

ஐந்து நபர்கள் கொண்ட தலிபான் குழுவினர் மூன்று வாரங்கள் முன்பே கட்டாருக்குச் சென்று விட்டனர். இந்தக் குழுவுக்குத் தலைவராக தய்யப் ஆகா உள்ளார். ஆப்கானிஸ்தான் தலிபானின் செய்தித் தொடர்பாளராக உள்ள இவர், ஆப்கன் தலிபான் தலைவர் முல்லா முகமது உமரின் மைத்துனரும் ஆவார். சவுதி அரபு நாட்டுக்கான தலிபானின் தூதுவராக இருந்த மௌலவி ஷஹாபுதீன் திலாவர் இந்தக் குழுவில் இடம் பெற்றுள்ளார்.

இந்தப் பேச்சின் போது, பாகிஸ்தானும் இடம்பெற வேண்டும் என்று அமெரிக்காவும் தலிபானும் விரும்பியது. ஆனால், ஆப்கானிஸ்தானின் கடும் எதிர்ப்பைத் தொடர்ந்து பேச்சில் பாகிஸ்தான் கலந்துகொள்ளவில்லை,

சமீபத்தில் கட்டாருக்குச் சென்ற ஆப்கானிஸ்தானின் வெளிவிவகாரத் துறை அமைச்சர் தலிபான் பேச்சுக் குழுவினரை சந்திப்பார் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அவர்களை சந்திக்காமல் அவர் திரும்பிவிட்டார்.

தலிபானின் அலுவலகத்துக்கு எந்த வித அங்கீகாரமும் தர விரும்பவில்லை என்பதால் அவர் சந்திப்புக்கு ஒத்துழைக்க வில்லை என்று கூறப்பட்டது.

இதற்கிடையில் தலிபான் குழுவினர் கட்டாருக்குச் செல்லும் முன்னர், அந்த இயக்கத்தின் தளபதிகள் ஒரு கூட்டம் நடத்தினர். இந்தக் கூட்டத்தின் போது, பேச்சுகளுக்கு அனுமதி அளிக்கத் தீர்மானம் செய்தனர்.

அதே சமயத்தில், ஆப்கானிஸ்தான் அரசுக்கு எதிராகவும் அமெரிக்கா தலைமையில் உள்ள படைகளுக்கு எதிராகவும் நடத்திவரும் தாக்குதல்களைத் தொடர்வது என்றும் தலிபான் தளபதிகள் தீர்மானம் செய்திருந்தனர்.

தலிபானுடன் அமெரிக்கா பேச்சு நடத்துவதை ஆப்கானிஸ்தான் அரசு வரவேற்கவில்லை என்று தலிபான் கூறி வருகிறது.

ஆப்கானிஸ்தானில் இருக்கும் வெளிநாட்டு இராணுவப் படைகளை முற்றிலும் அகற்றினால்தான் தலிபான் போர் நிறுத்தம் என்பதைப் பற்றி சிந்திக்கும் என்று தலிபான் தளபதிகள் கூறியுள்ளனர். (ம)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு
24 * 08 * 1946

உதிர்வு
31 * 03 * 2012

அமரர்

### கனகசபை குணரத்தினம்
(குணம்)
(மண்கும்பான்)

தூய கரவருடம் துளிந்த பங்குனியில்
மேய பூர்வபக்க வளர்பிறை
நவமித்திதியில் - நாயகனென்று
நல்லான் குணரத்தினம் நானிலந் தனைநீத்து
வல்லானடி சேர்ந்த நாள்

**அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும்**
**அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும்**
**கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.**

இல. 87, சிவன் பண்ணை
றோட், ரெலிகொம் அருகில்,
யாழ்ப்பாணம்

தங்கள் பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள்

## 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில்
29★05★1923

விண்ணில்
14★04★2008

திதி: 30.04.2012

அமரர்

### ஏகாம்பரம் சோமசுந்தரம்
(சோமையா)


ஆண்டு நான்கு போனாலும் ஆறுமோ என்மனது
மீண்டும் இங்கு வந்து எனக்கு ஆறுதல் கூறுமையா
வேர் சாய்ந்த உன் உடல் நீறாகிப் போனதையா
கற்றவர்கள் மத்தியில் கலங்காது நின்றவரே
உற்றவர்கள் விம்மி அழ என்னை விட்டு ஓடியதேன்
ஈரவிழி காயவில்லை நின்முகமோ காணவில்லை
தூரவழி என்னை விட்டு எங்கு நீர் சென்றீர் ஐயா

'ராஜஸ்தான்',
வதிரி,

மனைவி,
சோ. இராஜேஸ்வரி,
(தாத்தோ)

(C/1334) (6,9,10)

## நெஞ்சை விட்டகலாத மூன்றாம் ஆண்டு நினைவலைகள்



மலர்வு
29 ★ 10 ★ 1992

உதிர்வு
05 ★ 03 ★ 2009

திதி : 30.04.2012

### சிவலிங்கம் ஜனோசன்
(அண்ணினா)

எங்கள் பாசம் மிக்க பிள்ளையாய்
அன்பான சகோதரனாய் எல்லோரிடமும் நண்பனாய் வாழ்ந்து
துள்ளித் திரிந்த அன்புச் செல்வம் அண்ணினா
எங்களை தவிக்கவிட்டுநீ சென்றாயோ ?
ஆண்டுகள் மூன்றானாலும் ஆறாது எங்கள் துயரம்
செல்வமே உன் ஆத்மா சாந்தியடைய
கடவுளைப் பிரார்த்திக்கின்றோம்
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

சி. சிவலிங்கம்
மகேசன் வீதி, நவாலி வடக்கு, மானிப்பாய்

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிரணிக் கட்சிகளின் கூட்டு மே தின

# அறைகூவல் பேரணியும் பொதுக்கூட்டமும்

## 01.05.2012 செவ்வாய்க்கிழமை

**பேரணி:**

பிற்பகல் 1 மணிக்கு நல்லூர் கைலாசபிள்ளையார்
முன்றிலில் தொடங்கி கோயில் வீதி வழியாக மைதானம் வரை

**கூட்டம்:**

சென். றோக் விளையாட்டு மைதானம், பற்றிக்ஸ் வீதி, யாழ்ப்பாணம்.

**தலைமை:**

திரு. இரா. சம்பந்தன் நா.உ.
(தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு)

**உரையாற்றுவோர்:**

கௌரவ ரணில் விக்கிரமசிங்க நா.உ (எதிர்க்கட்சி முதல்வர், ஐ.தே.கட்சி)
திரு. மனோ கணேசன் (ஜனநாயக மக்கள் முன்னணி)
கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ண (நவ சமசமாஜக் கட்சி)
திரு. சிறீதுங்க ஜெயசூரியா (ஐக்கிய சோசலிசக் கட்சி)
திரு. சரத் மன்மேந்திரா (நவசிகல உறுமய)

மற்றும் மனித உரிமை அமைப்பு, தொழிற்சங்கத் தலைவர்களும், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு உட்பட மேற்குறித்த ஏனைய கட்சிகளின் தலைவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களும் உரையாற்றுவர்.

**பிரபல இசைக்குழு அக்னி கலைஞர்களின் பாடல் இசை நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.**

**அறைகூவல் விடுக்கின்றோம் மே நாளில்**
**அனைத்து ஜனநாயக சக்திகளையும் அணிதிரள அறைகூவல் விடுக்கின்றோம்.**

## அரசே! அரசே! அரசே!

- தமிழ்ப்பேசும் மக்கள் நாம், எங்கள் வீட்டுக்குச் செல்வோம்! எங்கள் நிலத்துக்குச் செல்வோம்! இராணுவமே! எங்கள் நிலத்தை எங்களிடம் விட்டு வெளியேறு!
- எங்கள் நிலத்தில் எங்களை வாழவிடு! எம் மண்ணில் எங்களை ஆளவிடு!
- வாழ்க்கைச் செலவைக் கட்டுப்படுத்து! வாழ்க்கைச் செலவுக்கு ஏற்ற ஊதியத்தை வழங்கு!
- வடக்கு, கிழக்கு மாநிலத்தில் தமிழ், முஸ்லிம் மக்களின் ஆளும், தன்னாட்சி உரிமையை அங்கீகரி! அறுபது ஆண்டுகள் ஏமாற்றியது போதும் அரசியல் தீர்வை முன்வை!
- மெனிக்பாம் 6000 அகதிகள் மட்டுமல்ல உள்நாட்டிலும், இந்தியாவிலும் இன்னும் மூன்று இலட்சம் மக்கள், மீளக் குடியமர்த்த நடவடிக்கையெடு!
- தமிழ்த் தேசிய மக்கள் குடிப்பரம்பலைக் குலைக்காதே! சிங்களக் குடிகளைத் தமிழ் நிலத்தில் திட்டமிட்டு குடியேற்றாதே!
- பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்கு! சிறைகளில் அடைத்தோரை விடுதலை செய்!
- காணாமல் போனோரை உரியவரிடம் ஒப்படை! அல்லது அவர்களுக்குப் பதிலளி! அவர்கள் குடும்பங்களுக்கு வாழ்வளி!
- தமிழர் தனி அடையாளத்தை அழிக்காதே! அவர் நிலத்தில் அவர் ஆளும் உரிமையை மறுக்காதே!
- ஏதிலிகள், வாழ்விழந்த பெண்களுக்கு ஆதரவுகொடு! அவர்களை வாழவிடு! போரில் சரணடைந்தோரை அவர்குடும்பத்திடம் ஒப்படை! அல்லது அவர்களுக்கு பதில் சொல்லும் கடமையை நிறைவேற்று!
- எங்கள் மத உரிமையைப் பறிக்காதே! எங்கள் கோயிலில் புத்தர் சிலை வைக்காதே!
- வடக்கு, கிழக்கு நிலத்தில் தமிழ் - முஸ்லிம் மக்களின் விவசாய நிலங்களைக் கையளி! தமிழர் நிலத்தில் சிங்களக் குடியேற்றத்தை நிறுத்து!
- தமிழ்ப் பிரதேசக் கடலில் மீனவர் மீன்பிடிக்க, தொழில் செய்யத் தடையை நீக்கு! அங்கே சிங்கள மீனவரைக் குடியேற்றாதே!
- இந்திய, இலங்கைத் தமிழ் மீனவரை மோதவிட்டு வேடிக்கை பார்க்காதே!
- இலங்கைக் கடல்வளத்தை மாற்றான் சூறையாட அனுமதிக்காதே! தென்னை - பனை வள உழைப்போருக்கு ஊதியத்தை உயர்த்து; ஆதாயத்தைப் பகிர்ந்து கொடு!
- ஊடக சுதந்திரத்தைப் பறிக்காதே! அவர்களுக்கு பாதுகாப்பு வழங்கு!
- 17ஆவது அரசியலமைப்பு திருத்தத்தை மீள நிறைவேற்று!
- வலி.வடக்கு, சம்பூர் உட்பட்ட அகதிகளை மீளக்குடியேற அனுமதி!
- வேலையற்ற பட்டதாரிகள், தொண்டர் ஆசிரியர்கள் மற்றும் வேலையற்றோருக்கு வேலை வழங்கு!

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, எதிர்க்கட்சிகளின் மேதினக் கூட்டமைப்பு**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேதின நிகழ்வுகள்

அகில இலங்கை அரச பொது ஊழியர் சங்கத்தின் மேதினக் கூட்டம் நாளை செவ்வாய்க்கிழமை காலை 9மணிக்கு கல்முனை வை.எம்.சி.ஏ. மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ம-14)

* * *

யாழ்ப்பாணம், ஏப்.30

தொழிலாளர் ஒத்துழைப்புக் குழுவின் ஏற்பாட்டில் மேதினக் கூட்டம் நாளை செவ்வாய்க்கிழமை மாலை 4 மணிக்கு வேம்படி மக ளிர் கல்லூரிக்கு அண்மையில் அமைந்துள்ள டி.எம்.ஐ. தனியார் கல்வி நிறுவனத்தில் சொ. சிவபாலன் தலைமையில் நடைபெறவுள்ளது. (ம-14)

* * *

புதிய ஜனநாயகக் கட்சியின் ஏற்பாட்டில் நாளை செவ்வாய்க்கிழமை ஸ்ரான்லி வீதியில் உள்ள பட்டப்படிப்புகள் கல்லூரி வளாகத்தில் பிற்பகல் 3.30மணிக்கு புதிய ஜனநாயக மாக்சிய- லெனினிசக் கட்சியின் வடபிராந்திய செயலாளர் கா.செல்வம் கதிர்காமநாதன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வின் ஆரம்பத்தில் சுன்னாகம் சந்தை வளாகத்திலிருந்து பிற்பகல் 2 மணிக்கு சைக்கிள் பேரணியும் இடம் பெறும். (ம-15)

* * *

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் மேதினக் கூட்டம் நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ். மாநகர சபைத் திடலில் நடைபெறவுள்ளது. (ம-51)

* * *

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் மேதினக் கூட்டம் நாளை செவ்வாய்க் கிழமை பிற்பகல் 3மணிக்கு கரவெட்டி சாமியின் அரசடி வைரவர் ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்துக்கான ஊர்வலம் இளைப்பாறிய காணி உத்தியோகத்தர் எஸ். செல்வரத்தினம் தலைமையில் நெல்லியடி அரசடிச் சந்தியில் இருந்து ஆரம்பமாகவுள்ளது. (ம-8)

# நீர்வேலி இளைஞன் பிரான்ஸ் விபத்தில் சாவு

யாழ்ப்பாணம், ஏப். 30

பிரான்ஸில் நேற்று இடம்பெற்ற கார் விபத்தில் தனியார் நிறுவனம் ஒன்றில் பணியாற்றும் நீர்வேலி வடக்கைச் சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவர் மரணமானார்.

இந்த விபத்து பிரான்ஸ் பொபினி என்னும் இடத்தில் இடம்பெற்றது. விபத்தில் நீர்வேலி வடக்கைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையான பொன்னம்பலம் கருணாகரன் (வயது-32) என்பவரே மரணமானவராவார்.

நேற்று அதிகாலை தனது பணிக்கு நடந்து செல்லும் போது வீதியைக் கடக்க முற்பட்டுள்ளார். இந்த நிலையில் வேகமாக வந்த கார் ஒன்று அவரைப் பந்தாடியது. படுகாயமடைந்த கருணாகரன் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டபோது இடைவெளியில் மரணமானார் எனத் தெரிவிக்கப்பட்டது. (ம-13)

உதயன் விளம்பரத் தொடர்புக்கு
advt@uthayan.com
0215671111

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



2011 ஆம் ஆண்டு க.பொ.த (சா/த) பரீட்சையில் முதன்மைச் சித்திப்பெற்ற செல்வி சாந்திகா ஞானேஸ்வரன் (4A, 2B, 2C) செல்வி நிதர்சி ஜெயராஜா (A,2B,6C) ஆகியோரைப் பாராட்டுவதுடன் இப் பரீட்சையில் சித்திபெற்ற செல்வி ஜெசிந்தா விஜய ராசா, செல்வி லசிந்தனா தவராஜா அவர் களையும் பாராட்டி வாழ்த்துகிறோம்.

மேற்படி உயர் பெறுபேறுகளைப் பெற்ற மாணவிகள் பிரத்தியேக வகுப்புகளுக்குச் செல்லாது பாடசாலையிலேயே முழுக் கல்வியையும் கற்ற போதிலும், ஆங்கில பாடத்திலும் அதிபர், ஆசிரியர்களின் முயற்சியினால் ஆங்கில ஆசிரியர் இன்றி இரு மாணவர்கள் திறமைச் சித்தி பெற்றுள்ளமையும் குறிப் பிடத்தக்கது.

இவர்கள் பட்டங்கள் பல பெற்றிட பாரதனில் புகழோங்கிடப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
யா/இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலயம், வரணி.

(C/2982) (6,9,10)

## கண்ணீர் அஞ்சலி



இராசா ஜெயராசா

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்பிரார்த்திக்கின்றோம்.

சன்றைஸ் ஸ்ருடியோ அன் ஸ்ரேசனறிஸ், டச்சு வீதி, உடுவில்.

## மணமகள் தேவை

யாழ். R.C கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 32 வயதுடைய யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் நிறுவனத்தில் முகாமையாளராகப் பணிபுரியும் மணமகனுக்கு படித்த பொருத்தமான மணமகள் தேவை.

தொடர்பு : 075 2895200

## மரண அறிவித்தல்

### இராசா ஜெயராசா



சங்கானையைப் பிறப்பிடமாகவும், தேவாலய வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட இராசா ஜெயராசா 29.04.2012 அன்று கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இராசா மற்றும் பாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை மற்றும் சரஸ்வதி தம்பதியரின் அன்பு மருமகனும், சறோஜா தேவியின் அன்புக்கணவரும் பிரதீபனின் அன்புத் தந்தையும் இந்திரன் (இளைப்பாறிய உப அதிபர் யா/உடுவில் முருக மூர்த்தி வித்தியாசாலை), திலகராணி, கனகராஜா (சன்றைஸ் ஸ்ரூடியோ அன்ட் ஸ்ரேசனறி, டச்சு வீதி, உடுவில்), ஜெயக்குமார், சகுந்தலா (ஆசிரியை யா/தாவடி அ.த.க. பாடசாலை) ஆகியோரின் சகோதரனும் மங்கயற்கரசி, சிவஇன்பநாயகி, சச்சிதானந்தம், நிர்மலாதேவி, பரமானந்தம், விவேகானந்தன் (கனடா), ஆனந்தராசா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (30.04.2012) திங்கட்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரின் இல்லத்தில் பாஸ்ரர் சாம் தேவராஜா அவர்களின் தலைமையில் ஒப்புக்கொடுக்கப்பட்டு சங்கானை கரைச்சி மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தேவாலய வீதி, சங்கானை

தகவல்:
பிரதீபன் (மகன்)

## அகவை 60 இல் அகமகிழ்ந்து வாழ்த்திடுவோம்

திரு. திருமதி பஞ்சலிங்கம் தயாவதி
தம்பதிகளில் பஞ்சலிங்கத்தின்
அறுபது அகவை நன்னாளினை இனிதே
கொண்டாடிட இன்று



அள்ளி அள்ளி அன்பு மழை
பொழிந்திட அறுபதில்
அகவைதனை திரை விலக்கி
அங்கதன் அவன் துணை
கொண்டு ஆறு நூறு
ஆசி பெற்று மகிழ்ந்திட
வாழ்த்திடும்



பிள்ளைகள்:
பிரியங்கா, பிரிந்திகா,
தணிகா, தாரகா,
பெறாமக்கள்: சுரேஸ்குமார்,
தீபிகா குடும்பம்
தீபன் (அமெரிக்கா) மற்றும்
குடும்பத்தினர்.

இராஜஸ்தலம்
அல்வாய்,
077 0274 042

## மரண அறிவித்தல்

### திருமதி தம்பித்துரை சின்னம்மா

*(ஓய்வு பெற்ற ஆசிரியை, மயிலணி சைவ வித்தியாசாலை, சுன்னாகம்)*



உடுவிலைப் பிறப்பிடமாகவும், சுன்னாகம் கிழக்கை வசிப்பிடமாகவும் தற்போது கனடாவில் வசித்தவருமாகிய திருமதி தம்பித்துரை சின்னம்மா 28.04.2012 சனிக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் - சின்னத்தங்கச்சி தம்பதியரின் மகளும் காலஞ்சென்றவர்களான அம்பலவி - மூத்தபிள்ளை தம்பதியரின் மருமகளும், அ.தம்பித்துரையின் (ஓய்வுபெற்ற உடற்பயிற்சி ஆசிரியர்) அன்புமனைவியும், பத்மாசினி (கனடா), தயாளன் (கனடா), சிவரூபன் (நெதர்லாந்து), சுமதி (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயும், சீவரத்தினம் (கனடா), சாந்தி (கனடா), வனஜா (நெதர்லாந்து), தயாபரன் (கனடா) ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (02.05.2012) புதன்கிழமை மார்க்கம், ரொறன்ரோ கனடாவில் பத்மாசினியின் இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

கனடா T.P : 905 4723794

தகவல்:
அ. தம்பித்துரை (கணவர்)
( ஓய்வு பெற்ற உடற்பயிற்சி ஆசிரியர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவலைகளுக்கு விடை கொடுங்கள்

(7)

### இந்த நாள் என்னுடையது

'புத்திசாலிக்கு ஒவ்வொரு நாளும் புதிய வாழ்க்கைதான்' இந்த வாசகம் ஒருவருடைய மனச்சோர்வை நீக்கி, தொடர்ந்து வாழ்வதற்கான துணிவை அவருக்கு வழங்கியது. தற்செயலாக, ஒரு கட்டுரையில் இடம்பெற்றிருந்த அந்த வாசகத்தை அவர் படித்தார்.

தன்னைக் கவர்ந்த வாசகத்தை அச்சிட்டுத் தன் கார்க் கண்ணாடியில் ஒட்டி வைத்தார். தான் காரோட்டிச் செல்கின்றபோது அந்த வாசகம் தன் கண்ணில் பட்டுக் கொண்டிருக்க வேண்டும் என்பது அவருடைய விருப்பம். அவருக்குத் தேவையான உந்து சக்தியை வழங்கிக் கொண்டிருக்கிற வாசகமாயிற்றே அது! அந்த மனிதர் - டேல் கார்னகி! உலகெங்கும் உள்ள இளைஞர்களைத் தன் எழுத்தால் ஊக்குவித்துக் கொண்டிருப்பவர்!

'என் கையில் இருக்கும் இன்று ஒரு புதிய வாழ்க்கை' என்று தனக்குள் சொல்லிக் கொள்வார் டேல்கார்னகி. தனிமை பற்றிய அச்சத்தை, தேவைகள் குறித்த அச்சத்தை அவரால் வெல்ல முடிந்தது. அந்த வாசகம் அவரை வெற்றியாளராக்கியது. அது வாழ்வதற்கான ஆர்வத்தை அவருக்கு வழங்கியது. 'வாழ்க்கை எதை வேண்டுமானாலும் கொண்டு வரட்டும். இந்த வாழ்க்கையை நான் நேசிக்கிறேன்', என்பார் அவர்.

*'ஒவ்வொரு நாளும் புத்தம் புதிது! அதை*
*உவகையுடன் வரவேற்கப் பாருங்கள்'*

ஹோரேஸ் என்கிற ரோமானிய கவிஞர் தம்முடைய கவிதையொன்றில் வெகு நேர்த்தியாகச் சொல்லியிருக்கிறார்.

*இந்தநாள் என்னுடையது என்று*
*சொந்தம் கொண்டாடுகிறவன்*
*மகிழ்ச்சியோடு வாழ்கிறான், அவன்*
*நாளை பற்றிக் கவலைப்படுவதில்லை*
*தன் வாழ்க்கையைத் தான்*
*இன்றே அவன் வாழ்ந்து விடுகிறானே!*
*என்று,*

### மகிழ்ச்சியைத் தவறவிடாதீர்கள்

இன்று நிறைவான வாழ்க்கையை வாழ்ந்தவர்கள் நாளையைப் பற்றிக் கவலைப்படுவதில்லை. அது எவ்வளவு மோசமானதாய் இருக்கட்டுமே. அவர்களுக்குக் கவலையில்லை.

ஆனால், நடைமுறை வாழ்க்கையில் நம்மால் நிறைவு காணமுடிகிறதே,

*'ஜன்னலுக்கு வெளியே*
*பூத்திருக்கிறது ரோஜா. நாமோ*
*அடிவானத்தில் தேடுகிறோம்*
*அதிசயப் பூந்தோட்டத்தை!*

நம்ப முடியாதவைகளைப் பற்றிய கனவில் யதார்த்தம் தொலைக்கப்படுகிறது. இதுவே நம்முடைய மிகப் பெரிய சோகம், வருந்தத்தக்க உண்மை.

சிறுவனாக இருக்கும் போது பெரியவனாவது பற்றியும், இளமையில் மணவாழ்க்கை பற்றியும், மணமாகி நடுத்தர வயதில் பதவி ஓய்வு பற்றியும், முதுமையில் மரணம் பற்றியும் கவலைப்படுகிறோம். அவ்விதமாய் இன்றைய பொழுதின் இனிமைகளை, இன்றைய தினத்தில் கிடைக்கக் கூடிய மகிழ்ச்சிகளை நாம் தவறவிடுகின்றோம்.

'வாழ்க்கை என்பது வாழ்வதில் இருக்கிறது. அதை நாம் புரிந்து கொள்வதற்குள் அந்த வாழ்க்கையே முடிந்து விடுகிறது' என்பார் ஸ்டீபன் லீகாக். பண்டைய கிரேக்கத்தில் வாழ்ந்த மகாகவி தாந்தே, இப்படிக் கூறுவார்; ''இந்தப் பொழுது இன்னொருமுறை தொடங்கப் போவதில்லை' என்று வாழ்க்கை நம்ப முடியாத வேகத்தில் நம் கையைவிட்டு நழுவிப் போய்க் கொண்டிருக்கிறது. இன்று என்பது விலை மதிக்க முடியாதது. இன்று மட்டுமே உண்மையான உடைமை.

### இன்றைய பொழுதுக்கு நன்றி

மேலை நாட்டுத் தத்துவ மேதைகள் தான் என்றில்லை. நம் நாட்டு மகாகவி காளிதாசனும் கூட விடியல் (Dawn) பற்றிப் பாடியிருக்கிறார்.

*'இன்றைய பொழுதில் இருக்கிறது*
*வாழ்க்கை, வாழ்வின் உயிர்ச் சக்தி*
*இதன்போக்கு மிகக் குறுகியது*
*ஆனாலிது தன்னுள் கொண்டிருக்கிறது*
*மகத்தான உண்மைகளை*
*வளர்ச்சியின் பேரின்பத்தை*
*செயல்களின் மகிமையை*
*அழகின் சிறப்பை*
*நேற்று என்பது கனவு*
*நாளை என்பது கற்பனை*
*நாம் இன்றைய பொழுதை*
*தலை முறையில் வாழ்வோமெனில்,*
*அந்த நேற்றைய கனவு*
*மகிழ்ச்சிக்குரியதாகி விடும்*
*நாளை பற்றிய கற்பனையும்*
*நம்பிக்கை கொண்டுவிடும்*
*இன்றைய பொழுதில்*
*கவனம் வையுங்கள்*
*இன்றைய பொழுதுக்கு*
*நன்றி சொல்லுங்கள்'*

காளிதாசனின் இந்தக் காலை வந்தனம் நம்மைக் கவலையற்றவராக்கி விடுந்தானே!

-சி.எஸ்.தேவநாதன் (தொடரும்)

# உலகைப் பற்றிச் சிந்திப்போம்; சுற்றுச் சூழலைப் பாதுகாப்போம்

## புவி தின நிகழ்வில் அழைப்பு

எரிபொருள் பயன்பாடுகள், பிளாஸ்ரிக் பொருள் பாவனைகள் அதிகரிப்பால் உலகில் வெப்பம் அதிகரித்து வருகின்றது. வெப்ப அதிகரிப்பினால் காலநிலையில் மாற்றம் இயற்கை இடர்கள் போன்ற பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகின்றோம். இயற்கைக்கு உதவக் கூடியதான வகையில் மனிதர்களின் நடவடிக்கை அமைய வேண்டும்.

யாழ்ப்பாணம்,ஏப்.30

4 ஆயிரத்து 500 ஆண்டுகளில் மனித இனம் அழிந்துவிடும் என விஞ்ஞானிகள் அச்சம் தெரிவிக்கும் நிலையில் உலகம் வெப்ப நிலைக்குள் சென்று கொண்டிருப்பதாக யாழ்.சுற்றுச் சூழல் கட்டுப்பாட்டுச் சபைப் பணிப்பாளர் திருமதி ர.விஜிதா தெரிவித்தார்.

சர்வதேச புவி தினத்தை முன்னிட்டு நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் தலைமையில் பிரதேச செயலக மண்டபத்தில் அண்மையில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தெரிவித்ததாவது:-

எரிபொருள் பயன்பாடுகள், பிளாஸ்ரிக் பொருள் பாவனைகள் அதிகரிப்பால் உலகில் வெப்பம் அதிகரித்து வருகின்றது. வெப்ப அதிகரிப்பினால் காலநிலையில் மாற்றம் இயற்கை இடர்கள் போன்ற பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகின்றோம்.

இயற்கைக்கு உதவக் கூடியதான வகையில் மனிதர்களது நடவடிக்கை அமைய வேண்டும்.

இன்று இனம் காணமுடியாத பல்வேறு வகையான நோய்களுக்கு ஆளாகின்றோம். உலகைப்பற்றிச் சிந்திக்காத நமது நடவடிக்கைகளே இதற்குக் காரணமாகும்.

மரங்களைப் பாதுகாக்கத் தவறிவிடுகின்றோம். சூழல் பாதுகாப்புக்கு குந்தகம் விளைவிக்கக் கூடியதான நடவடிக்கைகளில் இருந்து விடுபட்டு மரக்கன்றுகளை நட்டு அவற்றைப் பாதுகாப்பாகப் பர்ாமரித்தால் உலகம் எதிர்நோக்கும் பிரச்சினைகளைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியும்.

மனித குலத்தின் சுபீட்சத்துக்கு நாங்களே எதிரானவர்களாக மாறும் நிலை தவிர்க்கப்பட வேண்டும் - என்றார்.

(எ-7)




உலக புவிதின நிகழ்வில் நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில் நந்தனன், சுற்றுச்சூழல் கட்டுப்பாட்டுப் பணிப்பாளர் திருமதி ஆர்.விஜிதா இயற்கை இடர் நிவாரண முகாமையாளர் ரவி, உதவித்திட்டமிடல் பணிப்பாளர் இ.சுரேந்திரநாதன் ஆகியோர் கலந்துகொண்டனர். (எ-7)

## நிர்வாகிகள் தெரிவு

அச்சுவேலி, ஏப்.30

அரச சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் வலி.கிழக்குப் பிரதேச செயலர் பிரிவுக் கிளையின் வருடாந்த பொதுக் கூட்டத்தில் புதிய நிர்வாகிகள் தெரிவு செய்யப்பட்டனர்.

நிர்வாகிகள் விவரம் வருமாறு:-

வை.குணசேகரம் (ஓய்வுபெற்ற கோட்டக் கல்வி அதிகாரி) தலைவராகவும், மா.ஞானலிங்கம் உபதலைவராகவும், செயலாளராக எம்.புவனேந்திரனும் உபசெயலாளராக த.தங்கராசாவும், பொருளாளராக ஐ.ஜெகநாதனும், கணக்குப் பரிசோதகராக சோ.சிவசுந்தரமூர்த்தியும் தெரிவு செய்யப்பட் டுள்ளனர்.

(எ-11)

***

தொண்டைமானாறு வெளிக்கள நிலையத்தின் ஆண்டுப் பொதுக் கூட்டம் கடந்த 21 ஆம் திகதி யாழ். இந்துக் கல்லூரியில் இடம்பெற்றது.

இந்தக் கூட்டத்தில் புதிய நிர்வாக உறுப்பினர் தெரிவும் இடம் பெற்றது:

தலைவர்- பேராசிரியர் திருமதி எஸ்.குகநாதன், துணைத்தலைவர்- திருமதி எம்.இராஜராஜ், ந.அனந்தராஜ், இணைச் செயலாளர்- எம்.எம். அல்போன்ஸ், சி.சுகுமாரன், பொருளாளர்- ந.உலகநாதன், உப பொருளாளர் - ஆர்.குகநாதன், பத்திராதிபர்- எஸ்.சத்தியநாராயணன், செயற்குழு உறுப்பினர் - மு.இரவீந்திரன், இ.சங்கர், த.சண்முகலிங்கம், பி.சிறீகரன், எ.லோகநாதன், பொ.நாகரட்ணம், வி.சி.அன்பழகன். (எ)

# சிதம்பரபுரம் முருகன் ஆலயத்தின் சிறப்பு பெருமை வாய்ந்தது

## வவுனியா பிரதேச செயலர் புகழாரம்

நெளுக்குளம்,ஏப்.30

சிதம்பரபுரம் திருப்பழனி முருகன் ஆலயத்தின் சிறப்பு பெருமை கொள்ளத்தக்கது. இவ்வாறு தெரிவித்திருக்கிறார் வவுனியா பிரதேச செயலர் எஸ்.சிவபாலசுந்தரன்.

பெருமளவிலான யாத்திரிகர்கள் இங்கு வருவதால் இந்த ஆலயத்தின் பெருமை மேன்மேலும் அதிரித்துள்ளது. மக்களின் பூரண ஒத்துழைப்புடன் சித்திரைப் புத்தாண்டு விழா இங்கு இடம்பெற்றுள்ளது. தற்போது இந்தத் திருத்தலம் யாத்திரிகர் தலமாகவும் உருவெடுத்துள்ளது.

மேலும் பெருமளவு யாத்திரிகர்கள் இங்கு வருகை தர வேண்டும். அவர்களுக்கான வசதிகளை ஏற்படுத்துவதற்கு பொது மக்களின் பூரண ஒத்துழைப்பு அவசியமாகின்றது. ஆலயம் வளர்ச்சியடையும் போது இந்தப் பிரதேசமும் வளர்ச்சியடையும். அத்துடன் அறநெறி மாணவர்களின் கற்கைச் செயற்பாடுகள் வளர்ச்சியடைந்து வருவதை அவர்களின் திறமைகளைக் கொண்டு அறிய முடிகின்றது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# தமிழ் இசைக் கருவிகளின் பயன்பாடு அருகி வருகின்றன

## பேராயர் ஜெபநேசன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.30

கலாசாரம் பற்றிப் பேசும் இசைக் கருவிகளின் பயன்பாடு தமிழர் மத்தியில் அருகி வருகிறது. இசையை பயிலும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தாலும் மாணவர்கள் அதனைப் பயன்படுத்தத் தவறி விடுகின்றனர் எனத் தென்னிந்தியத் திருச்சபையின் இளைப்பாறிய பேராயர் ஜெபநேசன் தெரிவித்தார்.

சோ.திலோத்தமனின் மிருதங்க அரங்கேற்றம் வீரசிங்கம் மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. அந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே பேராயர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இன்று இசைக் கருவிகளை ஏன் பயில வேண்டும். இதனால் என்ன பயன் என மாணவர்கள் மத்தியில் கேள்வி எழுகிறது. இறைவனை வழிபடுவதற்கு சிறந்தது இசை என சமய வாதிகள் குறிப்பிடுகின்றனர்.

இசைக்கருவிகளைப் போன்று தான் தமிழ் மொழியைக் கற்பதும் அருகிவருகிறது. இன்று பல்கலைக் கழகங்களின் தமிழ் இலக்கியங்களை கற்பவர்களின் எண்ணிக்கையும் மிகக் குறைவாகவே உள்ளது.

முன்பெல்லாம் யாழ்ப்பாணத்தில் தடக்கி விழுந்தால் தமிழ் பண்டிதர்களின் காலில்தான் விழ வேண்டும் என்ற கருத்து இருந்தது. இன்று அந்த நிலைமை பற்றிச் சிந்திக்க வேண்டும்.

இசை, நாடக அரங்கேற்றம் என்றால் அழைக்கப்பட்டவர்களைத் தவிர ஏனைய இசை ஆர்வலர்களை மண்டபத்தில் காணமுடியாது. உண்மையான இசையை உணர்ந்து விமர்சிப்பது இல்லை. மாறாக சினிமாப் பாடல் இசைகளுக்கும் கேளிக்கை நிகழ்வுகளுக்குமே முக்கியத்துவம் கொடுத்து வருகின்றனர்.

தமிழையும் இசையையும் மதிக்கவும் பேணவும் தமிழர்கள் ஒவ்வொருவரும் பழகிக் கொள்ள வேண்டும்- என்றார். (எ-13)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதயன்** தொடர்புகளுக்கு

**தலைமையகம்:**
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி:021-222 9933,
222 9944, 5679933, 5679944
விளம்பரம்:021-5671111
விநியோகம்: 021-5677222
**தொலைநகல்**
செய்தி: 021-5678844,
விளம்பரம்: 021-2229731

**மின் அஞ்சல்**
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

**வன்னிப் பணிமனை:**
ஏ-9 வீதி, கரடிப்போக்கு,
கிளிநொச்சி (புனித திரேசா வித்தி. முன்பாக)
தொலைபேசி: 021 228 0065
தொலைநகல்: 021 228 0066
**நெல்லியடிக் கிளை:**
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி : 021-2262789,
021 226 2395
**சாவகச்சேரிக் கிளை:**
நவீன சந்தை மேல்மாடி,
சாவகச்சேரி
தொலைபேசி: 021 227 0323

விளம்பர முகவர்கள்: 'சதா பொன்ஸ்' –மாலு சந்தி, அல்வாய் : 021 226 3206, 'நெல்லியடி மொடேன் ஸ்ரோர்ஸ்' – பஸ் நிலையம், நெல்லியடி : 021 490 1519, 'மீசாலை கஜானன்' – கண்டி வீதி, மீசாலை தெற்கு : 021 227 0399, 'மன்னார் சிவசாந்தி' – தாழ்வுபாடு வீதி, மன்னார் : 0752824478, 'கொடிகாமம் அருள்நாயகி' – பஸ் நிலையம், கொடிகாமம் : 0774937585, 'மல்லாவி புவனேஸ்வரி புத்தகசாலை' – மத்திய சந்தையடி, மல்லாவி : 0778175116, 'கோபி எலைக்சிற்றி' – முல்லைத்தீவு நகர் : 0779598917, 'அன்பரசன்' – சிவன் கோயிலடி, ஒட்டுசுட்டான் : 0775035571, 'சுஹா ரவல்ஸ்' – 98, பிரதான வீதி, மன்னார் : 023 222 3311

## நின்று கொல்லும் எச்சங்கள்

போர் தந்த எச்சங்கள் இன்னமும் வன்னிப் பகுதியில் முழுமையாக மீட்கப்படவில்லை. இறுதிப் போரின் உச்சத்தருண சன்னதம் நடைபெற்ற பகுதிகளுக்குள் இன்னமும் வெளியார் உள்நுழைய இலங்கை அரசு தொடர்ந்தும் அனுமதி மறுத்தே வருகிறது. வெளியாள்கள் மாத்திரமன்றி குறித்த நிலங்களின் பூர்வீகக் குடிகள்கூட தம் சொந்த நிலத்தைப் பார்த்துவிட்டு வரக்கூட அனுமதி இல்லை.

போர் வரன்முறைகளை மீறி தாங்கள் ஆடிய அழுகுணி ஆட்டத்தின் எச்சங்கள் எங்காவது ஒளிந்திருந்தால் அது தங்களைக் காட்டிக்கொடுத்து விடக்கூடும் என்ற பயத்திலேயே இந்த இடங்களுக்கு மக்களை மீள்குடியமர அரசு அனுமதிக்காதுள்ளதாகக் கூறப்படுகிறது. ஆகவே இறுதிப்போர் நடந்த இடங்களில் ஒளிந்திருக்கும் தடயங்களை ஒன்றுகூட மிச்சம் விடாமல் அழித்து விட்டே, அந்தப் பகுதிகள் மீதான தன்னுடைய இரும்புக்கரத்தைப் படைகள் விலக்கிக்கொள்ளக்கூடும். ஆனாலும் ஆயிரம் கரங்கள் கொண்டு மறைத்தாலும், ஆதவன் மறைவதில்லை. சிறியதொரு துவாரத்தின் ஊடாக வேனும் சூரிய ஒளிக்கற்றைகள் உள்நுழைந்து இருளில் மறைந்திருக்கும் மர்மங்களை வெளிப்படுத்திவிடும்.

முல்லைத்தீவு புதுக்குடியிருப்புக்கு அருகில் உள்ள இடம் ஒன்றில் கொத்துக்குண்டுகள் மீட்கப்பட்ட சம்பவம் இலங்கை அரசின் போர் வரன்முறை மீறலை மீண்டும் ஒரு முறை ஆதாரத்தோடு அம்பலப்படுத்தியிருக்கிறது. வன்னிப் போரில் படையினர் வகை தொகையின்றி கொத்துக்குண்டுகளைப் பயன்படுத்தியதாக சர்வதேச அமைப்புகளும், பொதுமக்களும் குற்றம் சாட்டியிருந்தபோதும், அவையெல்லாம் கட்டுக்கதைகள் என்று ஒரேயடியாக மறுதலித்திருந்தது அரசு. நல்லிணக்க ஆணைக்குழுவின் அமர்வொன்றில் – பூநகரியில் நடைபெற்ற அமர்வில் – ''படையினர் தம்மீது கொத்துக்குண்டுகளைப் பயன்படுத்தித் தாக்குதலை நடத்தினார்கள்'' என்று பொதுமக்கள் சாட்சியமளித்திருந்தனர். எனினும் குறித்த சாட்சியங்களை ஆணைக்குழு அறிக்கை இருட்டடிப்புச் செய்துவிட்டது. இதேவேளை, ஐ.நா. நிபுணர்குழு வெளியிட்டிருந்த அறிக்கையில் 'இலங்கை அரசு பொதுமக்களுக்கு எதிராக கொத்துக் குண்டுகளைப் பயன்படுத்திய தகவல் கிடைத்திருந்த போதும், அது குறித்த ஆதாரங்களைப் பெற்றுக் கொள்ள முடியாதிருப்பதாக' தெரிவிக்கப்பட்டிருந்தது. இப்போது கண்ணிவெடி அகற்றும் ஐ.நா. நிகழ்ச்சித் திட்டப் பிரிவிடம் ஆதாரம் வகையாகச் சிக்கி உள்ளது. போரில் பயன்படுத்தப்பட்ட கொத்துக் குண்டில் உள்ளடங்கி உள்ள வெடிக்காத குண்டுகள் மீட்கப்பட்டுள்ளன.

ஏற்கனவே ஜெனிவாத் தீர்மானத்தால் நொந்து நூலாகிப் போயுள்ள இலங்கை அரசுக்கு கொத்துக்குண்டுகள் மீட்கப்பட்ட செய்தி, இன்னொரு இடியாக விழுந்துள்ளது.இந்தக் குண்டுகளைப் படையினர் மீட்டிருந்தால் விடயத்தை அப்படியே அமுக்கி இருக்கலாம். ஆனால் ஐ.நா. அமைப்பிடம் சிக்கி விட்டதால் இனி கொத்துக்குண்டுகள் பற்றி சர்வதேசத்தின் கேள்விக் கணைகளை இலங்கை சந்திக்க வேண்டியிருக்கும். அவற்றுக்குப் பதில் சொல்லி முடிப்பதற்கு இடையில் வேறு ஆதாரங்களும் வெளிப்படக்கூடும். அரசுக்கு இனிமேல் தொடர் தலையிடிதான். ஜெனிவாவால் வீழ்ந்த அரசை கொத்துக்குண்டுகள் ஏறிமிதித்திருக்கின்றன. அரசன் அன்று கொல்வான்; தெய்வம் நின்று கொல்லும் என்று மூத்தவர்கள் சொல்லிச் சென்றது இன்னொருமுறை நிகழத் தொடங்கியிருக்கிறது.

# ஏமாற்றுத் தந்திரமே 'தெரிவுக்குழு'



*சூரியன்*

இந்திய அரசியல் பிரமுகர்கள் இலங்கைக்கு முக்கிய பயணங்களை மேற்கொள்ளும் தறுவாயில், அவர்களைத் தன்பக்கம் வசியப்படுத்த மஹிந்த அரசு அண்மைக்காலமாகப் புதியதொரு தாரக மந்திரத்தை ஓதிவருகின்றது.

குறித்த அரசியல் பிரமுகர்கள் நாட்டில் இருக்கும் காலப்பகுதியினுள்தான் அந்த மந்திரம் ஓங்கி ஒலிக்கும். அவர்கள் நாட்டைவிட்டு புறப்பட்ட மறுகணமே அந்த மந்திரத்தை மறந்து, மஹிந்த அரசு 'இல்லவே இல்லை' என்ற பல்லவியைப் பாடுவதற்கு ஆரம்பித்துவிடும்.

இந்த மந்திரமானது, பொய், பித்தலாட்டம், தில்லுமுல்லு ஆகியவற்றைத் தோளில் சுமந்துகொண்டு பயணிக்கும் மஹிந்த அரசுக்கு புளித்துப்போன தொன்று. எனவே, வழங்கிய உறுதிமொழிகளை நிறைவேற்ற அது நடவடிக்கை எடுக்காது என்பது தெட்டத்தெளிவு.

### '13 பிளஸ்' கேடயம்

இந்திய அரசு தனக்கு அழுத்தங்களைப் பிரயோகிக்கும்போது அதிலிருந்து விடுபடுவதற்கே '13 பிளஸை'க் கேடயமாகப் பயன்படுத்தி இரட்டைவேடம் போடுகின்றது அரசு.

குறிப்பாக, இலங்கைக்கு பயணம் மேற்கொண்ட இந்திய நாடாளுமன்றக் குழுவின் தலைவர் சுஷ்மா சுவராஜிடமும் ஜனாதிபதி மஹிந்த '13 பிளஸ்' குறித்து பேச்சு நடத்தி அதனை நாட்டில் நடைமுறைப்படுத்துவோம் என உறுதியளித்திருந்தார்.

### சுஷ்மாவுக்கே ஆப்படித்தார் மஹிந்த

இந்த விடயத்தை சுஷ்மா அம்மையார் ஊடகவியலாளர் மாநாட்டின்போது அம்பலப்படுத்திவிட்டு நாடுதிரும்பினார். சுஷ்மா தலைமையிலான இந்தியக் குழு இங்கிருந்து சென்ற மறுகணமே மஹிந்த அரசு, தாம் '13பிளஸ்' குறித்து எதுவித உறுதிமொழிகளையும் வழங்கவில்லை எனக்கூறி சுஷ்மாவின் கூற்றை அடியோ நிராகரித்து தனது கபடத்தனத்தை மீண்டுமொரு முறை உலகுக்கு வெளிப்படுத்தியது.

### யார் சொல்வது பொய்?

இதனால் இந்தியத் தரப்பு பொய் சொல்கின்றதா அல்லது வழமையாகவே பொய் பேசும் மஹிந்த அரசு இந்த விடயத்தில் உண்மை பேசுகின்றதா எனப் பலதரப்பினரும் குழப்பமடைந்தனர்.

இலங்கை அரசால் பாராட்டப்பட்ட - நேர்மையான கொள்கைகளைக் கொண்ட இந்திய எதிர்க்கட்சித் தலைவி சுஷ்மா பொய் சொல்லியிருக்கமாட்டார் என்றே அநேகமானோர் நம்புகின்றனர். இதற்கு முன்னரும் இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணா இலங்கை வந்திருந்தபோது ஜனாதிபதி மஹிந்த '13 பிளஸ்' குறித்து அவருடன் கலந்துரையாடினார்.

இதனையடுத்து ''இனப்பிரச்சினைக்கு 13 ஆவது அரசமைப்புத் திருத்தத்துக்கு அப்பால் சென்று (13+) தீர்வை வழங்கத் தமது அரசு தயார் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தன்னிடம் தெரிவித்தார் என்று, இந்திய வெளிவிவகார அமைச்சர் கொழும்பில் வைத்து உறுதியான முறையில் தெரிவித்திருந்தார். இந்திய அமைச்சர் கிருஷ்ணா இவ்வாறானதொரு கருத்தை வெளியிடும்போது அவருக்குப் பக்கத்தில் இருந்த இலங்கை வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் அந்தக்கூற்றை நிராகரிக்காமல் சிரித்துக் கொண்டிருந்தார்.

அமைச்சர் பீரிஸின் அந்தச் சிரிப்பில் பல உண்மைகள் புதைந்திருந்ததைக்காணக் கூடியதாக இருந்தது. [illegible] திருந்தது. இந்த நிலையில், ஜனாதிபதி மஹிந்த '13 பிளஸ்' குறித்து இந்தியாவிடம் உறுதி மொழி வழங்கி விட்டார் என ஊடகங்களில் செய்திகள் கசிய ஆரம்பித்ததையடுத்து அரசில் அங்கம்வகிக்கும் கடும்போக்குடைய கட்சிகளும், இனவாதப் போக்குடைய சிங்கள அமைப்புகளும் இதற்கு எதிராகக் கிளர்ந்தெழுந்தன.

உள்நாட்டில் திடீரென ஏற்பட்ட எதிர்ப்பலைகளைச் சமாளிப்பதற்கு மஹிந்த அரசு தனது வழமையான பாணியில் கதைகளைக் கட்டவிழ்த்து விட்டது; மிகவும் சிறப்பான முறையில் அதை அரங்கேற்றமும் செய்தது.

### சிறுபிள்ளைத்தனமான கருத்து

'கிருஷ்ணா என்னிடம் '13 பிளஸ்' குறித்துக் கூறவா எனக் கேட்டார். நான் கூறுங்கள் எனச் சொன்னேன் என சிறுபிள்ளைத்தனமாக கருத்து வெளியிட்டு ஜனாதிபதி மஹிந்த நிலைமையைச் சமாளித்தார். இந்தக் கருத்து நகைப்புக்குரியதாகும்.

அதேவேளை, '13 பிளஸ்' விவகாரம் உட்பட முக்கிய சில விடயங்களில் இலங்கை அரசு இந்தியாவை ஏமாற்றியதால் அந்த நாடு கொதிப்படைந்தது. ஜெனிவாவில் இலங்கையை டில்லி எதிர்ப்பதற்கு கொழும்பு அரசின் போலியான வாக்குறுதிகளும் பிரதான காரணங்களாகும்.

இவ்வாறானதொரு நிலையில்தான் இந்திய எதிர்க்கட்சித் தலைவரிடமும் '13 பிளஸ்' என்ற மந்திரத்தை அண்மையில் மீண்டும் ஓதி ஜனாதிபதி மஹிந்த பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருக்கின்றார்.

ஜெனிவா மாநாட்டுக்குப் பின்னர் இலங்கை போலியான நடவடிக்கைகளில் இறங்காது என்றே இந்தியா நம்பியது. ஆனால், தனது சித்துவிளையாட்டை மஹிந்த அரசு விடுவதாக இல்லை. சுஷ்மாவிடம் நாங்கள் அவ்வாறு கூறவேயில்லை என உள்நாட்டில் மீண்டும் பழைய பல்லவியைப் பாடத் தொடங்கியது.

நாட்டில் சட்டமாக உள்ள 13 ஆவது அரசமைப்புத் திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதற்கு காலத்தை இழுத்தடிக்கும் - தயங்கும் இலங்கை அரசு, 13 ஆவது அரசமைப்புக்கு அப்பால் (13+) சென்று இனப்பிரச்சினைக்குத் தீர்வைத் தருவோம் என வழங்கும் உறுதிமொழியை எவ்வாறு நம்புவது என்ற சந்தேகங்கள் எழுந்துள்ளன. குறிப்பாக 13 ஆவது அரசமைப்புத் திருத்தத்தில் மாகாண சபைகளுக்கு காணி,பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்படவேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆனால், அந்த அதிகாரங்களை வழங்குவதற்கு மஹிந்த அரசு மறுக்கின்றது. எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவற்றை வழங்குவதற்கு அது தயாராக இல்லை. மேற்கூறப்பட்ட விடயம் காரணமாகத்தான் அரசு- கூட்டமைப்பு பேச்சுக்கூட தடைப்பட்டுள்ளது.

### '13 பிளஸ்' என்றால் என்ன?

13 ஆவது அரசமைப்பில் உள்ள அதிகாரங்களையே தர மறுக்கும் அரசு, '13 பிளஸ்' என எதனைக் கூறுகின்றது? அந்தப் பிளஸ் என்பது என்ன? இந்தக் கேள்விகளுக்கு அரசு இன்னும் தெளிவான முறையில் பதிலளிக்கவில்லை. இருப்பினும், இடைக்கிடையே '13 பிளஸ்' என்ற பல்லவி நாட்டில் பாடப்படுகின்றது. அதுவும் இந்திய அரசியல் பிரமுகர்கள் இங்கு வரும்போதுதான் அந்த வசனம் பிரசித்திபெறுகின்றது.

யுத்த காலத்தில் இந்திய அரசுக்கு ஆப்படிப்பதற்கு இலங்கை அரசு 13ஆவது அரசமைப்புத்திருத்தம் குறித்துப் பேசியது. தற்போது அதன் இரண்டாவது பாடமாக '13 பிளஸ்' நாடகம் மேடையேற்றப்பட்டு வருகின்றது.

### நாடாளுமன்றத் தெரிவுக்குழு பொறி

இது இவ்வாறிருக்க, நாடாளுமன்றத் தெரிவுக்குழு என்ற பெயரில் காலத்தை இழுத்தடிக்கும் பொறியை இயக்குவதற்கும் அரசு துடிக்கின்றது.

அந்தப் பொறிக்குள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை எப்படியாவது சிக்க வைக்கவேண்டும் என அது கங்கணம் கட்டிக்கொண்டு செயற்படுகின்றது.

தமிழ்க் கூட்டமைப்பு தெரிவுக் குழுவுக்கு வராவிட்டால் வேறு எவ்வழிகளிலும் தீர்வு இல்லை என ஜனாதிபதி மஹிந்தர் ஆணித்தரமாக இடித்துரைத்து தெரிவுக்குழுவுக்குப் பலவந்தமாக கூட்டமைப்பை இழுத்தெடுக்கப் பார்க்கின்றார். இந்தியக் குழுவினூடாகவும் மஹிந்தர் இந்த முயற்சியை மேற்கொண்டார்.

வழங்கிய உறுதிமொழிகள் எவற்றையும் நிறைவேற்றாத அரச தரப்பினரை நம்பி கூட்டமைப்பினர் எப்படித் தெரிவுக்குழுவுக்குச் செல்ல முடியும்?

ஆசியாவின் வல்லரசு நாடான இந்தியாவுக்கே தண்ணிகாட்டும் மஹிந்த அரசு, கூட்மைப்புக்கு வழங்கும் உறுதிமொழிகளை நிறைவேற்றும் என எவராலும் நம்பமுடியாது. அதற்கு எந்தவித உத்தரவாதமும் இல்லை.

இந்தச் சிக்கல் நிலைமையைக் கருத்திற்கொண்டுதான், அரசுடன் இடம்பெற்றுவரும் பேச்சுகளில் முதலில் இணக்கம் ஏற்படட்டும். அதன்பின்னர் தெரிவுக்குழு குறித்து சிந்திக்கலாம் என தமிழ்க் கூட்டமைப்பு தெரிவிக்கின்றது. இது நியாயபூர்வமான கருத்தாகும்.

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பிரதான கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள்தான் அரசில் பெரும்பான்மையினராக உள்ளனர். இவர்களுடன் பேசி இணக்கப்பாட்டுக்கு வரமுடியாவிட்டால் தெரிவுக்குழுவில் அந்த விடயம் சாத்தியப்படாது என்பதே உண்மையாகும்.

ஏனெனில், கடும்போக்குடைய அரசின் பங்காளிக் கட்சிகளான ஜாதிக ஹெல உறுமய, தேசிய சுதந்திர முன்னணி ஆகிய கட்சிகளும் தெரிவுக் குழுவில் அங்கம் வகிக்கும். இக்கட்சிகள் அந்தக் குழுவில் வைத்து நிச்சயம் அதிகாரப்பகிர்வை எதிர்க்கும்.

மூன்றிலிரண்டு பெரும்பாண்மை ஆதரவு இருந்தால்தான் நாடாளுமன்றத்தினூடாக தீர்வைப் பெறலாம். இல்லையேல் அது சாத்தியமற்ற விடயமாகும். எனவே, தெரிவுக்குழு விடயத்தில் கூட்டமைப்பு எடுத்துள்ள முடிவானது சிறப்பானது என்றே அரசியல் ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

எனவே, இலங்கை அரசு 13 பிளஸ், தெரிவுக்குழு ஆகிய பல்லவிகளை மீண்டும் மீண்டும் பாடி தேசிய இனப்பிரச்சினையுடன் விளையாடாது விரைவில் ஒரு முடிவுக்கு வரவேண்டும். அதற்கு கூட்டமைப்புடன் பேச்சு நடத்தி இணக்கத்துக்கு வருவதுதான் சிறந்த உபாயமாகும் என சர்வதேச சமூகம் உள்ளிட்ட அனைத்துத் தரப்புகளும் அரசுக்கு ஆலோசனை வழங்கியுள்ளன.

எனவே, தமிழர் பிரச்சினைகளைத் தீர்க்காது மஹிந்த அரசு தொடர்ந்தும் சர்வதேசத்திடம் தனது சித்துவிளையாட்டைக் காட்டுமானால் விபரீதமான விளைவுகளைச் சந்திக்கநேரிடலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றிக்குரிய மாதத்தில் அரசு எதிர்நோக்கும் புதிய சவால்கள்

நேற்று 29.04.2012 அன்று
சண்டே ரைம்ஸ் வரைந்திருந்த
அரசியல் விமர்சனத்திலிருந்து

கோகுலன்

இரண்டு வாரங்களுக்கு முன்னர் இலங்கைக்கு வருகை தந்திருந்த இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவின் தலைவர் சுஷ்மா சுவராஜ் புதுடில்லியில் இந்திய பிரதம மந்திரி மன்மோகன் சிங்கை சந்தித்து இலங்கைப் பயணம் தொடர்பான அறிக்கையை சமர்ப்பித்ததைத் தொடர்ந்து, இலங்கையின் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசுக்கு அவர்கள் வழங்கிச் சென்றுள்ள கசப்பான சில செய்திகள் வெளி வந்துள்ளன. இந்தியாவின் மிகப் பிந்திய இலங்கை தொடர்பான வெளியுறவுக் கொள்கையின் நோக்கங்களை நிறைவேற்றிவிட்டு திரும்பியிருப்பதை லோக சபையின் பி.ஜே.பி. எதிர்க் கட்சித் தலைவர் பிரதம மந்திரிக்கு எடுத்து விளக்கியிருந்தார். இரு தரப்பிலும் முரண்பாடுகள் எதுவும் இருந்ததாகத் தெரியவில்லை. இருவரும் ஒரேவிதக் கருத்தைக் கொண்டிருந்துள்ளார்கள்.

உள்நாட்டில் ஆளும் கட்சிக்கும் எதிர்க்கட்சிக்கும் இடையில் மிகக் கடுமையான முரண்பாடுகள் நிலவலாம். ஆனால் அவர்களின் வெளியுறவு என்பது ஒன்றாகவே உள்ளது. இலங்கைக்கு அவர்கள் விடுத்துள்ள செய்தி இது மட்டுமல்ல.

இலங்கை தொடர்பான கொள்கையில் ஆளும் கட்சியும் பதவிக்கு வரக்கூடிய கட்சியும் இரண்டுமே கேள்விக்கு இடமின்றி ஒன்றாகவே இருக்கின்றன என்பதே முக்கியமானதும் பலமானதுமான அறிவிப்பாகும்.

### இராணுவ வீரர்கள் மாதம்

இந்த நிலையில் தான் இலங்கை அரசாங்கம் புலிகளைத் தோற்கடித்த மூன்றாவது வருடாந்த தினத்தை மிக எடுப்பாகக் கொண்டாடுவதற்கான ஏற்பாடுகளை செய்து கொண்டிருக்கின்றது. வரும் மாதம் இராணுவ வீரர்கள் மாதமாக அறிவிக்கப்படவிருக்கின்றது. ஏப்ரல் 30 ஆம் திகதி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு இராணுவ வீரர்கள் கொடியை குண்டூசிகளால் பிணைத்து அணிவிப்பதன் மூலம் இராணுவ வீரர்கள் மாதம் பிறப்பதை அடையாளப்படுத்தப்படும். மே 18 ஆம் திகதி காலி முகத்திடலில் வழக்கம் போல வருடாந்த வெற்றியாளர்கள் கொண்டாட்டங்கள் இடம் பெறும். இராணுவ வெற்றியை ஈட்டித் தந்த அணிகளின் அணி வகுப்புகளும் அவைகளின் நவீன கனரக ஆயுதங்களின் காட்சிகளும் இடம் பெறும். அடுத்தநாள் போரில் உயிர் நீத்த இராணுவத்தினரை நினைவு கூரும் வைபவம் இடம்பெறும். அன்றைய நிகழ்ச்சியில் ஜனாதிபதி இன்று அரசு எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றியும் குறிப்பிடுவார் என்பதால் அவரது பேச்சை வெளிநாட்டுத் தூதரகங்கள் ஆவலுடன் எதிர்பார்த்திருக்கின்றன. கடந்த மாதம் அமெரிக்கா ஆதரவிலான தீர்மானம் மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்டிருக்கும் பின்னணியில் இந்த எதிர்பார்ப்பு முக்கியத்துவம் பெறுகின்றது.

இந்திய - அமெரிக்க ஆதாரவிலான தீர்மானத்தை மனித உரிமைகள் சபையில் ஆதரித்தமைக்கான முக்கிய காரணம் குறித்த தவறான கருத்தினை இந்தியக் குழுவினர் மறுதலித்திருப்பது இன்னொரு முக்கிய செய்தியாகும்.

அந்த நிலைப்பாடு தமிழ் நாட்டை முதன்மைப்படுத்தி எடுக்கப்படவில்லை என்று இந்தியக் குழுவினர் எடுத்தியம்பியிருக்கிறார்கள். சுஷ்மா சுவராஜ் ஜனாதிபதியுடன் நடத்திய பேச்சுகளிலும் இதுவே இடம்பெற்றுள்ளது. வேறு வகையில் சொல்வதானால் தமிழ் நாட்டுத் தலைவர்களிடம் இருந்து வந்த நெருக்குதலினால் இந்தியா அந்தத் தீர்மானத்தை ஆதரிக்கவில்லை. தமிழ் நாட்டில் இருபெரும் எதிர்க் கட்சித் தலைவர்களான அ.இ.அ.தி.மு.க. தலைவர் ஜெயலலிதா ஜெயராம் மற்றும் தி.மு.க. தலைவர் மு.கருணாநிதியும் அமெரிக்க தீர்மானத்தை இந்தியா ஆதரிக்க வேண்டும் என்று கோரியிருந்தார்கள். தெற்கில் பெரும் ஆர்ப்பாட்டங்களை நடத்தப் போவதாகவும் அவர்கள் அச்சுறுத்தியிருந்தார்கள். இருந்தாலும் இந்தியாவின் கரிசனைகளிலிருந்தே இந்த நிலைமை தோன்றியது. அத்துடன் சில முக்கிய விடயங்களில் சர்வதேச சமூகத்தின் கரிசனைகளும் உள்ளடங்கியிருந்துள்ளன. பிரதமர் மன்மோகன் சிங்குடன் சுஷ்மா சுவராஜ் நடத்திய ஆலோசனைகளின் பின்னர் கொழும்பில் இடம்பெற்ற பல விடயங்களின் விவரங்கள் இந்தியாவிலும் இலங்கையிலுமுள்ள பல்வேறுகட்சிகளின் தலைவர்களுக்கு கசிந்துள்ளன.

அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வாவுடன் நடத்திய பேச்சுகளின் போது, "நாங்கள் உங்களுடன் நின்றோம். ஆனால் இந்தியா மிக மோசமாக கைவிடப்பட்டுவிட்டது என்ற உணர்வு அங்கே நிலவுகின்றது. அங்கு ஏமாற்றம் தெரிகிறது என்று சுஸ்மா தெரிவித்தார்.

"இந்தியாவுக்கும் சர்வதேசத்துக்கும் இலங்கை ஜனாதிபதி இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண்பது தொடர்பாக அளித்திருந்த வாக்குறுதிகளை இந்தியா நாடாளுமன்றக் குழுவினர் எடுத்துக்காட்டியிருந்தனர்.



2009 ஆம் ஆண்டு மே மாதம் இலங்கை அடைந்த வெற்றிக்கு இந்தியா வழங்கியிருந்த உதவிகளை அவர் சுட்டிக் காட்டினார். புலனாய்வுத் தகவல்கள், செயற்கைக் கோள்படங்கள், வானொலி உரையாடல்கள், இடைமறித்து எடுக்கப்பட்ட தகவல்கள் போன்ற உதவிகளையும் அவர் தெரிவித்தார். இலங்கை கடற்படையினர் நடத்திய வெற்றிகரமான சில நடவடிக்கைகளும் இந்திய உதவியினாலேயே கிடைத்திருந்தது.

### இலங்கை அளித்த வாக்குறுதிகள்

சில நிறைவேற்றப்படாத வாக்குறுதிகளையும் சுஸ்மா சுவராஜ் சுட்டிக்காட்டினார். அவை இலங்கை அரசினால் இந்தியாவுக்கும் சர்வதேச சமூகத்துக்கும் வழங்கப்பட்டவை என்பது அவரது கருத்து. அவை இன்னமும் நிறைவேற்றப்படாமல் இருக்கின்றன. குறிப்பாக அரசமைப்புக்கான 13 ஆவது திருத்தமும் அதற்கு அப்பாலும் செய்வதான வாக்குறுதிகள் என்றார் சுஸ்மா. அரசினால் முன்னர் வழங்கப்பட்டிருந்த வாக்குறுதிகளையும் அவர் சுட்டிக் காட்டத் தவறவில்லை. அதற்கான நான்கு ஆவணங்களையும் அவர் குறிப்பிட்டார். அதில் ஒன்று 2009 மே மாதம் 23 ஆம் திகதி இலங்கை [illegible] ஐ.நா. செயலாளர் நாயகம் பான்- கீ மூனும் கூட்டாக விடுத்திருந்த அறிக்கை. செயலாளர் நாயகம் இலங்கைக்கு வருகை தந்ததையடுத்து இந்த கூட்டறிக்கை விடுக்கப்பட்டிருந்தது. அந்த அறிக்கையில் காணப்பட்ட பல விடயங்களில், "13 அரசமைப்புத் திருத்தத்தை செயல்படுத்தவும் தமிழ்க் கட்சிகள் உள்பட சகல கட்சிகளுடனும் விரிவான கலந்துரையாடல்களை நடத்தவும் இலங்கையில் நிரந்தரமான அமைதியைக் கொண்டுவருவதற்கும் இந்தச் செயற்பாட்டை மேலும் முன்னெடுக்கவும் ஜனாதிபதி ராஜபக்ஷ உறுதியாக தீர்மானித்திருப்பதாக கருத்து வெளியிட்டிருந்தார்". 2011 ஆம் ஆண்டு மே 17 ஆம் திகதி இலங்கை வெளியுறவு அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் புதுடில்லி சென்றிருந்தபோது விடுக்கப்பட்ட ஊடகக் கூட்டறிக்கையில், நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புவதற்காக 13ஆவது திருத்தத்தின் மீது ஒரு தீர்வு உருவாக்கப்பட்டு அதற்கான சூழ்நிலை ஏற்படுத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. இன்னொன்று 2009 ஆம் ஆண்டு மே 27 ஆம் திகதி மனித உரிமை பேரவையில் நிறைவேற்றப்பட்ட மூன்று பக்க தீர்மானம் இதில் மோதல்களை முடிவுக்குக் கொண்டு வந்தமைக்காக இலங்கையைப் பாராட்டியிருந்ததுடன் இலங்கை அரசுடன் ஒத்துழைக்குமாறு சர்வதேச சமூகம் கேட்கப்பட்டிருந்தது.

செயலாளர் நாயகம் இலங்கைக்கு பயணம் செய்ததை வரவேற்றிருந்ததுடன் இலங்கை ஜனாதிபதியால் தாம் இராணுவத் தீர்வினை ஒரு இறுதித் தீர்வாகக் கருதவில்லையென்று தெரிவித்து இலங்கையில் நல்லிணக்கத்தையும் நிலையான அமைதியையும் ஏற்படுத்த அரசியல் தீர்வொன்றை ஏற்படுத்துவதற்கு வழங்கியிருந்த அர்ப்பணிப்புடனான உறுதிப்பாட்டையும் வரவேற்றிருந்தது. மிக அண்மித்த விடயம் யாதெனில் இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா இலங்கைக்கு வருகை தந்திருந்தமையாகும். ஜனாதிபதியுடன் காலை உணவு உண்டதின்பின் கிருஷ்ணா பத்திரிகையாளர்களிடம் பேசிய போது 13 ஆவது திருத்தத்துடன் அதற்கு அப்பாலும் நிறைவேற்றுவதாக தமக்கு ஜனாதிபதி வாக்குறுதியளித்திருக்கிறார் என்று தெரிவித்திருந்தார். அப்பாலும் என்ற சொற்கள் செனேட் சபை அல்லது மேல் சபை யொன்றை உருவாக்குவதாகும் என்று கருதப்பட்டது.

ஏப்பரல் 21 ஆம் திகதி சுஸ்மா சுவராஜ் இலங்கை விஜயத்தை முடித்துக் கொண்டு புறப்படுவதற்கு முன் ஜனாதிபதி 13 ஆவது திருத்தத்தையும் அதற்கு மேலாகவும் தீர்வு ஒன்றை வழங்கப் போவதாக தமக்கு வாக்களித்துள்ளார் என்று தெரிவித்திருந்தார். ஆனாலும் அரசு தரப்பில் பிரதிபலிப்பு எதுவும் வெளிப்படவில்லை.

ஜனாதிபதி ஜனவரி 30 ஆம் திகதி அலரிமாளிகையில் பத்திரிகை ஆசிரியர்களுடனான ஒரு சந்திப்பின் போது, இலங்கைக்குப் பொருத்தமான ஒரு தீர்வை உருவாக்குவது தாம் அல்லவென்றும் உத்தேச நாடாளுமன்றமே அதைச் செய்ய வேண்டும் என்றும் கூறினார். 2005 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலின் போது வெளியிடப்பட்ட மஹிந்த சிந்தனை அறிக்கையில், இது வரை முன்வைக்கப்பட்டிருப்பதை அவர் நினைவு கூர்ந்தார். ஆலோசனைகள் அனைத்தையும் கவனமாக ஆராய்ந்து புதிதாக முன்முயற்சி எடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது என்பதை சுட்டிக் காட்டினார். இதுவரை முன்னெடுக்கப்பட்ட ஆலோசனைகள் என்று நான் கூறும் போது 13 ஆவது திருத்தமும் உள்ளடங்கவே செய்கிறது என்றார் ஜனாதிபதி.

இலங்கையர்கள் பெரும்பான்மையானோரால் ஒரு தீர்மானம் நிராகரிக்கப்படுமானால் அதனை எந்த வகையில் மக்கள் மத்தியில் என்னால் பரப்புரை செய்ய முடியும் என்று அவர் கேட்டார்.

ஜனாதிபதியால் இவ்வாறானதொரு நிலைப்பாடு எடுக்கப்பட்டுள்ள நிலையில் 13 திருத்தமும் அதனுடனான ஏனைய விடயங்களும் நிறைவேற்றப்படுவதென்பது நாடாளுமன்றத் தெரிவுக் குழு செயல்பட்டு ஒரு தீர்மானத்துக்கு வந்தால் அன்றி சாத்தியமில்லை. எனவே இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையில் மட்டுமல்ல மேற்குலக நாடுகளுடனும் இது ஒரு சிக்கலான பிரச்சினையாகவே இருக்கப் போகின்றது. அதற்காக நாடாளுமன்றத் தெரிவுக்குழு செயற்பாட்டை யதார்த்தமாக்கும் வகையில் இந்தியா, தனது ராஜதந்திர முயற்சிகளை மேற்கொள்ளாமலுமில்லை. அரசுடன் பேச்சுக்களை ஆரம்பித்து நாடாளுமன்ற தெரிவுக்குழுவுக்கு வழி சமைக்கும் படி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அது வற்புறுத்தி வருகின்றது. அந்தவகையில் சுஸ்மா சுவராஜ் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைவர்களுடன் கடும் வார்த்தைப் பிரயோகங்களை மேற்கொண்டதாகவும் தெரியவருகின்றது. இதற்குப் பதிலளித்துள்ள கூட்டமைப்பின் தலைவர் "நான் வெறுங்கையுடன் போக முடியாது" என்று கூறியுள்ளார். இந்த வகையில் இலங்கையிலுள்ள இந்திய ஸ்தானிகர் அஷோக் காந்தா சில முயற்சிகளில் ஈடுபட்டு வருகிறார். ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் இரு தரப்புக்குமிடையில் நல்ல நட்பைக் கொண்டிருப்பதால் அவரது பங்களிப்பை பயன்படுத்திக் கொள்ள ஸ்தானிகர் விரும்புகிறார்.

### மனித உரிமை சபைக்கு இலங்கை அறிக்கை

ஜூலை 23 ஆம் திகதிக்கு முன்னர் மனித உரிமைப் சபைக்கு தேசிய அறிக்கையொன்றை தாக்கல் செய்ய இலங்கை அரசு தீர்மானித்திருக்கிறது. இந்த அறிக்கையின் பிரதிகள் உறுப்பு நாடுகளுக்கு பகிரப்பட்டு பின்னர் சபையில் விவாதிக்கப்படும். அதன் பின் நிறைவேற்றப்படும். நவம்பர் முதலாம் திகதி சபையில் முறையாக முன் வைக்கப்படும் என்று தெரிகிறது. அறிக்கை இப்பொழுது தயாராகிவருகிறது. தயாரானதும் அது குறித்து அரசு சிவில் நிறுவனங்களுடன் கலந்தாலோசித்து இறுதி அறிக்கையை மனித உரிமைசபைக்கு அனுப்பும் என்று தெரிகிறது *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழிக்குப் பழி

பழிக்குப் பழி, இரத்தத்துக்கு இரத்தம். எமக்கெல்லாம் மிகவும் பழக்கபட்டு போன வார்த்தைகள். காலம் அப்படி ஆகிவிட்டது. உயிருக்கு விலை மிகவும் குறைந்து போய்விட்டது. மிருகங்கள் கூட ஒன்றுடன் ஒன்று துப்பாக்கியில் சுட்டுக் கொள்வதில்லை. கத்தியால் குத்திக் கொள்வது இல்லை. ஆனால் மனிதன் ஒருத்தனை ஒருத்தன் சுடுகின்றான், குத்துகிறான்.

ஒரு மிருகத்திடம் இருந்து மனிதனைக் காப்பாற்றிக் கொள்வது சுலபம். ஆனால் மனிதனிடம் இருந்து மனிதனைக் காப்பாற்றுவது கஷ்டம். எந்த நேரத்தில் என்ன செய்வான் என்று கூற முடியாது. பிறக்கும் போது நன்றாக இருக்கின்ற மனிதன் போகப் போக ஏன் இப்படி மாறிவிடுகின்றான். கொஞ்சம் சிந்தித்துப் பார்க்கலாமா?

வளரும் முறை வளர்க்கப்படும் முறை இவையெல்லாம்தான் இதற்கும் காரணம்.

ஒரு புத்தகத்தில் வர்ணங்களைப் பற்றி குறிப்பிட்டிருந்தார்கள். இலையின் நிறம் பச்சை என்று எழுதப்பட்டிருந்தது. அதற்குப் பக்கத்தில் பச்சை நிறத்தில் இலையின் படம் போடப்பட்டிருந்தது. அடுத்து இரத்தின் நிறம் சிவப்பு என்று போடப்பட்டிருந்தது. அதற்குப் பக்கத்தில் ஒரு கைவிரல். அதை ஒரு கத்தி வெட்டுகிறது. இதுதான் அந்தப் படம். சிவப்பு நிறம் எப்படியிருக்கும் என்ற சிறுவர்களுக்கு இந்த விதமாகச் சொல்லிக் கொடுக்கிறோம்.

கொஞ்சம் யோசித்துப் பாருங்கள். பிஞ்சு மனதில் எப்படி நஞ்சைத் தூவுகின்றோம். அந்தப் படத்தைப் பார்க்கும் சிறுவர்களுக்கு சிவப்பு நிறம் எப்படியிருக்கும் என்று தெரிந்து கொள்வதைவிட சிவப்பு நிறத்தைப் பார்க்க வேண்டுமென்றால் கத்தியால் விரலை வெட்டலாம் என்றுதான் அதிகமாகத் தெரிந்திருக்கும்.

அதன்பின்னர் அந்தப்பிள்ளை பெரிய ஆளாக வளர்ந்த பின் கத்தியைத் தூக்காமல் விடுவானா? இதைவிட நாம் பிள்ளைகளுக்கு விளையாட்டுத் துப்பாக்கியை வாங்கிக் கொடுத்து வேடிக்கை பார்க்கிறோம். சுடவும் கற்றுக் கொடுக்கின்றோம்.

தீபாவளி வந்துவிட்டால் குழந்தைகள் துப்பாக்கியும் கையுமாக அலைவார்கள். இத்தகைய குழந்தை பெரியவன் ஆனவுடன் துப்பாக்கியும் கையுமாக அலையமாட்டான் என்பதில் என்ன தப்பு.

சிறுவர்களின் மனதில் வீரத்தை ஊட்டுவது தவறு இல்லை. வெறியை ஊட்டுவதுதான் தவறு. விளையாடுவதற்காகக் குழந்தைகளுக்குப் பொம்மைகள் வாங்கினால் கூட கொஞ்சம் விவரத்தோடு வாங்கிக் கொடுக்க வேண்டியது பெரியவர்கள் பொறுப்பு.

சிறிய வயதில் நல்லவற்றைக் கூறி வளர்த்தால் வருங்காலத்தில் அவர்கள் சிறந்தவர்களாக இருப்பார்கள்.

ஓர் ஊரில் பெரியவர் ஒருவர் இருந்தார். வள்ளலார் பக்தரான அவர் 'கொலை' என்கின்ற வார்த்தையைக் கூடத் தன் வாயால் உச்சரிக்க மாட்டார். ஒருதடவை ஏதோ ஒரு உலகில் நடந்த கொலையைப் பற்றி பத்திரிகையில் படித்து விட்டு அவரிடம் ஒருத்தர் சொல்லிக்கொண்டிருந்தார். அப்போது அவர் "எமது ஊருக்குப் பக்கத்தில் கூட நீ இப்போது சொல்லிக் கொண்டிருந்தீர்களே. அது நடந்துவிடும் போன்று இருக்கிறது" என்றார்.

இதைப்போன்ற வார்த்தைகளை உச்சரிப்பதே பாவம் என்று நினைத்தார் அவர். இப்படிப்பட்டவர்கள் ஆங்காங்கே இருக்கத்தான் செய்கிறார்கள்.

இந்தக் காலத்து மகனிடம் போய் "தம்பி ஒரு கன்னத்தில் அடித்தால் மறு கன்னத்தைக் காட்ட வேண்டும்" என்றார் ஒருத்தர். "இன்னொரு கன்னத்திலும் நான் அடிவாங்குவதில் உங்களுக்கு என்ன அவ்வளவு ஆசை?" என்று சொன்னான் அவன்.

பெரியவர்கள் எதற்காக அப்படிக் கூறி வைத்தார்கள் என்று கூடப் புரிந்து கொள்ளமுடியாத அளவுக்குப் போய்விட்டார்கள். இந்தக் கால இளையோர்.

நாலடியாரில் ஒரு பாடல் பெரியவர்களைப் பார்த்து சிறியவர்கள் ஏதாவது பிழையாகிப் பேசிவிட்டால் கூட அதற்காக அவர்களைத் திருப்தி பேசமாட்டார்களாம். கீழ் மக்களுக்கு எதிராக மேன்மக்கள் ஒருபோதும் தாழ்வான சொற்களைப் பேச மாட்டார்கள் என்று அந்நூல் கூறுகிறது.

ஒருநாய் எம்மைக் கடித்து விடுகிறது. அதற்காகப் பதிலுக்கு அந்த நாயைக் கடிக்கின்ற மனிதர்கள் உள்ளனரா? என்று கேட்கின்றது அந்தப் பாட்டு?

"கூர்ந்து நாயைக் கௌவிக் கொளக் கண்டும் தம் வாயால்
பேர்த்துநாய் கௌவினார் ஈங்கில்லை- நீர்த் தன்றிக்
கீழ்மக்கள் கீழாய சொல்லியாக்கால் சொல்பவோ
மேன்மக்கள் தம் வாயில் மீட்டு" இது தான் அந்த நாலடியார் பாடல்.

அதனால் பழிக்குப் பழி, இரத்தத்துக்கு இரத்தம் இதெல்லாம் எமக்கு வேண்டாம். நாளைய தலைமுறைக்கும் வேண்டாம்.




ஒருத்தர் கேட்டார் "அதோ அந்த ஆள் என்ன செய்து கொண்டிருக்கிறார்" என்று. அதற்கு இன்னொருத்தர் "ஒன்றுமில்லை. செருப்பு அவர் காலைக் கடித்து விட்டதாம். அதனால் பழிக்குப் பழி வாங்குகிறேன் என்று கூறிக்கொண்டு அவர் அந்தச் செருப்பைத் திருப்பிக் கடித்துக் கொண்டிருக்கிறார்" என்று சொன்னார். இந்தக் காலத்தில் இப்படி நடந்தாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை.

**தென்கச்சி கோ.சுவாமிநாதன்**



# நவாலியின் அடையாளச் சின்னம் வேலக்கை பிள்ளையார் ஆலயம்



**சோபா**

மதவழிபாடுகளின் தொன்மைகளை காலாதிகாலமாக நிலைபெறச் செய்வதற்கு, என்றும் நிலையான வழிகாட்டலான சேவையை வழங்குவது ஆலயங்கள் என்றால் அது மிகையாகாது.

இந்த ஆலயங்கள் மதத்தின் பண்பாடுகளை உணர்த்துவதுடன், குறித்த ஆலயம் சார்ந்த பிரதேசத்தின் மதிப்பை மெருகூட்டுவதுடன் இறை விசுவாசத்துடன் ஆன்மிக ரீதியாக மக்களது மனங்களை தூய்மைப்படுத்தி சஞ்சலமற்ற நிம்மதியான வாழ்வைப் பெற்றுக் கொள்வதற்கும் துணைநிற்கின்றன.

யாழ்ப்பாணத்தின் பண்பாடுகளில் ஆலய வழிபாடு எந்தளவுக்கு முக்கியத்துவம் பெற்றன என்பதை ஆரம்ப காலங்களில் கிராமம், பிரதேசம், நகரம்,மாவட்டம் எனப் பரவலாக அமைக்கப்பட்ட ஆலயங்கள் வானைத்தொடும் கோபுர கலசங்களுடன் காணப்படுவதை எமக்கு நினைவு படுத்துகின்றன.

மக்கள் ஆலயத்தின் மீது கொண்ட நம்பிக்கையினால் கொட்டில்களாகக் காணப்பட்ட ஆலயங்களை கட்டடங்களாக மாற்றியமைத்து அதனை மெருகூட்டியுள்ளனர். இது மத வழிபாட்டின் தொன்மையை பறைசாற்றுகின்றது.

மதவழிபாடுகளுக்கு ஆரம்ப காலங்களில் ஏற்பட்ட இடையூறுகளைத் தாண்டி ஆன்மிக பக்தர்களால் பாதுகாக்கப்பட்ட ஆலயங்கள் பல எமது பிரதேசத்தில் உள்ளன என்பதை மறுத்து விட முடியாது.

ஒவ்வொரு கிராமங்களிலும் உள்ள பெருமைகளைப் பறைசாற்றுவதற்கு குறித்தகிராமத்தில் "ஆலயம் " உள்ளதா? என்பதே பலரது கேள்வியாக இருக்கும். ஆலயம் என்பது அந்தக் கிராமத்தின் ஓர் அடையாளச் சின்னம் என்பதை நாம் உணர்ந்து கொள்ளமுடியும்.

நவாலி என்னும் அழகிய கிராமத்தின் ஓர் அடையாளச் சின்னம் "வேலக்கை பிள்ளையார்" ஆலயம் ஆகும். நவாலி என்னும் கிராமத்தின் பெயரைக் கேட்டால் போதும் அனைவர் மனதிலும் தோன்றுவது இந்த ஆலயத்தின் பெயராகத் தான் இருக்கும்.

யாழ். மாவட்டத்தின் மானிப்பாய் எனும் நகர்ப்பகுதியில் உள்ள நவாலி எனும் அழகிய கிராமத்தில் இந்த ஆலயம் அமைந்துள்ளது.

நவாலிக் கிராமத்தின் ஆரம்ப இடத்தில் இந்த ஆலயம் அமைந்திருப்பதால் கிராமத்துக்குள் வருவோரை இனிதாக வரவேற்கும் "வரவேற்பு ஆலயம்" எனப் பலராலும் அறியப்பட்டுள்ளது. மானிப்பாய் வேலக்கை பிள்ளையார் ஆலயத்தின் நான்கு புறஎல்லைகளிலும் பாடசாலை, வைத்தியசாலை, விளையாட்டு மைதானம் கிராமத்தின் பிரதான வீதி என அமைந்துள்ளன. வயலும் வயல் சார்ந்த இடம் எனும் பெருமைக்குரிய நவாலிக் கிராமத்தில் மிகவும் ரம்மியமான இயற்கைச் சூழலில் நிழல் தரும் மரங்களும், வற்றாத நீரூற்றுக்கொண்ட துலாக்கிணறும் இந்த ஆலயத்தில் அமைந்திருப்பதால் பலருடைய பயணக்களைப்பையும், தாகத்தையும் போக்கும் இடமாக இந்த ஆலயம் விளங்குகின்றது.

வரலாற்றுரீதியாக இற்றைக்கு 150 வருடங்களுக்கு மேலாக பழமைவாய்ந்து ஆலயம் மானிப்பாய் வேலக்கைப்பிள்ளையார் ஆலயம் ஆகும். [illegible] இடத்தில் தோன்றுவதற்கு வரலாற்று ரீதியாக ஒரு சம்பவம் கூறப்படுகிறது.

ஆரம்ப காலத்தில் ஆலயம் தற்போது உள்ள இடத்தில் குமுள மரமும் ,கொன்றை மரமும் நிழல் தரும் விருட்சங்களாக காணப்பட்டன. அத்துடன் குமுள மரத்தின் கீழ் வேலை கையில் ஏந்தியவாறு முருகனது சிலை ஒன்றும் காணப்பட்டது.இந்த முருகன் சிலையை ஆலய வீதியால் செல்லும் மக்கள் பலர் வழிபட்டுச் சென்றுள்ளனர். ஆனால் மரத்தின் கீழ் அநாதரவாகக் கிடந்த முருகன் சிலைக்கு ஆலயம் ஒன்றை அமைப்பதற்கு தம்பையா என்பவர் உளம் கொண்டார்.

இதற்கமைவாக சிறுகோயில் ஒன்றை அமைத்து சிலையை அதில் வைத்து பூசைகளை மேற்கொள்வதற்காக நடராஜக் குருக்கள் என்பவரை பூசகராக நியமித்து ஆலயத்தின் பூசை வழிபாடுகளையும் செவ்வனே நிறைவேற்றி வந்தார்.

இந்த ஆலயத்துக்கு வேலக்கை பிள்ளையார் எனும் பெயரே வழக்கத்தில் இருந்தது. இதன் காரணமாக பலரும் இந்த ஆலயம் பிள்ளையாரை கடவுளாகக் கொண்டிருப்பதாக நினைத்துக் கொண்டனர். ஆனால் இந்த ஆலயம் முருகனை கடவுளாகக் கொண்டுள்ளது. எனினும் தற்போது வீதியால் செல்வோரும் "வேலக்கை பிள்ளையார் அப்பா " எனக் கூறி வணங்கி விட்டுச் செல்கின்றனர். ஆரம்பத்தில் முருகன் வேலை ஏந்தியவாறு காட்சி கொடுத்தமையினாலேயே வேலக்கை பிள்ளையார் எனப் பெயர் வந்ததாகக் கூறப்படுகின்றது.

> **இந்த ஆலயத்துக்கு வேலக்கை பிள்ளையார் எனும் பெயரே வழக்கத்தில் இருந்தது. இதன் காரணமாக பலரும் இந்த ஆலயம் பிள்ளையாரை மூலமூர்த்தியாகக் கொண்டிருப்பதாக நினைத்துக் கொண்டனர். ஆனால் இந்த ஆலயம் முருகனை மூலமூர்த்தியாகக் கொண்டுள்ளது.**


இந்த ஆலயம் சிறு கோயிலாக இருந்தாலும் இறைவனின் அருள்கடாட்சம் பெரிதாக உள்ளது என்பதை பலராலும் நம்பப்பட்டுள்ளது. தம்பையா என்பவரைத் தொடர்ந்து சிவக்கொழுந்து முதலியார் இந்தக் கோயிலைப் பொறுப்பேற்று பூசை, திருவிழாக்களையும் சிறப்புற நடத்தி வந்தார். ஆலயத்தின் பூசைகள் ஆகம விதிப்படி மூன்று காலப் பூசைகளும் குருக்களினாலே நடத்தப்பட்டு வந்தன.

சிவக்கொழுந்து முதலியாரைத் தொடர்ந்து அவரின் வம்சாவழியினர் கோயிலைப் பொறுப் பேற்று ஆலயத்தின் வளர்ச்சிக்கு தமது பணிகளை மேற்கொண்டனர். இவர்களது காலத்திலேயே ஆலயத்திற்கு முன் மண்டபம், கொட்டகை அத்துடன் பூந்தோட்டம், சுற்று மதில் என்பனவும் கட்டப்பட்டன.

1920 ஆம் ஆண்டு ஆலயத்துக்குரிய கோபுரம், விமானம், மகா மண்டபம், நிருத்த மண்டபம் போன்றன கொண்டுவரப்பட்டன. ஆலயச் சூழலில் உள்ள மக்களின் ஒத்துழைப்பினாலும் வழிபாட்டு சிறப்பினாலும் ஆலயம் எழுச்சி பெற்றது. அத்துடன் செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில் பஜனைகளும் இடம் பெற்றன. இந்த பஜனை நிகழ்வில் சிறுவர்கள்,சைவப் பெரியார்கள் கலந்து கொண்டு பயன் பெற்றனர். 1956 ஆம் ஆண்டு மு.வைமுத்து என்பவரால் இந்து சமய விருத்திச் சங்கம் அமைக்கப்பட்டு இந்து சமய நடைமுறைகள் மக்களுக்கு வெளிப்படுத்தப்பட்டதுடன் ஆலய வழிப்பாட்டின் சிறப்பும் எடுத்துக் கூறப்பட்டன.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



அத்தியடி விநாயகர் ஆலயத்தில் மிக அண்மையில் திருவிழா இடம்பெற்றது. இதில் ஓதுவார் ஆர்.சண்முகராஜா பொன்னாடை போர்த்து கௌரவிக்கப்படுகிறார். [ம]



ஆனைக்கோட்டை புனித அடைக்கலநாயகி பந்தியின் புனித வின்சன்டிபோல் சபையினர் கைதடி தொழிற் பூங்காவில் தங்கியுள்ள விழிப்புலனிழந்தோருக்கு சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு உலர் உணவுப் பொருள்கள் வழங்கினர். [ம–288]



தெல்லிப்பழை காசிப்பிள்ளையார் ஆலய வருடாந்த தேர்த் திருவிழாவில் பிள்ளையார் அழகிய தேரில் பவனி வருகிறார். [ம–86]



வலி.தென் மேற்கு பிரதேச சபைக்குச் சொந்தமான மானிப்பாய் உப அலுவலகக் கட்டடத்தின் முன் மதில் இடிந்து விழுந்த நிலையில் காணப் படுகிறது. எனினும் அதனைச் சீர் செய்யும் நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை என்று சுட்டிக்காட்டப்படுகிறது. [ம–86]



மானிப்பாய் இலங்கை வங்கி கிளையின் 18+ கணக்கு வைத்திருந்த தம்பதியினருக்கு புதுவருட தினத்தன்று திருமணப் பரிசாக ஒரு பவுண் நிறையுடைய தங்க நகையை வங்கி முகாமையாளர் ஜி.சகாதேவன் வழங்குகிறார். [ம–100]



பொன்னாலை வரதராஜப் பெருமாள் திறந்த பாடசாலை அங்குரார்ப்பண வைபவத்தில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ஆ.ராஜேந்திரன் பெயர்ப் பலகையைத் திரைநீக்கம் செய்து வைக்கிறார். அருகில் நிலைய இணைப்பாளரும் பாடசாலை அதிபருமான வெ.சண்முகநாதன் உள்ளார். [ம–253]



வைத்தியர் அமரர் திருமதி வாசுகி தயாளனின் நினைவு தினத்தை முன்னிட்டு கைதடிமுத்துக்குமாரசாமி மகாவித்தியாலய மாணவர்களின் தேவைக்காக அவரது மகன் த.யாதவன் கணினி ஒன்றை வழங்குகிறார். [ம–288]



நானாட்டான் பிரதேசத்தில் உள்ள சூரியகட்டைக்காடு என்னும் கிராமத்தில் இடம்பெற்ற மறைக் கல்வி பற்றிய இறுவட்டு வெளியீட்டு நிகழ்வின்போது சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட மன்னார் மறைமாவட்ட சமூகத் தொடர்பு அருட்பணி மையத்தின் இயக்குநரும் மன்னார் பத்திரிகையின் ஆசிரியரும், மன்னார் தமிழ்ச்சங்கத் தலைவருமான அருட்திரு தமிழ்நேசன் அடிகளார் கலாபூசணம் விருது பெற்ற திரு.செபமாலை அவர்களுக்கு பொன்னாடை போர்த்திக் கௌர விக்கின்றார். [12]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழும் கலை பாகம் I பயிற்சி



இலகு யோகா, தியானம்,
பிராணயாமம், சுதர்சன் கிரியா
மூச்சுப் பயிற்சி,
இன்று மாலை 5.30 க்கு
அறிமுகவுரை
01.05.2012 - 06.05.2012
நேரம்: 4p.m - 6.30 p.m/ 7 p.m-9.30 p.m
இடம்: வாழும் கலை நிலையம்,
செட்டியார் மடம், அராலி வடக்கு, வட்டுக்கோட்டை
தொடர்பு : 0772794093, 0772798688


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
**கிருஸ்ணகுமார் அகிலா**
(கவிதா)
திதி: 30.04.2012

மண்மகிழ
11.12.1980


கண்நெகிழ
12.05.2011

ஆண்டொன்று அகன்றாலும்
ஆறாது எம் மண வேதனைகள் – நீங்கள் வேண்டுமென்று
உங்கள் மூன்று பிள்ளைகளும் தினம் தேடும்
வேதனைகள் தீருவது எப்போது?
எம் தாயே அகிலா
நிஜம் ஒன்று நிழலாகி ஆண்டொன்று ஆனதுவோ அகிலா
எத்தனை ஆண்டுகள் சென்றாலும் – என்றும்
உங்கள் நினைவு எங்கள் நினைவுகளில்
நிலைத்திருக்கும் அகிலா

ச. கிருஸ்ணகுமார்
187/1, விசுவமடுச் சந்தி,
புளியடி.

மீளாத் துயருடனே....
கணவர், பிள்ளைகள்.

## நன்றி நவிலலும் சபிண்டீகரண அழைப்பும்



அமரர்
**காசிநாதர் கனகசிங்கம்**

தோற்றம்
20★03★1944

மறைவு
02★04★2012

கடந்த (02.04.2012) திங்கட்கிழமை சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவர் அமரர் காசிநாதர் கனகசிங்கம் அவர்கள் நோய்வாய்ப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வந்த சமயம் அவருக்கு சிகிச்சை வழங்கிய வைத்திய நிபுணர்கள், வைத்தியர்கள், தாதிய உத்தியோகத்தர்கள் ஆகியோருக்கும் மற்றும் உதவிகள் புரிந்த மேற்பார்வை யாளர்கள், நோயாளர் நலன் புரிசங்க பணியாளர் ஆகியோருக்கும் அன்னாரது இறுதிக்கிரியைகளின் போது நேரில் சமுகமளித்து துக்கத்தில் பங்கு கொண்டோருக்கும், தந்தி, தொலைபேசி, தொலைநகல் வழியாக தங்கள் அனுதாபத்தினைத் தெரிவித்தோர்க்கும், இறுதிக் கிரியைகள் தொடர்பான விடயங்களில் பங்கு கொண்டோர்க்கும், கண்ணீர் அஞ்சலிகள் வெளியிட்டு அனுதாபம் தெரிவித்தோருக்கும் மற்றும் அனைத்து விடயங் களிலும் துணை நின்ற அனைத்து உள்ளங்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு,

இன்று (30.04.2012) திங்கட்கிழமை கீரிமலை புனித தீர்த்தக்கரையில் இடம்பெறும் அந்தியேட்டிக் கிரியையினைத் தொடர்ந்து நாளை (01.05.2012) செவ்வாய்க்கிழமை அன்னாரின் இல்லத்தில் இடம்பெறும் சபிண்டீகரண கிரியைகளிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

சிவன் கோயிலடி
புத்தூர் மேற்கு,
புத்தூர்.

(17469)

குடும்பத்தினர்

## ஆசிரியர்களுக்கு முதலுதவிப் பயிற்சி

பருத்தித்துறை,ஏப்.30

இலங்கை செஞ்சிலு வைச்சங்கம் சர்வ தேச செஞ்சிலுவை, செம்பிறைச் சங்கங்க ளின் சம்மேளனத்தின் அனுசரணையுடன் பருத்தித்துறையில் ஆசிரியர் களுக்கான முத லுதவிப் பயிற்சி கருத்தமர்வை நடத்த நட வடிக்கை மேற்கொண்டுள்ளது.

பருத்தித்துறை பிரதேசத்தில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளின் ஆசிரியர் களுக்கு எதிர்வரும் 3 ஆம் திகதி வியாழக் கிழமையும் 4 ஆம் திகதி வெள்ளிக்கிழமை யும் தும்பளையிலுள்ள இலங்கை செஞ் சிலுவைச் சங்க திட்டக் காரியாலயத்தில் முதலுதவிக் கருதரங்கு காலை 8 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

சர்வதேச செஞ்சிலுவை, செம்பிறைச் சங்கங்களின் சம்மேளனத்தின் அனுசரணை யுடன் இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் பாடசாலைகளுக்கான சுகாதாரக் கல்விச் செயற்றிட்டத்தை பருத்தித்துறை பிரதேசத் தில் மேற்கொண்டு வருகின்றது.

இந்தச் செயற்திட்டத் தின் ஒரு பகுதியா கவே ஆசிரியர்களுக்கான முதலுதவிப் பயிற்சி கருத்தமர்வு நடத்தப்படவுள்ளமை குறிப்பிடத் தக்கது.

(ம-190)

## ஆங்கில அறிவை மேம்படுத்த பயிற்சி

வடமராட்சி கல்வி வலயப் பாடசாலை களில் ஆரம்ப வகுப்புக்களில் ஆங்கிலம் கற் பிக்கும் ஆசிரியர்களுக்கும் மற்றும் ஆங்கி லம் கற்பிப்பதில் ஆர்வமுள்ள ஏனைய ஆசி ரியர்களுக்கும் ஆங்கில அறிவை மேலும் விருத்தி செய்யும் வகையில் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

இந்தப் பயிற்சி நெறிக்கு ஆசிரியர்க ளைத் தெரிவு செய்வதற்காக எழுத்துப் பரீட்சை நடத்தப்படவுள்ளது.

இந்த எழுத்துப் பரீட்சை நாளை மறு தினம் புதன் கிழமை காலை 9 மணிக்கு புலோ லியிலுள்ள கணினி வள நிலையத்தில் நடை பெறவுள்ளதாக வடமராட்சி வலயக் கல் விப் பணிப்பாளர் அறி வித்துள்ளார்.

(ம-190)

## நாய்களுக்குத் தடுப்பூசி

குருநகர் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்கு உட்பட்ட வளர்ப்பு நாய்க ளுக்கு விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி வழங்கும் நிகழ்வு இன்று காலை 9.30 மணிக்கு குருநகர் ஐந்து மாடியிலும், பிற் பகல் 2.30 மணிக்கு பெஸ்கி சனசமூக நிலை யத்திலும் இடம்பெற வுள்ளது.

(ம-14)

## கோழித் திருடர் இருவர் சிக்கினர்

யாழ்ப்பாணம், ஏப்.30

வீடு புகுந்து பிடித்த சந்தேக நபர்களை யாழ். பொலிஸார் நேற்று முன்தினம் கைது செய் துள்ளனர்.

அரியாலையிலுள்ள வீடொன்றில் வெள் ளிக்கிழமை இரவு வேளை கோழிகளைப் பிடித்துள்ளனர் என்ற குற்றச்சாட்டியிலேயே இவர்கள் கைது செய் யப்பட்டுள்ளனர்.

இரண்டு பேரும் சாவகச்சேரிப் பகுதி [illegible] சேர்ந்தவர்கள் என்றும் கூறப்பட்டது.

(ம-4)

## சிறப்பான சேவை



திரு.
**செல்லையா ஜெகதீஸன்**

சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலையில் 1983 ஆம் ஆண்டு கனிஷ்ட ஊழியராக இணைந்து நோயாளர் பராமரிப்பு பணியில் பரிவோடு செயலாற்றி வைத்தியசாலையின் மேற்பார்வையாளராக பதவியுயர்வு பெற்று கடந்த 29 வருடங் களாக தொடர் சேவையாற்றியவர் குறிப்பாக வைத்தியசாலை நலிவுற்ற காலத்தில் தொழில் தராதரம் பாராது அனை வருடனும் ஒத்து ழைத்து வைத்தியசாலையின் வளர்ச்சிக்கு பாடுபட்டவர் தீய பழக்கங்கள் எதுவுமற்ற கீழ்ப்படிவுள்ள ஒழுக்கமுடையவர் அவர் ஒரு விவேகி ஊழியர் பற்றாக்குறை நிலவும் இக்காலத்தில் ஊழியரின் நலனிலும் பார்க்க நோயாளரின் நலனில் அக்கறை கொண்டு செயற்பட்டவர். சமய, சமூக பணிகளில் ஈடுபாடுடையவர். வைத்தியசாலை அபிவிருத்திச் சபையில் நீண்டகாலம் அகத்தவராக இருந்து அபிவிருத்தியில் பங்கேற்றவர் இவ்வாறான சிறந்த சேவையாளரின் சிறப்பான சேவையை இவ் வைத்திய சாலை கடந்த 25.04.2012 உடன் இழந்துவிட்டது. அவரது இளைப்பாற்றுக் காலம் இனிதே அமையப் பிரார்த்திக்கின்றோம்.

சாவகச்சேரி வைத்தியசாலை அபிவிருத்திசபை

# மரண அறிவித்தல்கள்

## செல்வி விஜயை குமாரசேகரம்

(உடையார் வளவு, உரும்பிராய்)



உடையார்வளவு உரும்பிராயைப் பிறப்பிடமாகவும், கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி விஜயைகுமாரசேகரம் நேற்று (29.04.2012) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான S. குமாரசேகரம் (ஓய்வு பெற்ற அதிபர்)-பரிமளம் தம்பதியரின் சிரேஷ்ட புதல்வியும், காலஞ்சென்ற சிவமைந்தன் மற்றும் கிரிஜா (U.K), சிவபாலன் (Standard Chartered Bank) சோமகுமரன் (France) ஆகியோரின் சகோதரியும், மாதவன்,இராமநாதன் (U.K), சுபத்திரா தேவி (France) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (30.04.2012) திங்கட் கிழமை கல்கிசை மகிந்த மலர்சாலையில் காலை 8.00 மணிக்கு அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, மாலை 3.00 மணிக்கு தகனக்கிரியைக்காக பொரளை கனத்தை இந்து மயானத் துக்கு எடுத்துச் செல்லப்பட்டு மாலை 4.30 மணிக்கு தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

83-2/4, Hamden Lane,
Colombo-06.

(1105) (6,7,10)

தகவல்:
குடும்பத்தினர்.

## திருமதி கனகலட்சுமி கணேசபிள்ளை

கருங்காலி, காரைநகரைப் பிறப் பிடமாகவும், திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கனகலட்சுமி கணேசபிள்ளை 27.04.2012 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகமாணிக்கம்-நாகம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம்-ராசம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், கணேசபிள்ளையின் அன்பு மனைவியும், லோகலட்சுமி, கிருஷ்ணவேணி ஆகியோரின் சகோதரியும், ஜெயகௌரி (லண்டன்), பிரியதர்சினி, நளாயினி (ஆசிரியை, யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை) ஆகியோரின் தாயாரும் சிவகுமார் (பொறியியலாளர்-லண்டன்), புஸ்பராஜா (வைத்திய கலாநிதி), ஆனந்தசெந்தூரன் ஆகியோரின் மாமியாரும், கபிலன், சங்கவி, காயத்திரி, லட்சுமி, சாயிப்பிரியா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின் னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

94/6, அருணாசலம் லேன்,
ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி.

(17610) (6,9,10)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஹெரோயின் கடத்திய இருவர் கைது

கோணவல,ஏப்.30

களனி - கோணவல வீதியின் சப்புகஸ்கந்த சந்தியில் ஹெரோயின் போதைப் பொருளுடன் இருவர் கைது செய் யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் போதைப் பொருள் ஒழிப்புப் பிரிவினர் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின்போது இவர்கள் கைதுசெய்யப்பட்டுள் ளனர்.

குறித்த வீதியில் பயணித்துக் கொண்டிருந்த மோட்டார் சைக்கிளை சோதனை செய்தபோது அதில் பயணித்த களனி - கோணவல பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவரிடம் இருந்து 600 கிராம் ஹெரோயின் மீட்கப்பட்டுள்ளது.

ஹெரோயின் கடத்த ஒத்துழைப்பு வழங்கிய மற்றைய சந்தேகநபரான நுகேகொடை பகுதியைச் சேர்ந்த ஒருவரும் இதன்போது கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர்கள் இருவரும் தடுப்புக் காவலில் வைத்து விசாரணை செய்யப்படுகின்றனர். (ச)

## பள்ளிவாசல் மீதான தாக்குதல்:

# அட்டாளைச்சேனை பிரதேச சபையில் நிறைவேறியது கண்டனத் தீர்மானம்

அட்டாளைச்சேனை,ஏப்.30

தம்புள்ள பள்ளிவாசல் தாக்கப்பட்டமையைக் கண்டித்தும், குறித்த பள்ளிவாசலை அகற்றும் நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் அட்டாளைச்சேனை பிரதேச சபையின் மாதாந்த அமர்வில் கண்டனத் தீர் மானம் நிறைவேற்றப்பட்டது.

அட்டாளைச்சேனை பிரதேச சபையின் மாதாந்த அமர்வு சபையின் தவிசாளர் ஏ.எல்.எம். நசீர் தலைமையில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் தம்புள்ள பள்ளிவாசல் விவகாரத்துக்குக் கண்டனம் தெரிவிக்கும் பிரேரணையை தவிசாளர் சபையில் முன்வைத்தார்.

பிரேரணையை முன்வைத்துப் பேசிய பிர தேச சபையின் தவிசாளர் நசீர் தெரிவித்ததாவது:-

தம்புள்ள பள்ளிவாசல் மீதான தாக்குதல் முஸ்லிம் மக்களின் மனங்களில் வேதனையை ஏற்படுத்தியுள்ளது. எந்தவொரு சமூகத் தின் மதத்தலத்தையும் உடைப்பதற்கு அடுத்த சமூகத்தவருக்கு உரிமைகள் இல்லை.

அம்பாறை மாவட்டத்தில் இடம்பெற்ற ஹர்த்தால் மற்றும் அமைதி ஆர்ப்பாட்டங்கள் மூலம் இந்த அரசுக்கு சிறந்ததொரு செய்தி முன்வைக்கப்பட்டுள்ளது. இதைப் புரிந்துகொண்டு இந்த விடயத்தில் ஜனாதிபதி தீர்க்கமானதொரு முடிவினை எடுக்க வேண்டும்.

எமது சமூகத்துக்காகக் குரல் கொடுப்பதற்காகவே மக்கள் இந்த சபைக்கு எம்மைத் தெரிவு செய்து அனுப்பி வைத்துள்ளனர். ஆனால் இன்று சில முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களும், அமைச்சர்களும் தம்புள்ள பள்ளி விவகாரத்தில் மௌனிகளாக இருப்பது வெட்கக் கேடானதொரு விடயமாகும்.

**அம்பாறை மாவட்டத்தில் இடம்பெற்ற ஹர்த்தால் மற்றும் அமைதி ஆர்ப்பாட்டங்கள் மூலம் அரசுக்கு சிறந்ததொரு செய்தி முன்வைக்கப்பட்டுள்ளது. இதனைப் புரிந்துகொண்டு அரசு தீர்க்கமான நடவடிக்கையை எடுக்கவேண்டும்.**

எந்த சிறுபான்மைச் சமூகத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும் அவர்களின் மத உரிமை மதிக்கப்பட வேண்டும், அவர்கள் கண்ணியமாக நடத்தப்படுதல் வேண்டும்- என்றார்.

முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர் எஸ்.எல். முனாஸ் தெரிவித்ததாவது:-

ஒவ்வொரு மதஸ்தாபனம் இருக்கும் இடமும் அந்தந்த மதத்தவர்களுக்கு புனித பூமிதான். இன்று நாட்டில் ஏற்பட்டிருப்பது சுயநலவாதப் போக்காகும். எங்கு பார்த்தாலும் முஸ்லிம்களின் நிலங்கள் புனித பூமி எனும் பெயரில் அபகரிக்கப்படுகின்றன. இதை ஏற்றுக்கொள்ள முடி யாது.

நாட்டின் இறைமையைப் பாதுகாக்க வேண்டும் என்பதற்காக முஸ்லிம் அமைச்சர்கள், முஸ்லிம் நாடுகளின் ஆதரவை இலங்கைக்குப் பெற்றுக் கொடுத்த நன்றியினைக் கூட, இந்தப் பேரினவாதிகள் நினைத்துப் பார்க்கவில்லை என்பது வேதனையளிக்கின்றது.

பள்ளிவாசலை அகற்ற வேண்டும் என்று நாட்டின் பிரதமரே தீர்மானத்தை எடுத்திருப்பது நாட்டின் இன ஐக்கியத்துக்கு குந்தகத்தை ஏற்படுத்தும் ஒரு விடயமாகவே பார்க்கப்படுகிறது- என்றார்.

(ச)



களுவாஞ்சிக்குடி பொலிஸாரினால் ஏற்பாடு செய்யப்பட்ட நடமாடும் சேவை நேற்றுமுன்தினம் சனிக்கிழமை பழுகாமம், கண்டுமணி மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது. இந்தநிகழ்வில் களுவாஞ்சிகுடி உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பிரியந்த லியனகே, பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மானவடு, வைத்திய அத்தியட்சகர் சுகுணன், சுகாதார வைத்திய அதிகாரி கிருஷ்ணகுமார், பிரதேச செயலாளர் வில்வரட்ணம் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

## 10,000 கால்நடைகள் இறக்குமதியாகும்?

நுவரெலியா,ஏப்.30

தேசிய பால் உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கில் 10,000 கால்நடைகளை இலங்கைக்கு இறக்குமதி செய்வது தொடர்பான கலந்துரையாடல் கொட்டகலை தொழிற் பயிற்சி நிலையத்தில் நடைபெற்றது. (ச)

## லிந்துலை நீர்மின் நிலையத்தின் உற்பத்திப் பணி இடைநிறுத்தம்

தலவாக்கலை,ஏப்.30

தலவாக்கலை, லிந்துலையில் இயங்கிவரும் தனியார் நீர்மின் உற்பத்தி நிலையத்தின் நடவடிக்கைகள் உடனடியாக நடைமுறைக்கு வரும்வகையில் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

இந்த மின் உற்பத்தி நிலையத்தின் இரசாயனக் கழிவுகள் கொத்மலை ஓயாவில் கலக்கப்படுவதன் காரணத்தினாலேயே உற்பத்தி நடவடிக்கைகள் அனைத்தும் இடைநிறுத்தப்பட்டுள்ளன என்று நுவரெலியா மாவட்ட செயலாளர் டி.பி.ஜி. குமார சிறி தெரிவித்தார்.

இந்த தனியார் நீர்மின் உற்பத்தி நிலையத்தின் இரசாயனக் கழிவுகள் அனைத்தும் கொத்மலை ஓயாவிலேயே திறந்து விடப்படுகின்றன. இதனால் கொத்மலை ஓயா மாசமடைவதுடன் லிந்துலை பிர தேசத்தில் சுகாதாரச் சீர்கேடு மற்றும் இதர உபாதைகள் ஏற்பட்டதுடன் இரண்டு மரணங்களும் ஏற்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

**கொத்மலை ஓயா மாசமடைவதனால் லிந்துலை பிரதேசத்தில் சுகாதாரச் சீர்கேடு மற்றும் இதர உபாதைகள் ஏற்பட்டுள்ளன.**

தற்போது கொத்மலை ஓயா நீர் இரசாயன ஆய்வுக் குட்படுத்தப்பட்டிருப்பதன் காரணத்தால் அதன் அறிக்கை வெளியாகும் வரை இந்த இரசாயனக் கலவை நீரில் கலக்கப்படுவதை தடுக்கும் முகமாக உற்பத்திப் பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன என்று சுகாதாரப் பிரிவு தெரிவித்துள்ளது.

அறிக்கை வெளியான பின்னரே நீர்மின் உற்பத்தி நிலையப் பணிகள் தொடர்பில் தீர்மானிக்க முடியும் என்று சுகாதாரப்பிரிவு தெரிவித்துள்ளது. (ச)

## பல்வேறு குற்றங்களுடன் ஐந்து பேர் கைது

சிலாபம்,ஏப்.30

கஞ்சா பொதிகளுடன் சந்தேகநபர்கள் இருவர் கலாவத்த பிரதேசத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் கஞ்சாப் பொதி ஒன்றை விற்க முற்பட்டபோது கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்களை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை புத்தளம் - சிலாபம் பகுதியில் 11 கிலோ கஞ்சாவுடன் ஒருவரும் போலி நாணயத் தாள்களுடன் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சிலாபம் ரயில் குறுக்கு வீதி, காக்கைபள்ளி பகுதியைச் சேர்ந்த ஒருவரே 11 கிலோ கிராம் கஞ்சாவுடன் கைது செய்யப்பட்டுள்ளார். அவர் தடுப்புக் காவலில் வைத்து விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

1000 ரூபா போலி நாணயத் தாள்களுடன் குருநாகல் - சிலாபம் வீதியில் வசிக்கும் ஒருவரும் சிலாபம், காக்கை பள்ளியைச் சேர்ந்த ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் சிலாபம் நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்தப்படவுள்ளனர். (ச)

## பிரதேச சபை உறுப்பினர் மீது தாக்குதல்

அக்கரைப்பற்று,ஏப்.30

அக்கரைப்பற்று பிரதேசசபை உறுப்பினரான மொஹமட் அலியார் இந்தப் பிரதேச சபை உதவித் தவிசாளரால் தாக்கப்பட்டதாக அக்கரைப்பற்று பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

காயமடைந்த பிரதேச சபை உறுப்பினர் மொஹமட் அலியார் அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவர்அக்கரைப்பற்று பிரதேச சபை அமர்வில் கலந்துகொள்ள சென்றபோதே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் குறித்து விசாரணை நடத்தி வருவதாக அக்கரைப்பற்று பொலிஸார் தெரிவித்தனர். (ச)

## அகற்றப்பட்டது 20 வருட 'சென்றி'

கல்முனை,ஏப்.30


கல்முனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பாண்டிருப்பு கிராமத்தின் எல்லை வீதியில் கடந்த இருபது வருடங்களுக்கு மேலாக இயங்கிவந்த பொலிஸ் சோதனைச்சாவடி அகற்றப்பட்டுள்ளது.

கடந்த போரின்போது 1991 ஆம் ஆண்டுக்குப் பின்னர் ஆரம்பிக்கப்பட்டிருந்த பாண்டிருப்பு பொலிஸ் சோதனைச் சாவடியில் படையினர், விசேட அதிரடிப் படையினர் ஆகியோர் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

அதன் பின்னர் அவர்கள் அங்கிருந்து அகற்றப்பட்ட பின்னர் பொலிஸார் அங்கு பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்ததுடன் பொலிஸ் முறைப்பாடுகள், பிரச்சினைகள் ஆகியவற்றையும் கண்காணிக்கும் ஒரு நிலையமாக இந்தச் சோதனைச் சாவடி இயங்கி வந்துள்ளது.

கடந்த புதன்கிழமை அங்கு நிலை கொண்டிருந்த பொலிஸார் மேலிட உத்தரவுக்கமைய அங்கிருந்து முற்று முழுதாக அகன்று சென்றுள்ளனர். அவர்கள் தங்கியிருந்த கட்டடங்களும் உரியவர்களிடம் ஒப்படைக்கப்பட் டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

## சூழல் மாசடைவால் அழிந்துபோகும் மீன்



நுவரெலியா,ஏப்.30

உலகில் மஹாவலி கங்கையில் மட்டும் காணக்கூடிய மீன் வர்க்கம் ஒன்று சுற்றாடல் மாசடைவு காரணமாக அழிந்துபோகும் நிலை உருவாகியுள்ளதாக சுற்றாடல்துறை ஆராய்ச்சியாளரான பிரதீப் சமரசிங்க தெரிவித்தார்.

கிரீன் லபயோ என்று அழைக்கப்படும் இந்த மீன் சுமார் 40 சென்றிமீற்றர் வரை நீளமுடையது என்று அவர் கூறினார்.

இந்த இடத்தில் மேற்கொள்ளப்படும் சுற்றாடலை பாதிக்கும் செயல்கள் காரணமாக மீன் வகை அழிந்து வருகின்றன என்று அவர் மேலும் குறிப்பிட்டார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருவது வித்தியா

**மேடம்:** எதிலும் பொறுமை, நிதானத்துடன் செயற்பட்டால், புகழ் சேர்க்கலாம். செயற்திறன் வெளிப்படும். புதிய முயற்சிகளில் ஏற்படும் சிக்கல்களால், மனபக்குழப்பங்கள் உருவாகும். எதிலும், மிகுந்த யோசனைக்கு பின் செயற்படுதல் நல்லது.

**இடபம்:** பணம் பற்றிய சிந்தனை அதிகமாக இருக்கும். கணவன், மனைவி உறவில் சிறு பிணக்குகள் ஏற்பட்டு மறையும். போட்டி, பொறாமைகள் கூடும். தொழிலில் லாபங்கள் கூடும். கலைத்துறையினர் மன நிம்மதி குறைவைத் தவிர்க்கலாம்.

**மிதுனம்:** நீங்கள் எதிர்பார்த்த விடயங்கள், ஒவ்வொன்றும் எதிர்பார்ப்புக்கு மேலாக அமையும். பொருளாதார நெருக்கடிகள் தீர்வுக்கு வரும். கடன் குறையும். அரச வகையில், எதிர்பார்த்த உதவிகள் கிடைத்து சந்தோஷம் அடைவீர்கள்.

**கடகம்:** வழக்கமான பணிகளில் கூட குழப்பம் மற்றும் தடுமாற்றத்தைச் சந்திக்கலாம். செலவுகளில்கூட சிக்கனம் தேவை. தொழிலில் எதிர்பாராத சிரமங்களைச் சந்திக்க வேண்டியிருக்கும். குழந்தைகளால் மருத்துவச் செலவுகள் ஏற்படலாம்.

**சிங்கம்:** காரணமற்ற வெறுப்பும், கோபமும் அடிக்கடி ஏற்படும். கோபத்தைக் குறைத்து, நிதானமாகச் செயற்பட வேண்டும். வெளியூர் பயணங்களால், சங்கடங்களைச் சந்திக்கலாம். விருந்து உபசாரங்களில் பங்கேற்கலாம். தந்தை வழியில் உதவிகள் கிடைத்து உற்சாகம் பெறுவீர்கள்.

**கன்னி:** காரியங்களைத் திட்டமிட்டப்படி செய்து முடிப்பீர்கள். வெளிவட்டாரப் பழக்க வழக்கங்கள் அதிகரிக்கும். காரியங்களில் ஏற்படும் தடைகளால், மன அமைதி குறையும். புதிய வேலைவாய்ப்புக்கான தகவல்கள் மன நிறைவைத்தரும்.

**நாளை**

*சித்திரை 19 செவ்வாய்க்கிழமை 01.05.2012*
*திதி: தசமி மு.இ. 08.19 வரை*
*நட்சத்திரம்: மகம் பி.ப .12.53 வரை*
*சுபநேரம்: 10.27- 11.57 வரை*
*ராகு காலம்: 02.57- 04.27 வரை*

**துலாம்:** துணிச்சல், தன்னம்பிக்கை அதிகரிக்கும். பணவரவுகள் தாமதமான போதும், காரியங்களை பாதிப்பில்லாமல் செய்து முடிப்பீர்கள். தொழில் மற்றும் வியாபாரத்தில், சந்தைப்படுத்துதலில் நவீன யுத்திகளைக் கையாளுவீர்கள். அதனால் லாபங்கள் அதிகரிக்கும்.

**விருச்சிகம்:** செலவுகளைக் கட்டுப்படுத்தி சேமிப்பை அதிகரிப்பீர்கள். தொழில், வியாபாரத்தில் ஆர்வம் மேலிடும். வாகனங்களில் செல்லும்போதும் பயணங்களின் போது கவனம் தேவை. அலுவலகப் பணிகளில் கடும் வேலைப்பளு கலங்கடிக்கலாம்.

**தனுசு:** புதிய ஒப்பந்தங்களைத் பிற்போட்டு வைப்பது நன்மை தரும். நிலம், பூமி தொடர்பான பிரச்சினைகளில் சுமுகமான நிலையை எட்ட வாய்ப்புகள் உண்டு. உங்களைப் பற்றிய சிலரின் விமர்சனங்கள் அதிகம் யோசிக்க வைக்கும். பொருள்படுத்திக் கொள்ளாதீர்கள்.

**மகரம்:** எவ்வளவுதான் யோசித்துச் செயற்பட்ட போதும், பெண்களால் பிரச்சினைகளைச் சந்திக்க நேரிடலாம் கவனம். அலுவலகப் பணிகளில் சலுகைகள் கிட்டும். வெளிநாட்டுத் தொடர்புகளில் எதிர்பார்த்த தகவல் கிடைக்கப்பெறுவீர்கள்.

**கும்பம்:** சோர்வுகள் அகன்று மனதில் தெம்பு, உற்சாகம் அதிகரிக்கும். அதிர்ஷ்ட வாய்ப்புகள் ஏற்படும். தொழில் ரீதியாக, புதிய முயற்சி ஒன்றில் ஈடுபடுவீர்கள். குடும்பத்தில் அமைதி நிலவும். அரசியல் தொடர்புடைய வேலைகளால் பணச்செலவு ஏற்படும்.

**மீனம்:** எடுத்த காரியங்கள் எண்ணம்போல நிறைவேறும் நாள். குடும்பத்துக்காக, சில கஷ்டங்களை அனுபவிக்க முன்வருவீர்கள். நண்பர்களிடம் வார்த்தை தவறுதலால் மனக்கஷ்டம் ஏற்படும். தொழில் மற்றும் வியாபாரத்தில் மந்த நிலை நீடிக்கும்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 7 | | 2 | | 4 | | | 9 |
| | | 1 | | | 7 | | 4 | 3 |
| 9 | | 2 | | | | 1 | | 8 |
| 2 | 1 | | 4 | | | | | 5 |
| | | | 3 | | 5 | | | |
| 8 | | | | | 1 | | 3 | 6 |
| 4 | | 9 | | | | 3 | | 7 |
| 6 | 3 | | 1 | | | 8 | | |
| | | | 9 | | 3 | | 6 | |

## சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 9 | 8 | 5 | 4 | 1 | 7 | 3 | 6 |
| 3 | 6 | 7 | 2 | 9 | 8 | 5 | 1 | 4 |
| 1 | 4 | 5 | 6 | 7 | 3 | 8 | 9 | 2 |
| 6 | 7 | 1 | 8 | 3 | 9 | 2 | 4 | 5 |
| 4 | 5 | 9 | 1 | 6 | 2 | 3 | 8 | 7 |
| 8 | 2 | 3 | 4 | 5 | 7 | 9 | 6 | 1 |
| 7 | 3 | 6 | 9 | 2 | 4 | 1 | 5 | 8 |
| 9 | 8 | 4 | 7 | 1 | 5 | 6 | 2 | 3 |
| 5 | 1 | 2 | 3 | 8 | 6 | 4 | 7 | 9 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசது ரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள்பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# நீங்காத நினைவில் 5ஆம் ஆண்டு

## திருமதி உமாதேவி நடராசா

(ஆசிரியை, யா/இராமநாதன் கல்லூரி)

திதி: 30.04.2012



தோற்றம் : 29.10.1951

மறைவு : 25.04.2007

காலையும் வெந்தது மாலையும் வெந்தது
ஆறாப் புண்ணில் மாறாக் காயமாய்
எரிந்தது தீயாய் நின் நினைவு
கண்ணியம் காக்கும் தாயே!
புண்ணியம் போற்றப் பிறந்தவளே!
ஐந்தாண்டு காலம் ஓடிப்போனாலும்
உம் நினைவு எம் நெஞ்சை விட்டகலாது
நிலையில்லா இவ்வுலகில்
நிலைத்து விட்ட உன் அன்பால்
நினைவிழக்க முடியாத – நாம்
நீந்துகின்றோம் கண்ணீரில்

சபாபதிப்பிள்ளை வீதி,
உடுவில் கிழக்கு,
சுன்னாகம்.

கணவர்:- சி.நடராசா (அதிபர்),
திருமதி Dr. அனுஷா யோகநாதன் (பெறாமகள்- யாழ். போதனா வைத்தியசாலை)
ஆருசன், அக்ச்சயா (பேரப்பிள்ளைகள்),
புஸ்பம்-சந்திரகுமார், சுசிலா-சுப்பிரமணியம், சு. பிறேம்குமார் (இந்தியா) } சகோதரர்கள்
மற்றும் அண்ணிமார், அண்ணன்மார், மருமக்கள், பெறாமக்கள்
தொலைபேசி இல. 077 617 6861, 021 2240316

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முஸ்லிம் காங்கிரஸ் ஐ.தே.கவுடன் பேச்சு

கொழும்பு,ஏப்.30

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி, ஐக்கிய தேசியக் கட்சியுடன் பேச்சு நடத்தத் திட்டமிட்டுள்ளது.

தம்புள்ள சம்பவத்தைத் தொடர்ந்து ஆளும் கட்சியிலிருந்து விலகிக் கொண்டால், அடுத்த கட்ட நடவடிக்கைகள் குறித்து பேச்சு நடத்தப்படவுள்ளது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் சிரேஷ்ட உறுப்பினர்கள் சிலர் ஏற்கனவே உத்தியோகப்பற்றற்ற ரீதியில் பேச்சு நடத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான மங்கள சமரவீர, ஜோன் அமரதுங்க மற்றும் சிரேஷ்ட உறுப்பினரான மலிக் சமரவிக்ரம ஆகியோர் இந்தப் பேச்சுக்களில் பங்கேற்று வருவதாக கட்சித் தகவல்கள் தெரிவிக்கின்றன.

முஸ்லிம் காங்கிரஸ் கட்சி ஆளும் கட்சிக்கு அளித்து வரும் ஆதரவை வாபஸ் பெற்றுக் கொண்டால், சில ஆளும் கட்சி முஸ்லிம் அமைச்சர்கள் சுயாதீனமாக இயங்கத் தீர்மானித்துள்ளனர்.

இதேவேளை, முஸ்லிம் வர்த்தகர்களும், சில தூதரகங்களும் ஆளும் கட்சியை விட்டு விலகுமாறு முஸ்லிம் அமைச்சர்களுக்கு அழுத்தம் கொடுத்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ச)

## அபிவிருத்திக்காக...



இலங்கை ஏற்றுமதியாளர்களை பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ கொழும்பில் சந்தித்து கலந்துரையாடுகின்றார்.

# இறக்குமதித் தீர்வை அதிகரிப்பு; துறைமுகத்துக்கு அப்பால் கப்பல்

கொழும்பு,ஏப்.30

2000 வாகனங்களைக் கொண்ட நான்கு கப்பல்கள் கடந்த இரண்டு வாரங்களாக கொழும்புத் துறைமுகத்துக்கு அப்பால் தரித்து நிற்கின்றன. வாகன இறக் குமதி தீர்வை அதிகரிப்பால் ஏனைய வானங்களை இறக்குமதியாளர்கள் எடுத்துச் செல்லாததால் துறைமுகத்தில் கப்பல்களை நங்கூரமிட முடியவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

அரசு கடந்த ஏப்ரல் முதலாம் திகதி முதல் வாகன இறக்குமதிகளுக்கான தீர்வைகளை அதிகரித்துள்ளது. இதன் காரணமாக அதிகரித்த தீர்வைகளின் அடிப்படையில் தாம் இறக்குமதி செய்த வாகனங்களை வாகன இறக்குமதியாளர்கள் துறைமுகத்தில் இருந்து எடுத்துச் செல்வதில் தாமதத்தைக் காட்டி வருகின்றனர்.

**இறக்குமதித் தீர்வை அதிகரித்ததால் வாகன உரிமையாளர்கள் தமது வாகனங்களை எடுத்துச் செல்வதில் தாமதத்தை காட்டி வருகின்றனர்.**

ஏற்கனவே தாம் கொடுப்பனவை செலுத்த தீர்மானித்திருந்த இறக்குமதி தீர்வையைக் காட்டிலும் தற்போது அதிக தீர்வையைச் செலுத்தி, வாகனங்களை எடுத்துச் செல்வதன் மூலம் வாகனப் பாவனையாளர்களுக்கு அதிக விலைகளில் வாகனங்களை விற்பனை செய்ய முடியாதுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தக் கப்பல்களின் தாமத கட்டணங்களாக துறைமுக அதிகாரசபைக்கு சுமார் 1 மில்லியன் ரூபாவை மேலதிகமாகச் செலுத்த வேண்டியுள்ளதாகக் கூறப்படுகின்றது.

இதேவேளை வாகனங்களுக்கான தீர்வை அதிகரிப்பை அம்பாந்தோட்டை துறைமுகத்தின் ஊடாக வாகன இறக்குமதிகளை மேற்கொள்ளும்போது குறைக்க முடியும் என்று அரசு வாகன இறக்குமதியாளர்களுக்கு உறுதி வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

# மே 7

## பொது விடுமுறை

கொழும்பு,ஏப்.30

எதிர்வரும் 7 ஆம் திகதி திங்கட்கிழமையை பொது விடுமுறை தினமாக அரசு பிரகடனப்படுத்தியுள்ளது.

வெசாக் விடுமுறை தினங்களாக எதிர்வரும் 5 ஆம், 6 ஆம் திகதி அமைவதால் 7 ஆம் திகதி பொது, வங்கி விடுமுறை தினமாக பிரகடனப்படுத்தியுள்ளதாக பொதுநிர்வாக, உள்நாட்டுச் அலுவல்கள் அமைச்சு தெரிவித்துள்ளது. (ச)

# ரூ.21 மில்லியன் அரசுக்கு லாபம்

கொழும்பு,ஏப்.30

சுத்தமற்ற முறையில் உணவுகளைத் தயார் செய்து விற்பனை செய்து வந்த விற்பனை நிலையங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டதில் 21 மில்லியன் ரூபாவுக்கும் அதிக தொகை அரசுக்கு லாபமாகக் கிடைத்துள்ளது.

இந்தத் தொகை கடந்த ஆண்டில் பெறப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இவ்வாறு சுத்தமற்ற முறையில் விற்பனை நிலையத்தை நடத்தி வந்த உரிமையாளர்கள் 5,711 பேருக்கு எதிராக கடந்த வருடம் வழக்குத் தொடரப்பட்டது என்று அமைச்சு தெரிவித்துள்ளது.

கடந்த வருடம் 15,000 வகை உணவுப் பொருள்களை பரிசோதனைக்கு உட்படுத்தியதாகவும் அவற்றில் 63 வீதமானவை சிறந்த முறையில் இருந்ததாகவும் அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (ச)

## பதவியை இராஜினாமா செய்யவும்!

கொழும்பு,ஏப்.30

பிரதமர் டி.எம். ஜயரட்ண பதவி விலக வேண்டும் என்று இஸ்லாமிய ஒருமைப் பாட்டு முன்னணி கோரிக்கை விடுத்துள்ளது. பிரதமர் டி. எம். ஜயரட்ண சமய விவகார அமைச்சராக கடமையாற்றி வருகின்றார், அவர் சமய விவகார அமைச்சுப் பொறுப்பை இராஜினாமாச் செய்ய வேண்டும்.

ஊடகங்களுக்கு பிழையான தகவல்கள் வெளியிடப்பட்டு வருவதாக அவர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

# மருந்துப் பொருள்களின் தரம் குறித்து முறைப்பாடு இல்லை

## சுகாதார அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு,ஏப்.30

மருந்துப் பொருள்களினுடைய தரம் பற்றிய முறைப்பாடுகள் எவையும் இதுவரை சுகாதார அமைச்சில் பதிவாகவில்லை என்று சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

சுகாதார அமைச்சு மற்றும் மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் மேற்கொண்ட நடவடிக்கைகளின் மூலம் சிறந்த பலனைப் பெற முடிந்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

மருந்துப் பொருள்கள் மற்றும் உபகரணங்களைக் கொள்வனவு செய்வதைக் குத்தகைக்கு வழங்குதல் தொடர்பில் கவனம் செலுத்தப்படும் என்று அவர் தெரிவித்தார். (ச)

## பாதுகாப்புக் கோருகின்றனர் பிரதேச சபை உறுப்பினர்கள்

கொழும்பு,ஏப்.30

களனி பிரதேசசபை உறுப்பினர்கள் பொலிஸாரின் பாதுகாப்பைக் கோரியுள்ளனர்.

மக்கள் தொடர்பு அமைச்சர் மேர்வின் சில்வாவின் அடியாள்களினால் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக அவர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

தமக்கு ஏற்பட்ட அச்சுறுத்தல்கள் தொடர்பில் களனிப் பிரதேச சபையின் தலைவர் பிரசன்ன ரணவீர, பாதுகாப்புச் செயலாளர், பொலிஸ்மா அதிபர் உள்ளிட்டோருக்கு எழுத்து மூலம் முறைப்பாடு செய்துள்ளார்.

களனி பிரதேச சபையின் பிரதித் தலைவரின் வீட்டின் மீது நடத்தப்பட்ட தாக்குதல் தொடர்பிலும் முறைப் பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே, பிரதேச சபை உறுப்பினர்கள் மற்றும் குடும்ப உறுப்பினர்களுக்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ச)

# இலங்கையில் முதன்முறையாக பனடோல் தொழிற்சாலை

கொழும்பு,ஏப்.30

பனடோல் மாத்திரைகளை உற்பத்தி செய்யும் தொழிற்சாலையொன்று இலங்கையில் முதன்முதலாக இரத்மலானையில் திறந்து வைக்கப்பட்டது.

217 மில்லியன் ரூபா முதலீட்டில் இந்தத் தொழிற்சாலை நிறுவப்பட்டுள்ளது. இதுவார காலமும் ஐக்கிய இராச்சியத்திலிருந்தே பனடோல் இறக்குமதி செய்யப்பட்டு வந்தது. தற்போது இங்கு உற்பத்தி செய்யும் பனடோல் சர்வதேச தரமிக்கதாக அமைந்துள்ளது.

கிளாசோ ஸ்மிம்கேலைன் எனும் நிறுவனமே ஏற்கனவேயுள்ள உற்பத்திகளுடன் பனடோல் உற்பத்தியையும் மேற்கொள்ள ஆரம்பித்துள்ளது. இதற்கான இயந்திரத் தொகுதியை நிறுவுவதற்கென 50 ஆயிரம் கிலோ மீற்றர் நிலப்பரப்புக்கு மாத்திரம் 1.4 பில்லியன் ரூபா செலவிடப்பட்டது.

இங்கு 2.4 பில்லியன் பனடோல் மாத்திரைகளை உற்பத்தி செய்யும் வலுவுள்ள இயந்திரம் நிறுவப்பட்டுள்ளது. எனினும் அவற்றில் 50 வீதமான கொள்ளளவுக்கு பனடோல் மாத்திரைகளையும், ஏனைய 50 வீதக் கொள்ளளவுக்கு ஏனைய வகை மருந்து மாத்திரைகளையும் உற்பத்தி செய்யத் தீர்மானிக்கப்பட்டது.

இந்தத் தொழிற்சாலை பயிற்றப்பட்ட ஆளணிகளுடன் முழுமையான ஆய்வுகூட வசதிகள், பரிசோதனைக் கூடங்கள் என்பவற்றையும் கொண்டுள்ளன. இங்கு உற்பத்தி செய்யப்படும் பனடோலின் தேவைக்கு இங்கு பூரணப்படுத்தப்படும் பட்சத்தில் அவற்றை ஏனைய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யவும் முடியும்.

எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் இன்னுமொரு இயந்திரத் தொகுதி இங்கு நிர்மாணிக்கப்படவுள்ளது. இந்த வெற்றி நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவும் என்று நிர்வாக இயக்குநர் ரி.எஸ்.தயானந்த தெரிவித்தார். (ச-4)

# புனர்வாழ்வு பெறாத போராளிகளை அடையாளம் காண நடவடிக்கை

கொழும்பு,ஏப்.30

இதுவரையில் புனர்வாழ்வு அளிக்கப்படாத புலி உறுப்பினர்களை அடையாளம் காண விசேட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்று தெரிவிக்கப்படுகிறது.

இறுதிக் கட்ட போரின்போது தலைமறைவாகிய மற்றும் தப்பிச் சென்ற விடுதலைப் புலிகள் பற்றிய தகவல்கள் திரட்டப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, புனர்வாழ்வு அளிக்கப்படாத 500 விடுதலைப் புலி உறுப்பினர்கள் பற்றிய தகவல்கள் திரட்டப்பட்டுள்ளன என்று குறிப்பிடப்படுகிறது.

புலி உறுப்பினர்களுக்கு புனர்வாழ்வு அளிக்கும் நோக்கில் பொலிஸார் தேடுதல் வேட்டைகளை ஆரம்பித்துள்ளனர்.

புனர்வாழ்வு அளிக்கப்பட்ட முன்னாள் போராளிகள் குற்றச் செயல்களில் ஈடுபட்டதாக இதுவரையில் தகவல்கள் கிடைக்கவில்லை என்று பாதுகாப்புத் தரப்பினர் தெரிவித்தனர். (ச)

# கொலன்னாவ கொலை; பணிப்பெண் கைது

கொழும்பு,ஏப்.30

கொலன்னாவ வீடொன்றில் ஓய்வுபெற்ற ஆசிரியை ஒருவரை கொலை செய்து விட்டு அவரது பணம், தங்க நகைகளைத் திருடிக் கொண்டு தலை மறைவாகிய வீட்டுப் பணிப் பெண் ஒருவரை மாத்தளையில் வைத்து நேற்றுமுன்தினம் மாத்தளை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்தப் பணிப்பெண் மாத்தளை பிரதேசத்தில் மறைந்திருப்பதாக மாத்தளை பொலிஸாருக்குக் கிடைத்த தகவல் ஒன்றையடுத்து பொலிஸார் சந்தேகநபரான அந்தப் பணிப் பெண்ணை கைது செய்துள்ளனர். இந்தச் சந்தேக நபரை வெல்லம்பிட்டிய பொலிஸாரிடம் ஒப்படைக்க மாத்தளை பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## திருமதி சிவரூபராணி செந்திவடிவேலு



வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும், வல்வெட்டியில் வசித்துவந்த வருமான திருமதி சிவரூபராணி (இந்திரா) செந்திவடிவேலு 28.04.2012 சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பறங்கியார் தில்லையம்பலம்- மாரிமுத்து தம்பதியரின் மகளும், காலஞ்சென்றவர்களான நல்லதம்பி- சின்னத்தங்கம் தம்பதியரின் மருமகளும், நல்லதம்பி செந்திவடிவேலு (இளைப்பாறிய இலிகிதர்) வின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சிறீதரன் மற்றும் கலாநிதி நவநீதன் (ஆஸ்திரேலியா), காலஞ்சென்ற மணிவண்ணன் மற்றும் பால்ராஜன் (லண்டன்), காலஞ்சென்ற ரஞ்சித்குமார் மற்றும் யசோதை (யாழ்ப்பாணம்) ஆகியோரின் தாயாரும், மங்களேஸ்வரி (ஆஸ்திரேலியா), கஜலக்குமி (லண்டன்), யோகதுரை (யாழ்ப்பாணம்) ஆகியோரின் மாமியாரும் பிருந்தன், அபிசா, வினுசா (ஆஸ்திரேலியா), சிறீதரன், மணிவண்ணன்,கேசவன் (லண்டன்), ரஞ்சித்குமார், அருண்குமார் (யாழ்ப்பாணம்) ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (01.05.2012) செவ்வாய்க்கிழமை மு.ப. 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று ஊரணி மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மாதர் வளவு,
மல்லீ ஓடை ஒழுங்கை,
வல்வெட்டி, வல்வெட்டித்துறை.

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(176056) (6,9,10)




யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா ஆகிய மாவட் டங்களில் மேகக் கூட்டத்துடன் கூடிய வானிலை நிலவும்.

# இலங்கையில் மதச் சுதந்திரத்தை பாதுகாக்க நடவடிக்கை எடுங்கள்

## ஐ. நாவுக்கு உருத்திரகுமாரன் கடிதம்



இலங்கைக்குச் சென்று அங்கு இடம்பெற்ற மதங்களுக்கு எதிரான செயற்பாடுகளுக்கு எதிராக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று நாடு கடந்த தமிழீழ அரசு ஐ.நாவிடம் கோரியுள்ளது.

இந்தக்கோரிக்கை குறித்து ஐக்கிய நாடுகளின் சட்ட விரோத கொலைகள் மற்றும் மத விடுதலை தொடர்பான விசேட நிபுணர் ஹெய்னர் பிலபெல்ட் டுக்கு நாடு கடந்த தமிழீழ அரசின் பிரதமர் வி.உருத்திரகுமாரன் கடிதம் அனுப்பியுள்ளார்.

அவர் எழுதிய கடிதத்தில் மேலும் குறிப்பிடப் பட்டுள்ளதாவது:-

இலங்கையில் பௌத்த பிக்குமாரால், முஸ்லிம் பள்ளிவாசல்கள் தாக்கப்படுகின்றன. அண்மையில் தம்புள்ள பள்ளிவாசல் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டது. அதேநேரம் இலங்கை அரசால் இந்துக் கோயில்கள் மூடப்படுகின்றன.

எனவே உடனடியாக இலங்கைக்குச் சென்று பௌத்த மதங்களைத் தவிர்ந்த ஏனைய மதங்களின் உரிமைகளைப் பாதுகாக்குமாறு, இலங்கை அரசிடம் வலியுறுத்த வேண்டும். அத்துடன் மதங்களைப் பாதுகாப்பதற்காக சர்வதேச பொறி முறை ஒன்றும் ஏற்படுத்தப்படவேண்டும்.

இலங்கையில் பௌத்த பிக்குமார் அதிகாரம் மிக்கவர்களாகக் கருதப்படுகின்றனர். 1958 ஆம் ஆண்டு தமிழர்களுடன் பேச்சு நடத்தியமைக்காகவே அப்போதைய இலங்கைப் பிரதமர் பண்டாரநாயக்க பௌத்த பிக்கு ஒருவரால் கொல்லப்பட்டார்.

இந்தநிலையில், தற்போது ஏனைய மதங்களுக்கு எதிரான செயற்பாடுகளை முன்னெடுப்பதில் இலங்கையின் அமைச்சரவை அமைச்சரான பாட்டலி சம்பிக்க ரணவக்க முன்னின்று செயற்பட்டு வருகிறார்.

தம்புள்ளயில் பள்ளிவாசல் தாக்கப்பட்ட அதே நேரம், திருகோண மலையில் 60 வருட பழமைவாய்ந்த பிள்ளையார் கோயில் ஒன்றை அகற்றுமாறு இலங்கை அரசு உத்தரவிட்டுள்ளது.

அத்துடன் மன்னார் மடுத் திருப்பதியில் கிறிஸ்தவ பூமிப் பகுதியில் புத்தர் சிலைகளை வைப்பதற்கும் முயற்சிகள் மேற்கொள்ளப் படுகின்றன- என்று அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (வ)

# தம்புள்ள பள்ளிவாசல் விவகாரம் இந்தியாவிலும் பேரணி




இலங்கை; தம்புள்ளவில் ஜும்மா பள்ளி வாசலை இடித்து தரை மட்டமாக்கிய புத்த பிக்குகளையும் ராஜபக்ஷவின் அரசையும் கண்டிக்கும் விதமாக நேற்று முன்தினம் மாலை இந்திய தவ்ஹீத் ஜமாத்தின் சார்பில் இலங்கைத் தூதர கத்தை முற்றுகையிட பேரணியாகப் புறப்பட்டனர்.

நேற்றுமுன்தினம் மாலை 4 மணியளவில் ராயப் பேட்டை பள்ளிவாயிலில் புறப்பட்ட போராட்டக்காரர்களைப் பொலிஸார் தடுத்து நிறுத்தினர். இதனால் ஏற்பட்ட தள்ளு முள்ளுவில் ஏற்பட்ட பதற்றத்தில் எப்பொழுதும் பரபரப்புடன் காணப்படும் ராதா கிருஷ்ணன் வீதியில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது.

போராட்டக்காரர்கள் ராஜபக்ஷவின் உருவப்பொம்மையை எரித்ததால் அங்கு சிறிது பதற்றம் நிலவியது.

பின்னர் தயாராக இருந்த பொலிஸாரின் வாகனங்களில் கைது படலம் ஆரம்பமாகியது. கைது செய்யப்பட அனைவரையும் தேனாம் பேட்டை அங்கண் வாடி கட்டடத்துக்குக் கொண்டு சென்றனர் .

அங்கண் வாடி கட்டடத்தில் பெண்களுக்கு மாநில பேச்சாளர் மசோதா ஆலிமாவும் ஆண்களுக்கு இதஜவின் தாயி ஆலிம் அல்புகாரி மார்க்க உரை நிகழ்த்தினர். பின்னர் மக்ரிபுக்கு முன்னதாக கைதானவர்கள் விடுவிக்கப்பட்டனர். (வ)

# இலங்கையருக்கு வெளிநாடுகளில் வேலை வாய்ப்புக்கு நடவடிக்கை

இலங்கையர்களுக்கு அதிகளவான வெளிநாட்டு வேலை வாய்ப்புக்களைப் பெற்றுக் கொடுக்கவுள்ளதாக இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் அறிவித்துள்ளது.

கனடா, ஆஸ்திரேலியா, ஜப்பான், அமெரிக்கா, சுவிற்ஸர் லாந்து, ஜேர்மனி ஆகிய நாடுகளில் இந்த வேலை வாய்ப்புக்கள் பெறப்படவுள்ளதாகவும் இதுகுறித்து அந்தந்த நாடுகளுடன் பேச்சு நடத்தப்பட்டு வருவதாகவும் பணியகம் தெரிவித்துள்ளது.

தாதியர், பொறியியலாளர், விடுதி, விமான நிலையம், வர்த்தக நிலையங்கள் ஆகிய வற்றில் பணியாற்றுவதற்குத் தேவையான வெற்றிடங்களை இலங்கையர்களுக்குப் பெற்றுக் கொடுக்கும் வகையில் இந்த பேச்சுக்கள் அமைந்துள்ளன என்று பணி யகத்தின் தலைவர் அமல் சேனாலங்காதீர தெரிவித்துள்ளார்.

இதற்குத் தேவையான பயிற்சிகளை இலங்கையில் வழங்குவதற்கும் பணியகம் ஏற்பாடுகளைச் செய்துள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார். (வ)

**The Royal College Of Jaffna**

கலப்பமானமுறையில் ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்கப் பயில By: ந . விக்னேஸ்வரன் ஆச்சாரி.
வகுப்புக்கள் யாழ்ப்பாணம், சங்கானை, சண்டிலிப்பாய்
Tel : 077 6751649

**வீடு வாடகைக்கு**

கைதடி, நுணாவில் பகுதியில் கைதடிப் பாலத்திற்கு அண்மையில் வீடு வாடகைக்கு உண்டு.
தொடர்பு : 021 2224067

**தேவை**

திருநெல்வேலி ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தானம்
எழுதுவினைஞர் மற்றும் பராமரிப்பாளர் தேவை. நேரில் சமுகம் தரவும். (30.04.2012 மாலை 4.00 - 6.00 மணிவரை)
நிர்வாகம்

**சேவை**

கட்டடத்துக்கு சட்டறிங் உடனே அடித்துக் கொடுக்கப்படும்.
ஒரு ஸ்குயர் (Square) ரூபா 7000 மட்டும்
T.P : 077 8167864

**ரெக்டர் 240 MF விற்பனைக்கு**

மெசிபொக்குசன் 240 ரெக்டருக்கு புதிய பெட்டி விற்பனைக்கு உண்டு.
தொடர்புக்கு: 0770501601

**ஊழியர்கள் தேவை**

உணவகம் இரண்டுக்கு கீழ்க்காணும் வேலையாள்கள் தேவை. தங்குமிட வசதி, மூன்று நேர உணவு, மாதாந்த சம்பளம் வழங்கப் படும்.

1 உணவு பரிமாறுபவர்கள்
2 காசாளர் (ஆண், பெண்)
3 அலுவலக உதவியாளர் (ஆண், பெண்)
4 பாதுகாப்பு உத்தியோகத்தர்
5 சமையலாளர், உதவியாளர், றொட்டி மேக்கர்
6 ரீ மேக்கர்
7 பில் கிளாக்
8 சுத்திகரிப்பாளர்

குறிப்பு: இடம்பெயர்ந்தவர்களுக்கு முன்னுரிமை
தொடர்பு:
077-7917753, 0215681660

வீட்டுக்கு
ஹோட்டலுக்கு




நாடு முழுவதற்கும் போக்குவரத்து
மொத்தத்துக்காக விசேட விலைக்கழிவு
புஃவேசெட்
கண்ணாடிக்குவளை மூடியுடன்
www.titusstores.com
டைட்டஸ் ஸ்ரோஸ்
புறக்கோட்டை 2439422 லிபர்டி பிளாசா

# O⁺ சிறுநீரகம் தேவை

**திருமதி வரதராசா சிவபாக்கியம்** (வயது 58) சிறுநீரக நோயால் அவதிப்படுகிறார். அவருக்கு சிறுநீரக மாற்றுச்சிகிச்சை செய்ய வேண்டியுள்ளதால் O⁺ சிறுநீரகம் தேவைப்படுகிறது. சிறுநீரகத்தானம் செய்ய விரும்பு பவர்கள் கீழ்வரும் முகவரியுடனும் தொலைபேசி இலக்கங்களுடனும் தொடர்பு கொள்ளவும்.

**உரிய சன்மானம் வழங்கப்படும்**

முகவரி : 2 ஆம் ஒழுங்கை,
பத்தினியார் மகிழங்குளம், தாண்டிக்குளம்

தொலைபேசி : 077 3950169, 077 3595644, 024 3249658

# ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
11.10.1985

மறைவு
30.04.2007

அமரர்
**விவேகானந்தா சசிகரன்**

பாசத்தின் உறைவிடமே
பண்பின் ஒளி விளக்கே
அறிவின் இருப்பிடமே
ஆண்டு ஐந்து ஆகியும்
ஆறவில்லை எங்கள் மனம்
சென்ற இடமெல்லாம்
உனது உருவம்தான் ஐயா!
கேட்கும் ஒலி எல்லாம்
உனது குரல்தான் ஐயா!
காலங்கள் எத்தனை கடந்தாலும்
உன் நினைவுகள் மாறாது ஐயா!
தம்பி சசிகரனே உனது ஆத்மா சாந்தி அடைய
முறிப்பு பிள்ளையாரை வேண்டி நிற்கின்றோம்

என்றும் பாசமுள்ள
அப்பா- விவேகானந்தா
அம்மா - டாம்பிகாதேவி
சகோதரர்கள்.

இல. 1127, திருநகர் தெற்கு, திருநகர்,
கிளிநொச்சி.

# முதலாம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம்
25.03.1953

மறைவு
30.04.2011

திருமதி **புவனேஸ்வரி அம்பலவாணர்**

ஆண்டொன்று கடந்தபின்னும் ஆறவில்லையம்மா
எம்துயரம் காலனவன் சக்தியால் கலைந்து போன எம் கனவுகள்
அன்புத்தாயே! உங்கள் பாச நினைவுகள்
கண்ணீர்த் துளிகளாய் விழிகளை நிரப்புகின்றன
இன் முகத்தோடு இன் சொல் பேசி விருந்தோம்பலின் சிகரமாய்
ஊரே போற்ற உயர்ந்த வாழ்வு வாழ்ந்த அம்மா
உங்கள் கனவுகளை ஒவ்வொன்றாய் நனவாக்கி உங்கள்
தடம்பற்றி யாம் நடப்போம் அம்மா!

அனு அகம்,
கரவெட்டி மத்தி,
கரவெட்டி.

ஈரவிழிகளோடு
**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்ணின் விடுதலை!



என். நந்தினி.

பெண் என்றால்
கொத்தடிமை
எனும் நிலை மாற வேண்டும்
பெண்ணை பெண்ணே
புரிந்து கொள்ளும்
நிலை வேண்டும்
மாதவம் செய்து
பெண்ணாக
பிறந்தவள் மனமுடைந்து
நிற்கின்றாள்
மா உலகின் செயல்
நினைத்து தாய் என்றும்
தாரம் என்றும்
கூறிடும் உலகில் தலை
நிமிர்ந்து நிற்க முடியவில்லை

பெண்ணினத்தால் இன்று
ஊருக்கு உபதேசம் உனக்கில்லை
எனும் ஆண் வர்க்கத்தின்
சர்வதிகாரம்
என்று தான் உடையும்
ஹிட்லரும்
முசோலினும் அமீனும்
மறைந்தாலும்
ஜேர்மன் பிரான்ஸ் விடுதலை
அடைந்தும் ஆணாதிக்கத்தில்
இருந்து என்றுமில்லை
பெண்ணே உனக்கு விடுதலை
நீ என்றும் அடிமைதான்
ஆண் அரசன் முன்னால்....

திலகத்துக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புவோர்
"திலகம்",
உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
என்னும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள் .



# ஆண்களால் அடிமையாகிய பெண்கள்

நித்தியா

பெண்கள் விடுதலையின் பேரால் உலகத்தில் அநேக இடங்களில் அநேக சங்கங்களும், முயற்சிகளும் நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டு வருவது யாவரும் அறிந்ததே. இந்த முயற்சிகளில் ஆண்களும் மிகக் கவலையுள்ளவர்கள் போலக் காட்டிக்கொண்டு மிகப்பாசாங்கு செய்து வருகிறார்கள். ஆண்கள் முயற்சியால் செய்யப்படும் எவ்வித விடுதலை இயக்கமும் எவ்வழியிலும் பெண்களுக்கு உண்மையான விடுதலையை அளிக்க முடியாது.

தற்காலம் பெண்கள் விடுதலைக்காகப் பெண் மக்களால் முயற்சிக்கப்படும் இயக்கங்களும் யாதொரு பலனையும் கொடுக்காமல் போவதல்லாமல் மேலும் மேலும் அவை பெண்களின் அடிமைத்தனத்துக்கே கட்டுப்பாடுகளைப் பலப்படுத்திக் கொண்டே போகும் . சமூகச் சீர்திருத்தம், சமத்துவம் என்பதாக வேடம் போட்டுக் கொண்டு பார்ப்பனர்களும் புராணக்காரர்களும் சீர்திருத்தத்தில் பிரவேசித்து வருவதன் பலனாக எப்படிச் சமூகக் கொடுமைகளும் உயர்வு தாழ்வுகளும் சட்டத்தினாலும் மதத்தினாலும் நிலைபெற்றுப் பலப்பட்டு வருகின்றதோ அது போலவே இந்தக் கட்டுப்பாடுகளும்.

அன்றியும் ஆண்கள், பெண்கள் விடுதலைக்குப் பாடுபடுவதால் பெண்களின் அடிமைத்தனம் வளருவதுடன் பெண்கள் என்றும் விடுதலை பெறமுடியாத கட்டுப்பாடுகள் பலப்பட்டுக்கொண்டு வருகின்றன. பெண்களுக்கு மதிப்புக் கொடுப்பதாகவும், பெண்கள் விடுதலைக்காகப் பாடுபடுவதாகவும் ஆண்கள் காட்டிக்கொள்வதெல்லாம் பெண்களை ஏமாற்றுவதற்குச் செய்யும் சூழ்ச்சியே ஒழிய வேறல்ல. எங்கேயாவது பூனைகளால் எலிகளுக்கு விடுதலை உண்டாகுமா ? நரிகளால் கோழிகளுக்கு விடுதலை உண்டாகுமா ? அப்படி ஒருக்கால் ஏதாவது ஒரு சமயம் மேற்படி விடயங்களில் விடுதலை உண்டாகிவிட்டாலும் கூட ஆண்களால் பெண்களுக்கு விடுதலை கிடைக்கவே கிடைக்காது என்பதை மாத்திரம் உறுதியாக நம்பலாம்.

ஏனெனில், ஆண்மை என்னும் பதமே பெண்களை இழிவுபடுத்தும் முறையில் உலக வழக்கில் உபயோகப்படுத்தப்பட்டு வருகின்றது என்பதைப் பெண்கள் மறந்துவிடக் கூடாது. அந்த ஆண்மை உலகில் உள்ள வரையிலும் பெண்மைக்கு மதிப்பு இல்லையென்பதைப் பெண்கள் ஞாபகத்தில் வைத்துக் கொள்ளவேண்டும். உலகத்தில் ஆண்மை நிற்கும் வரையில் பெண்கள் அடிமையும் வளர்ந்தே வரும். பெண்களால் ஆண்மை என்ற தத்துவம் அழிக்கப்பட்டாலல்லாது பெண்மைக்கு விடுதலையில்லை என்பது உறுதி.

# கலாசாரத்தை காப்போம்



வாணி

வள்ளுவர் கற்பு பற்றியும் பிறன்மனை நோக்கா பேராண்மை பற்றியும் சொல்லியிருக்கும் விடயங்களை மனதில் பதியும் விதமாக பல கற்புக்கரசி கதைகளைச் சொல்லியும், இதிகாசங்கள் மூலமும் மக்களின் ஆழ்மனதில் பதியச்செய்கின்றனர் நம் முன்னோர்கள். அவ்வாறு ஆயிரக்கணக்கான வருடங்களாக சொல்லப்பட்டுவரும் இதிகாசமே இராமாயணம்.

பொதுவாக மனிதர்கள் மத்தியில் நடக்கும் குற்றங்கள் பெண்ணுக்காக அல்லது பொருளுக்காக மட்டுமே நடக்கிறது. இதை மீறி குற்றங்களுக்கு வேறு காரணங்களை பொதுவாகப் பார்க்க முடியாது. மனிதப் பெருங்கூட்டத்தின் முக்கிய குற்றங்களை உண்டாக்கும் இவ்விரு உணர்வுகளுக்கும் ஒரு கட்டுப்பாட்டை ஆழ்மனதில் பதிய வைத்தால் சமூகம் அமைதியாக இருக்கும் என்பதன் காரணமாகவே இவற்றை மூலக்கதையாகக் கொண்ட இராமாயணமும் மகாபாரதமும் காலங்காலமாக மக்களுக்கு போதிக்கப்பட்டு வருகிறது.

பிறன் மனைவி நோக்காப் பேராண்மையாளனாக இராமனையும், கற்புக்குச் சிறந்தவளாக சீதையும் கதாநாயகன் கதாநாயகியாக நமக்கு முந்தைய காலத்தில் வாழ்ந்தோர்களாக எடுத்துச் சொல்லி அது போல் வாழவேண்டும் என்று மக்கள் மனதில் ஆழப் பதியச் செய்கின்றனர். தற்காலத்தில் இளம் வயதினரை ஈர்க்கும் மனிதர்கள் சினிமா கதாநாயகனும் கதாநாயகியரும்தான். அவர்களுடைய நடை உடை பாவனைகளால் கவரப்படுபவர்கள் அவர்களைப் போலவே தங்களை பாவித்து வாழ்த்தொடங்குவதை பார்த்திருப்போம். ஒரு படத்தைப் பார்க்கும்போது ஆண்கள் அந்தப் படத்தின் கதாநாயகனாகத் தன்னையே உருவகித்துப் பார்க்கிறான். பெண்கள் கதாநாயகிகளை உள்வாங்குகிறார்கள். காதல் காட்சியில் கதாநாயகனும் கதாநாயகியும் எப்படி நடந்து கொள்வார்களோ அப்படியே வெளியே உள்ள மனிதர்களின் வெளிப்பாடும் அது போன்ற தருணங்களில் காட்சியளிப்பதை பார்க்க முடியும்.

இப்படி தங்களைப் பாதிக்கும் கதாநாயகனும் நாயகியும் ஏக பத்தினி விரதத்தைக் கொண்டவனாக இருந்தால், கதாநாயகி கற்புக்கரசியாக காட்சியளித்தால் இவர்களை உதாரணமாக வைத்து தாமும் வாழவேண்டும் என்று எண்ணுபவர்கள் உண்டாவார்கள். இராமனைப் போல ஆண்களும் சீதையைப் போல் பெண்களும் வாழ்வதே சிறந்த உயர்ந்த வாழ்க்கை என்று அழுத்தமாகச் சொல்லப்பட்டது. கேட்பவர்களும் அத்தகைய உயர்ந்த வாழ்க்கை வாழ்பவர்களாகத் தாமும் இருக்க வேண்டும் என்ற உத்வேகம் கொள்வார்கள். இராமாயணத்தில் சீதையை அடைய பல முயற்சிகள் செய்யும் இராவணனிடம் ஒரு யோசனை சொல்லப்பட்டது. "நீ இராமனாகவே சென்று அவள் முன் நின்றால் அவள் ஏமாந்து உன்னிடம் வந்து விடுவாள்" என்றார்கள். அதற்கு இராவணன் "எவ்வளவோ செய்த எனக்கு இதைச் செய்ய முடியாதா? நானும் இராமனாக உருமாறிப் பார்த்தேன்: ஆனால் நான் எப்போது இராமனாக மாறினேனோ அப்போதே அடுத்தவர் மனைவிமீது ஆசைப்படும் எண்ணம் எனக்குத் தோன்றவே இல்லை. எனக்கு சீதை மீது ஆசையே வரவில்லையே! நான் என்ன செய்ய?" என்று புலம்பினான்.

அதாவது பிறன் மனை நோக்கும் இச்சை கொண்டவனே இராமனாக மாறியவுடன் அந்த ஆசை அற்றுப் போனது என்று சொல்லுமளவுக்கு இராமனின் ஏக பத்தினி விரதம் போற்றிச் சொல்லப்பட்டது. அவ்வாறு வாழ்வதே ஆண்களுக்குச் சிறப்பு என்றும் போதிக்கப்பட்டது. பின்னால் நாகரிகத்தைப் போற்றியவர்கள் இராமாயணம் மூட நம்பிக்கை என்றார்கள். இராமன் பொறியியலாளரா? அவர்தான் பாலம் கட்டினாரா? என்றார்கள். இராமாயணத்துக்கு ஆதாரம் இல்லை என்று அறிவியல் கொண்டு ஆணி அடித்தார்கள். இப்படிச் சிதைத்தவர்கள் இராம நம்பிக்கையைச் சிதைக்கவில்லை. அவர்கள் சிதைக்க முயற்சித்தது இராமனாக வாழ முடியும் என்கிற கலாசார நம்பிக்கையை.

இப்படி நாகரிக கலாசாரத்தின் அடிமரத்தை வெட்டிக்கொண்டு, மேலை நாட்டுக நாகரிகமே சிறந்தது என்றும் பெருமை பேசப்படுகிறது. இவ்வாறு மேலை நாட்டு நாகரீகத்தைப் பரப்பி தமிழ்க் கலாசாரத்தை முட்டாள் தனம் என்று தூற்றும் நிலைமை இன்று அதிகரித்துச் செல்வது வேதனைக்குரியது.

பொது இடங்களில் ஆண்களுக்கும் மனக்கட்டுப்பாடு கட்டாயம் தேவை. அலுவலகத்திலோ அல்லது பிற இடங்களிலோ திருமணமான பெண்ணிடம் பேசுகிறோம் என்று தெரிந்தும் தேவையில்லாமல் வலிய போய் சிரித்துப் பேசி அவர்களின் கவனத்தை ஈர்க்கும் வேலையை செய்வது கண்டிக்கத்தக்கது.

தனக்கு உரிமை இல்லாத அதுவும் மணமான பெண்களின் உடை மற்றும் அழகை வர்ணித்தோ அல்லது இரட்டை அர்த்தம் தொனிக்கும் வகையில் பேசுவதோ நாகரிகமற்ற செயல் என்பதை ஆண்கள் கண்டிப்பாகத் தெரிந்து கொள்ள வேண்டும். அவர்கள் இராமனைப் போல வாழ்வதின் சிறப்பை மனதில் ஆழப் பதிந்து கொள்ள வேண்டும். மணமான பெண்களுடன் தேவையற்றுப் பழகும் ஆண்கள் தன் மனைவியிடம் வேறொருவர் அவ்வாறு நடந்தால் நம்மால் பொறுத்துக் கொள்ள முடியுமா என்பதை ஒரு கணம் சிந்தித்து வேறொரு ஆணின் வாழ்க்கையில் குறுக்கிடக்கூடாது என்பதை கண்டிப்பாக மனதில் வைத்து விலகியிருக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி



### கந்தமுத்து ஸ்ரீஸ்கந்தராஜா

**உறவுகளைத் தவிக்கவிட்டு
உணர்ச்சிகளைச் சிதறவிட்டு உயிர் நீத்த தந்தை
உரிய இடத்திலே மோட்சத்தில் நிலைகொள்ளப்
பிரார்த்திக்கின்றோம் கண்ணீர்த்துளிகளோடு.....**

32 ஆம் அணி மருத்துவ பீட மாணவியான மடோனா கஷந்தியின் அன்புத் தந்தை கந்தமுத்து ஸ்ரீஸ்கந்தராஜாவின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம். அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

32 ஆம் அணி மருத்துவ பீட மாணவர்கள்,
யாழ். பல்கலைக்கழகம்.

## கண்ணீர் அஞ்சலி



எமது சக ஊழியர் **விஜயசாந்தி** யின் பாசமிகு கணவர்

### கந்தசாமி ரமணன்

அவர்களின் திடீர் மரணச்செய்தி கேட்டு ஆழ்ந்த கவலையடைவதுடன் ஆறாத் துயரில் இருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

சுகாதார வைத்திய அதிகாரியும்
உத்தியோகத்தர்களும், ஊழியர்களும், நலன்புரிச்சங்கம்
சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, தெல்லிப்பழை

## விபத்தில் ஒருவர் காயம்

கன்னாதிட்டிச் சந்தியில் நேற்றுப் பிற்பகல் ஒரு மணியளவில் வேகமாகச் சென்ற மோட்டார் சைக்கிள் எதிரே வந்த வயோதிபரை மோதித் தள்ளியதில் அவர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதான வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். நாவலர் வீதியைச் சேர்ந்த நித்தியன் (வயது-57) என்பவரே காயமடைந்தவராவார்.

**வான் விற்பனைக்கு**

NP PC xxxx தொடரிலக்கமுடைய 1700km ஓடிய புதிய டிலிவறி வான் விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு- 0712267733

**ஆங்கில வகுப்புகள்**

பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், தொழில் புரிபவர்கள் மற்றும் மொழியை கற்க ஆர்வமுள்ள அனைவருக்குமான புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன. இலகுவாக பேச, வாசிக்க (Letter Format & Translation) என்பன வெளிநாட்டில் கற்பித்த அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களினால் கற்பித்துக் கொடுக்கப்படும்.
(பாடசாலை மாணவர்களுக்கான விசேட வகுப்புகளும் ஆரம்பமாகவுள்ளன பதிவுகளுக்கு முந்துங்கள்)
(மாதாந்தக் கட்டணம் 400/- மட்டுமே)

NORTH LEAD

328, Stanly Road, Jaffna. (ஆரியகுளம் சந்திக்கு அருகில்)
Tel: 222 4459, 0772533390, Fax: 222 4460

**விற்பனைக்கு**

யாழ்ப்பாணம், கச்சேரி கிழக்கு ஒழுங்கையில் இல.12 இல் ஒரு பரப்பு 13 குளியுமுள்ள காணியில் சகல வசதிகளும் கொண்ட வீடு விற்பனைக்குண்டு.

தொடர்பு:
வாரநாள்களில் மாலை 5.00 மணிக்குப் பின்னரும் வார இறுதி நாள்களில் காலை 6.00 தொடக்கம் 9.00 மணி வரை தொடர்பு கொள்ளலாம். தொ.பே.: 0771606900

**VACANCY**

சிங்களம், கணனி வகுப்புகள் கற்பிக்கக் கூடிய ஆசிரியர்கள் தேவை. முன் அனுபவம் உள்ளவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும்.

NORTH LEAD EDUCATIONAL CENTER
328, Stanly Road, Jaffna.
Tel: 222 4459, 0772 533390 Fax: 222 4460
E-mail: northlead@gmail.com

உதயன் விளம்பரத் தொடர்புக்கு
advt@uthayan.com
0215671111

## கண்ணீர் அஞ்சலி



எமது சங்கத்தின் கௌரவ பொருளாளர்
இ. கனகராஜா அவர்களின் சகோதரர்
அமரர் **இ. ஜெயராஜா**

காலமானதையிட்டு கண்ணீர் மல்கி நிற்கின்றோம். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்துக்கு அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக் கின்றோம்.

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், யாழ்கிளை-வலி.மேற்கு பிரிவு.
கௌரவ தலைவரும், ஆளுநர்சபை உறுப்பினர்களும்

## மரண அறிவித்தல்

### பொன்னம்பலம் கருணாகரன்



நீர்வேலி வடக்கைப் பிறப்பிடமாகவும், பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட பொன் னம்பலம் கருணாகரன் 28.04. 2012 சனிக்கிழமை பிரான்ஸில் அகால மரணமானார்.

அன்னார் பொன்னம்பலம்- பாக்கியம் தம்பதியரின் அன்புப் புதல்வனும், காலஞ்சென்ற உருத்திரநாதன் மற்றும் லோகேஸ்வரி தம்பதியரின் மருமகனும், ரதிகலாவின் அன்புக் கணவரும், ரம்சிகனின் பாசமிகு தந்தையும், சிவாஸ்வரி (ஆசிரியை, யா/சீ.சீ.த.கலவன் பாடசாலை, நீர்வேலி), தவாஸ் வரி (ஆசிரியை, யா/கொழும்புத்துறை, இ.மகா வித்தி யாலயம்), சிவாஸ்வரன் (சிவா ஸ்ரோர்ஸ்), கேதீஸ்வரன் (லண்டன்), பாலரோகினி (வவுனியா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், ஸ்ரீமுருகதாஸ்காந்தன் (ஆசிரிய ஆலோசகர்-உடற்கல்வி, யாழ். வலயம்), தயாபரன் (ஆசிரிய ஆலோசகர்-விஞ்ஞானம், யாழ். வலயம்), நிதர்ஷனி (ஆசிரியை, யா/அராலி வள்ளியம்மை ஞாபகார்த்த வித்தியாசாலை), சுஜாந்தினி (லண்டன்), திவாகரன் (வவுனியா) ஆகியோரின் மைத்துனரும், கபிர்த்தனா, யதுர்ஷனன், மிதுஷா, லதுஷா, யாமிலன் ஆகியோரின் அன்பு மாமனும், அபிராமின் சிறிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பிரான்ஸில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

34, நீர்வேலி தெற்கு,
நீர்வேலி.

(17621) (6,9,10)

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



### வேலுப்பிள்ளை துரைராசன்

(இளைப்பாறிய இலங்கை மின்சாரசபை ஊழியர்)

அல்லாரை வடக்கு, கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும், சங்கம் வீதி, சங்கத்தானை, சாவகச்சேரியை வதிவிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை துரைராசன் கடந்த (27.04.2012) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - நாகம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான செல்லையா - தங்கம்மா தம்பதியரின் மருமகனும், சரஸ்வதியின் அன்புக் கணவரும், பிறிமிலா (பிரான்ஸ்), சங்கீதா (லண்டன்), சீமா (நோர்வே), சோபா, ஆர்த்தி (1st in Commerce, Jaffna College), சிந்துஜா (3ஆம் வருடம், நுண்கலைப்பீடம், யாழ். பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், பாலமூர்த்தி (பிரான்ஸ்), காலஞ்சென்ற சசிக்குமார் (லண்டன்) மற்றும் மணிவண்ணன் (நோர்வே) ஆகியோரின் மாமனும், காலஞ்சென்றவர்களான சுவாமிநாதன், லீலாவதி, இராமநாதன், யோகநாதன் மற்றும் திலகவதி, கமலாவதி, மனோகரன் (கொடிகாமம், திருநாவுக்கரசு ம.வி.), சரஸ்வதி (பேபி) (தேர்தல் திணைக்களம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், பரமேஸ்வரி, சிதம்பரநாதன் (பிரான்ஸ்), காலஞ்சென்ற நடராசன் (ஓய்வுபெற்ற ஆசிரியர்) மற்றும் குலசேகரம் (ஓய்வுபெற்ற ஆசிரியர்), சரஸ்வதி, சிதம்பரநாதன் (மாவட்ட நீதிமன்றம், சாவகச்சேரி), வைத்திலிங்கம், காலஞ்சென்றவர்களான சடாச்சரம் (Army), கிருஷ்ணபிள்ளை (கோமாளி) ஆகியோரின் மைத்துனரும், யோகேந்திரா - லோகமதி (பிரான்ஸ்), கெங்காதரன் - தீபா (ஆஸ்திரேலியா) ஆகியோரின் சிறிய தந்தையும், அச்சுதன், பிரவீன், தஜித்தா, சௌமிகா, சாருகா, சஸ்மிகா, சஞ்சய்ராஜ், மதுமிகா, அர்ச்சுணன் (4ஆம் வருடம் முகாமைத்துவம், யாழ். பல்கலைக்கழகம்) ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (01.05.2012) செவ்வாய்க்கிழமை மு.ப. 8.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப. 10.00 மணியளவில் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சங்கத்தானை, சாவகச்சேரி.

தகவல்:
அர்ச்சுணன் (பேரன்)

## நினைவஞ்சலி

| 4ஆம் ஆண்டு | | இரண்டாம் ஆண்டு | |
|---|---|---|---|
| தோற்றம் | மறைவு | தோற்றம் | மறைவு |
| 15 * 10 * 1931 | 03 * 01 * 2008 | 01 * 12 * 1933 | 22 * 04 * 2010 |





**சின்னத்துரை கந்தசாமி**
(ஓய்வுபெற்ற எழுதுவினைஞர்
கல்வித்திணைக்களம்- யாழ்ப்பாணம்)

**இலட்சுமிப்பிள்ளை கந்தசாமி**
(ஓய்வுபெற்ற உபஅதிபர்,
கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்)

எந்தையும் தாயும் அன்பாக எமை அணைத்து
எவ்விடர் வந்த போதும் எமையாளாக்கி
கடமையே கருத்தெனவே கண்ணியமாய்
வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து நின்ற
அன்புத் தெய்வங்களை நினைவு கூருகின்றோம்.

சிவன் வீதி, ஆவரங்கால்,
புத்தூர்.

(6,10)

அன்புடன்,
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

## மரண அறிவித்தல்

### கந்தசாமி குருக்கள் கதிர்காமலிங்க குருக்கள்

(உடுப்பிட்டி மருதன்குளம் ஞானவைரவர் தேவஸ்தான பிரதம குரு)



கெருடாவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி குருக்கள் கதிர்காமலிங்க குருக்கள் நேற்று (29.04.2012) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தசாமி குருக்கள்-அன்னலட்சுமி அம்மா தம்பதியரின் மூத்த மகனும், காலஞ்சென்றவர்களான ராசலிங்க ஐயர்-யோகம்மா தம்பதியரின் மருமகனும், இராஜேஸ்வரி அம்மாவின் அன்புக் கணவரும், ஜெயக்குமார் குருக்களின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற தவமணி மற்றும் பஞ்சலிங்க குருக்கள், இராஜலட்சுமி ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்றவர்களான சித்திவிநாயகர் ஐயர், பராசக்தி அம்மா மற்றும் பொன்னம்பல ஐயர் ஆகியோரின் மைத்துனரும், கலைமதியின் மாமனும், தனுஷ்காந், மகாலட்சுமி, அபிசாளினி ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.04.2012) திங்கட்கிழமை பி.ப. 1.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தனக்கிரியைக்காக காட்டுப்புலம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

[illegible], கெருடாவில்,
தொண்டைமானாறு.

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்களுக்கான மேசைப்பந்தாட்டம் வெற்றிக்கிண்ணம் யூனியன் வசம்

வலி.வடக்கு, ஏப். 30

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மேசைப்பந்தாட்ட வீரங்கனைகள், தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின் இளம் வீராங்கனைகளின் வேகத்துக்கு ஈடு கொடுக்க முடியாமல் வீழ்ந்ததால் பெண்களுக்கான மேசைப்பந்தாட்ட வெற்றிக்கிண்ணம் யூனியன் வசமானது. முதல் மூன்று ஒற்றையர் சுற்றுக்களையும் வென்றதன் மூலம் பல்கலைக்கழகத்தின் சீலாப் சொலுசன் பிரைவேட் நிறுவனத்தின் வெற்றிக் கிண்ணத்தைப் யூனியன் அணி சுவீகரித்துக் கொண்டது.




யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மேசைப்பந்தாட்ட அணியும் விளையாட்டு அவையும் இணைந்து நடத்திய பெண்களுக்கான மேசைப் பந்தாட்ட இறுதிப் போட்டி கடந்த வெள்ளிக்கிழமை பிற்பகல் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக உள்ளக விளையாட்டரங்கில் இடம் பெற்றது.

இறுதிப் போட்டியில் யாழ்ப்பாணம் பல்கலைக் கழக அணியும் தெல்லிப் பழை யூனியன் கல்லூரி அணியும் மோதிக் கொண்டன.

இந்தப் போட்டியில் மூன்று ஒற்றையர்கள் சுற்றுக்கள் இடம் பெற்றன. முதல் ஒற்றையர் சுற்றில் யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த வி.கல்யாணியும், தெல்லிப்பழை யூனியன் கல்லூரியைச் சேர்ந்த ஐ.டென்சிகாவும் மோதிக் கொண்டார்கள்.

இதில் முதல் மூன்று நேர் சுற்றுக்களையும் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியைச் சேர்ந்த ஐ.டென்சிகா 11:8, 11:3, 11:09 புள்ளிகள் என்ற அடிப்படையில் வெற்றி கொண்டார்.

இரண்டாவது ஒற்றையர் சுற்றில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியைச் சேர்ந்த எஸ்.சிந்துஜாவும் யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த எஸ்.துஷ்யந்தியும் மோதிக்கொண்டார்கள்.

இந்தச் சுற்றிலும் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியைச் சேர்ந்த எஸ்.சிந்துஜா 11:3, 11:1, 11:6 புள்ளிகள் அடிப்படையில் முதல் மூன்று நேர் சுற்றுக்களையும் இலகுவாகத் தன்வசமாக்கினார்.

மூன்றாவது ஒற்றையர் சுற்றில் யாழ்ப்பாணம் பல்கழகத்தைச் சேர்ந்த ரி.தரனிகாவும் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியைச் சேர்ந்த ரி.கீர்த்தனாவும் மோதிக் கொண்டார்கள்.

இந்தப் போட்டியில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியைச் சேர்ந்த ரி.கீர்த்தனா முறையே 11:9, 11:8, 2:11, 7:11, 13:11 புள்ளிகள் என்ற அடிப்படையில் பெரும் போராட்டத்தின் மத்தியில் வெற்றி பெற வெற்றிக் கிண்ணம் யூனியன் அணி வசமானது. (ஙு-86)

## இன்றைய ஆட்டம்

வலி. வடக்கு, ஏப். 30

யாழ்ப்பாணம் பல்கலைக் கழக விளையாட்டு அவையும் ஹொக்கி அணியும் இணைந்து நடத்தும் யாழ். மாவட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே நடத்தப்பட்ட ஹொக்கி சுற்றுப் போட்டியின் மூன்றாம் இடத்துக்கான போட்டி இன்று திங்கட்கிழமை பிற்பகல் 4 மணிக்கு யாழ்ப்பாணம் பல்கலைக்கழக விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்தப் போட்டியில் வட்டுக்கோட்டை ஓல்ட் கோல்ட் விளையாட்டுக் கழகமும் யாழ்ப்பாணம் ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன. (ஙு-86)

## வலிகாம வலய மெய்வன்மை சாதித்தது ஹென்றியரசர்

பண்டத்தரிப்பு, ஏப். 30

வலிகாமம் கல்வி வலய பாடசாலைகளுக்கு இடையில் நடைபெற்ற மெய்வன்மை போட்டிகளில் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி சிறந்த பெறு பேறுகளைப் பெற்றுள்ளது.

வலய மட்டப் போட்டிகளில் புனித ஹென்றியரசர் கல்லூரி 12 முதலிடங்களையும், 10 இரண்டாம் இடங்களையும், 7 மூன்றாம் இடங்களையும் பெற்றுக் கொண்டது.

இது தவிர 15 மற்றும் 19 வயதுக்குட்பட்டோர் பிரிவுகளில் இரு அஞ்சலோட்டங்களிலும் முதலிடத்தையும், 17 வயதுக்குட்பட்டோர் பிரிவில் 4×400 அஞ்சலோட்ட நிகழ்வில் இரண்டாம் இடத்தையும், 21 வயதுக்குட்பட்டோர் பிரிவுக்கான 4×100 அஞ்சலோட்ட நிகழ்வில் இரண்டாம் இடத்தையும், 4×400 அஞ்சலோட்ட நிகழ்வில் முதலிடத்தையும் பெற்றுச் சண்டிலிப்பாய் கோட்டம் மற்றும் வலிகாம வலய மட்டப் மெய்வன்மைப் போட்டிகளில் அஞ்சலோட்டச்சம்பியனாகப் புனிதஹென்றியரசர் கல்லூரி தெரிவானது.

புனிதஹென்றியரசர் கல்லூரி வீரர்களான அ.மதுஸ்ரன், ப.கனிஸ்ரன் ஆகியோர் 15 வயதுப் பிரிவில் சம்பியன்களாகத் தெரிவு செய்யப்பட்டமையும் குறிப்பிடத்தக்கதாகும். (ஙு-130)

## கபடியில் வீழ்ந்தது கருகம்பனை

வலி. வடக்கு, ஏப். 30

தெல்லிப்பழை கருகம்பனை இந்து இளைஞர் விளையாட்டுக் கழக வீரர்கள் எடுத்த முயற்சிகளை முறியடித்து இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி வீரர்கள் தமது நுட்பமான விளையாட்டின் மூலம் இரண்டு புள்ளிகள் வித்தியாசத்தில் கபடிப் போட்டியில் வெற்றி பெற்றார்கள்.

சித்திரைப் புத்தாண்டையொட்டித் தெல்லிப்பழை பிரதேச செயலகமும் தெல்லிப்பழை பொலிஸாரும் இணைந்து நடத்திய புத்தாண்டு விழாக் கொண்டாட்டத்தையொட்டி இடம் பெற்ற கபடிப் போட்டி மல்லாகம் மகா வித்தியாலயத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு இடம் பெற்றது.

இந்தப் போட்டியில் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூர் அணியும், கருகம்பனை இந்து இளைஞர் விளையாட்டுக் கழகமும் மோதிக் கொண்டன. போட்டி கடைசி வரை விறுவிறுப்பாக நடைபெற்றது.

பாடசாலை மாணவர்களாக இருந்த போதிலும் புனித ஹென்றியரசர் கல்லூரி வீரர்கள் அபராமாக விளையாடி வெற்றியைப் பெற்றுக் கொண்டனர்.

முதல்பாதி ஆட்டத்தில் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி 23:21 புள்ளிகள் என்ற அடிப்படையில் முன்னிலை பெற்றது.

இரண்டாம் பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் வெற்றியை மட்டுமே இலக்காகக் கொண்டு களமிறங்கின. இதனால் ஆட்டத்தில் அனல் பறந்தது. வாழ்வா, சாவா என்ற நிலையில் அமைந்த இரண்டாவது பாதி ஆட்டம் ரசிகர்களுக்கு பெரும் விருந்தாக அமைந்தது.

இரண்டாம் பாதி ஆட்டத்தின் ஆரம்பத்தில் கருகம்பனை இந்து இளைஞர் விளையாட்டுக்கழகம் முன்னணி பெற்ற போதும், சுதாகரித்துக் கொண்டு மீண்டும் வீறு கொண்டு எழுந்த புனித ஹென்றியரசர் கல்லூரியும் சம புள்ளிகளைப் பெற்றது. இரு அணிகளும் தலா 26 புள்ளிகளை இரண்டாம் பாதி ஆட்டத்தில் பெற்றன.

ஆட்ட நிறைவில் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி 49:47 என்ற புள்ளிகள் என்ற அடிப்படையில் கருகம்பனை இந்து இளைஞர் விளையாட்டுக் கழகத்தை வீழ்த்தி வெற்றி பெற்றது. (ஙு-86)

# மாவட்ட உதைபந்தாட்டம்; பரபரப்பான காலிறுதிகள்

பண்டத்தரிப்பு, ஏப். 30

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனம் நடத்தி வரும் பாடசாலைகளுக்கு இடையிலான 17 வயதுப் பிரிவினருக்கான உதைபந்தாட்டப் போட்டிகளில் யாழ் மாவட்ட மட்டத்திலான போட்டிகள் நேற்றும், நேற்று முன்தினமும் மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றன.

இப் போட்டிகளுக்கு குடாநாட்டின் பல பாகங்களையும் சோந்த பாடசாலைகள் பங்கு பற்றியிருந்தன. முதலில் நடைபெற்ற லீக் போட்டிகளின் அடிப்படையில் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி, சென்.பற்றிக்ஸ் கல்லூரி, தேவரையாளி இந்துக் கல்லூரி, நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம், நாவாந்துறை றோ.க.வித்தியாலயம், யாழ். மத்திய கல்லூரி, பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, சென்.ஜோன்ஸ் கல்லூரி ஆகிய 8 பாடசாலை அணிகளும் காலிறுதிக்கு தகுதி பெற்றிருந்தன.

**லீக் போட்டிகளின் அடிப்படையில் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி, சென்.பற்றிக்ஸ் கல்லூரி, தேவரையாளி இந்துக் கல்லூரி, நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம், நாவாந்துறை றோ.க.வித்தியாலயம், யாழ். மத்திய கல்லூரி, பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, சென்.ஜோன்ஸ் கல்லூரி ஆகிய 8 பாடசாலை அணிகளும் காலிறுதிக்கு தகுதி பெற்றிருந்தன.**



முதலில் நடைபெற்ற காலிறுதி ஆட்டத்தில் நாவாந்துறை றோ.க.வித்தியாலயமும், நெல்லியடி மத்திய மகா வித்தியாலயமும் மோதிக் கொண்டன. ஆட்டத்தின் தொடக்கம் முதல் ஆட்ட நேரம் முடியும்வரை இரு அணி வீரர்களும் கோல்களைப் பெற கடும் பிரயத்தனம் மேற்கொண்ட போதும் முயற்சிகள் எவையும் கை கூடவில்லை. இதனால் சமநிலை தவிர்ப்பு உதை மூலம் போட்டியின் முடிவு தீர்மானிக்கப்பட்டது.

இதில் நாவாந்துறை றோ.க.வித்தியாலயம் 3 கோல்களைப் பெற்று 3:0 என்ற கணக்கில் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தை வென்று அரையிறுதிக்கு தகுதி பெற்றது.

அடுத்து நடைபெற்ற இரண்டாவது காலிறுதி ஆட்டத்தில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியும், இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியும் மோதிக் கொண்டன. போட்டியின் ஆரம்பத்தில் இரு அணிகளும் சம பலத்துடன் விளையாடிய போதும் சிறிது நேரத்துக்குள்ளேயே புனித ஹென்றியரசர் அணி போட்டியை தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தது. புனித ஹென்றியரசர் வீரர் தனேஸ் மூன்று கோல்களையும், [illegible] ஒரு கோலையும் பெற்றுக் கொடுக்க 4:0 என்ற கணக்கில் பருத்தித்துறை ஹாட்லியை வீழ்த்தி புனித ஹென்றியரசர் கல்லூரி அணி அரையிறுதிக்கு தகுதி பெற்றது.


மூன்றாவது அரையிறுதி ஆட்டத்தில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணியும், யாழ். மத்திய கல்லூரி அணியும் மோதிக்கொண்டன.

இரு அணிகளும் சம பலத்துடன் ஆட இறுதி வரை முடிவு பெறப்படாததால் சமநிலை தவிர்ப்பு உதை மூலம் போட்டியின் முடிவு தீர்மானிக்கப்பட்டது. இதில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி வெற்றி பெற்று அரையிறுதி ஆட்டத்துக்கு தகுதி பெற்றது. (ஙு-130)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கெய்ல் நேற்றும் சிக்ஸர் மழை
# கரையவில்லை கொல்கத்தா





இந்தியன் பிறீமியர் லீக் தொடரின் 38ஆவது போட்டி யில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி இலகுவான வெற்றியைப் பெற்றுள்ளது.

ரோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணிக்கெதிராக இடம்பெற்ற இந்தப்போட்டியில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி 47 ஓட்டங்களால் வெற்றியீட்டியது.

கொல்கத்தா ஈடன் கார்டன்ஸ் மைதானத்தில் இடம்பெற்ற இந்தப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய கொல் கத்தா நைட் ரைடர்ஸ் அணி 20 பந்துப்பரி மாற்றங் களில் 4 இலக்குக்களை இழந்து 190 ஓட்டங்களைக் குவித்தது.

அந்த அணி சார்பாக ஆரம்ப இலக்குக்காக 10.3 பந்துப்பரி மாற்றங்களில் 95 ஓட்டங்கள் குவிக்கப்பட்டதோடு, இரண்டாவது இலக்குக்காக80 ஓட்டங்கள் 8.1 பந்துப் பரி மாற்றங்களில் குவிக்கப்பட்டன.

துடுப்பாட்டத்தில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி சார்பாக அணித்தலைவர் கௌதம் கம்பீர் 51 பந்துகளில் 93 ஓட்டங்களையும், பிரன்டன் மக்கலம் 37 பந்துகளில் 43 ஓட்டங்களையும், ஜக்ஸ் கலிஸ் 27 பந்துகளில் 41 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் ரோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணி சார்பாக வினய் குமார் 4 பந்துப்பரிமாற்றங்களில்31 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும், டானியல் வெற்றோரி, சகீர்கான் ஆகியோர் தலா ஒரு இலக்கினையும் கைப்பற்றினர்.

191 என்ற மிகப்பெரிய வெற்றி இலக்கை நோக்கித் துடுப்பெடுத்தாடிய ரோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணி சிறப்பான ஆரம்பத்தைப் பெற முடியாது தடுமாறியது.

அவ்வணியின் முதல் 3 இலக்குகளும் 6ஆவது பந்துப்பரி மாற்றத்துக்குள் வீழ்த்தப்பட வெற்றிக்கான வாய்ப்புக்கள் மட்டுப்படுத்தப்பட்டன.

ஒரு புறத்தில் கிறிஸ் கெயில் ஆட்டமிழக்காது நிலைத்து நின்ற போதிலும், மறுபுறத்தில் எந்த வொரு வீரரும் சிறப்பாக ஆடாத காரணத்தால் அந்த அணி 20 பந்துப் பரி மாற்றங்களில் 6 இலக்கு களை இழந்து 143 ஓட் டங்களைப் பெற்று 47 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

துடுப்பாட்டத்தில் ரோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணி சார்பாக சிறப்பாக ஆடிய கிறிஸ் கெயில் 58 பந்துகளில் 86 ஓட்டங்களைப் பெற்றார். இதன் மூலம் அவர் இத் தொடரில் அதிக ஓட்டங் களைப் பெற்றவர்கள் வரிசையில் ராஜஸ்தான் ரோயல்ஸின் அஜின்கியா ரஹானேயைப் பின் தள்ளி முதலிடத்தைப் பெற்றுக் கொண்டார்.

ரோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணி சார்பாக வேறெந்த வீரரும் 20 இற்கு மேற்பட்ட ஓட்டங்களைப் பெற்றுக் கொள்ளவில்லை.

பந்துவீச்சில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி சார்பாக ஜக்ஸ் கலிஸ் 2 இலக்குகளையும், சுனில் நரைன் ,யூசுப் பதான், ராஜத் பாத்தியா, லக்ஷ்மி ரத்தன் சுக்லா ஆகியோர் தலா ஒரு இலக்கினையும் கைப்பற்றினர்.



போட்டியின் நாயகனாக கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியின் தலைவர் கௌதம் காம்பீர் தெரிவானார்

# வீழ்ந்தது ரியல் மாட்ரிட்



சம்பியன்ஸ் லீக் உதைபந்தாட்ட அரையிறுதி ஆட்டத்தில் 3-2 என்ற கோல் கணக்கில் 'ரை- பிரேக்கரில்' நட்சத்திர வீரர் கிறிஸ்டியானோ ரொனால்டோ இடம் பெற்றுள்ள ரியல் மாட்ரிட் அணியை வீழ்த்தி பேயர்ன் மியூனிச் அணி இறுதிச்சுற்றுக்கு தகுதி பெற்றது.

சம்பியன்ஸ்லீக் போட்டியில் பேயர்ன் மியூனிச், ரியல் மாட்ரிட் அணிகள் மோதிய அரையிறுதி 2வது லெக் ஆட்டம் சாண்டியகோ பெர்னாபூ மைதானத்தில் நடைபெற்றது.

மியூனிச்சில் முன்னர் நடைபெற்ற ஆட்டத்தில் பேயர்ன் மியூனிச் 2-1 என்ற கோல் கணக்கில் ரியல் மாட்ரிட்டை தோற்கடித்திருந்தது.

இந்த ஆட்டத்தில் உள்ளூர் ரசிகர்களின் ஆதரவுடன் களமிறங்கிய ரியல் மாட்ரிட் அணி போட்டி தொடங்கிய 6ஆவது நிமிடத்தில் பெனால்டி கோல் அடித்தது. இந்த பெனால்டி வாய்ப்பை கிறிஸ்டியானோ ரொனால்டோ கோலாக மாற்றினார்.

தொடர்ந்து 14ஆவது நிமிடத்தில் ரியல் மாட்ரிட்டுக்கான இரண்டாவது கோலையும் கிறிஸ்டியானோ ரொனால்டோ அடிக்க பேயர்ன் மியூனிச் அதிர்ச்சியுற்றது.

கடுமையாக முயற்சித்து 27வது நிமிடத்தில் ரியல் மாட்ரிட்டின் பெனால்டி எல்லைக்குள் அர்ஜான் ரொபின், கிராஸ் செய்த பந்தை கைப்பற்ற முயற்சித்த மரியோ ஹோம்சை தடுப்பு ஆட்டக் காரர் பெப் கையால் தள்ளி கீழே விழச் செய்தார்.

இதன்விளைவாக பேயர்ன் மியூனிச்சுக்கு ஒரு பெனால்டி வாய்ப்பு கிடைத்தது. இதனை பயன்படுத்தி அர்ஜான் ரொபின் கோல் அடித்தார். பிற்பாதியில் இரு அணிகளும் கோல் அடிக்கவில்லை.

இரு அணிகளும் 3-3 என்ற சராசரி கோல் அடித்திருந்ததால் வெற்றி தோல்வியைத் தீர்மானிக்க கூடுதல் நேரம் வழங்கப்பட்டது. இதிலும் இரு அணிகளும் கோல் அடிக்கவில்லை. தொடர்ந்து ஆட்டம் 'ரை- பிரேக் கருக்கு' சென்றது.

'ரை-பிரேக்கரில்' பேயர்ன் மியூனிச் வீரர்கள் அலபா, ஹோம்ஸ், சுவாஸ்னெட்ஜியர் ஆகியோர் கோல் அடித்தனர். பிலிப் லாம், டேனிக்ருஸ் ஆகியோர் பெனால்டி வாய்ப்பைத் தவற விட்டனர்.



அதே நேரத்தில் ரியல்மாட்ரிட் வீரர்கள் ரொனால்டோ, காகா, செர்ஜியோ ரமோஸ் ஆகியோர் கோல் வாய்ப்புகளைத் தவற விட, இறுதியில் பேயர்ன் மியூனிச் 3-2 என்ற கோல் கணக்கில் ரியல் மாட்ரிட்டை வீழ்த்தி சம்பியன்ஸ் லீக் இறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

# அது அவர்களின் இயல்பு

## ஆஸ்திரேலியர்களைச் சாடுகிறார் முரளி



சென்னை கிண்டியில் உள்ள சி-கியூப் ஸ்போர்ட்ஸ் கிரிக்கெட் பயிற்சி மையத்தில் 'பிட்ச் விஷன்' என்ற புதிய தொழில்நுட்பத்தை இலங்கை வீரர் முத்தையா முரளிதரன் தொடங்கி வைத்தார்.

தொடக்க விழாவில் கலந்துகொண்டு முரளிதரன் கூறுகையில், ''நான் கிரிக்கெட் விளையாட வந்தபோது இதுபோன்ற வசதிகள் இல்லை. 'பிட்ச் விஷன்' போன்ற தொழில் நுட்பங்களால் பந்து வீச்சாளர்கள் தங்களின் தவறுகளைச் சரிசெய்துகொள்ள முடியும்.

உண்மையிலேயே கிரிக்கெட்டை விரும்புபவர்களுக்கு இந்தப் புதிய தொழில்நுட்பம் நல்ல வாய்ப்பாக இருக்கும்.

கிரிக்கெட் விளையாடுவதற்கு வயது ஒரு பிரச்சினை இல்லை. உடற்தகுதியை நன்றாக வைத்துக் கொள்வதோடு, கிரிக்கெட் மீதான ஆர்வம் குறையாமல் பார்த்துக் கொள்ளும்வரை சிறப்பாக விளையாட முடியும். மற்றவர்கள் நம்மைப் பற்றி என்ன கூறினாலும், இளம் கிரிக்கெட் வீரர்கள் அதைப்பற்றி கவலைப்படாமல் உங்களுடைய வேலையில் மட்டும் கவனம் செலுத்த வேண்டும். நம் மீது விமர்சனங்கள் வரும்போது பொறுமையாகவும், அமைதியாகவும் இருப்பது முக்கியமானது. மற்றவர்களை விமர்சித்து அதன் மூலம் அவர்களை மனதளவில் பலவீனமாக்குவது ஆஸ்திரேலியர்களின் இயல்பு. அதற்காக அவர்கள் மோசமானவர்கள் என்று சொல்லவில்லை.

கிரிக்கெட்டைப் பொறுத்தவரையில் தொழில்நுட்பங்களைவிட அர்ப்பணிப்பு, நம்பிக்கை, ஆர்வம் ஆகியவைதான் மிக முக்கியமானது''- என்றார்.

நீங்கள் மேலும் சில ஆண்டுகள் இலங்கை அணிக்காக விளையாடியிருக்கலாம் என்று பலரும் கூறுகிறார்களே என்று அவரிடம் கேட்டதற்கு,

''நான் ஓய்வுபெறும்போது 19 ஆண்டுகள் கிரிக்கெட் விளையாடிவிட்டேன். ஒருவர் 25 முதல் 30 ஆண்டுகள் விளையாட முடியாது. எனவே இளைஞர்களுக்கு வழிவிடும் வகையிலேயே ஓய்வுமுடிவை எடுத்தேன். சரியான தருணத்தில் ஓய்வுபெற்றதாகவே நினைக்கிறேன்''- என்று கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்களுக்குள் பிளவு இல்லை



பாகிஸ்தானின் புதிய பயிற்றுவிப்பாளர் டேவ் வட்மோருடன் முரண்பாடுகள் எவையும் கிடையாது என பாகிஸ்தான் அணியின் பிரதம தேர்வாளர் இக்பால் ஹாசிம் தெரிவித்துள்ளார்.

**பாகிஸ்தான் கிரிக்கெட் அணியினால் நிராகரிக்கப்பட்ட வீரர்களை அழைத்து அவர்களோடு இணைந்து செயற்பட்டமையால் டேவ் வட்மோருக்கும், இக்பால் ஹாசிமிற்குமிடையில் முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளன**

டேவ் வட்மோருக்கும், இக்பால் ஹாசிமிற்குமிடையில் முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளன என்று வெளியான ஊடக அறிக்கைகளை மறுத்தே அவர் இதைத் தெரிவித்துள்ளார்.

புதிய பயிற்றுவிப்பாளரான டேவ் வட்மோர், பாகிஸ்தான் அணி சார்பாக முன்னர் போட்டிகளில் பங்குபற்றி பின்னர் அணியில் சேர்க்கப்படாதிருந்த கம்ரன் அக்மல், மொஹமட் யூசுப் ஆகியோரை தேசிய கிரிக்கெட் அக்கடமிக்கு அழைத்து அவர்களுக்குப் பயிற்சிகளை வழங்கியிருந்தார்.

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியினால் நிராகரிக்கப்பட்ட வீரர்களை அழைத்து அவர்களோடு இணைந்து செயற்பட்டமையால் டேவ் வட்மோருக்கும், இக்பால் ஹாசிமிற்குமிடையில் முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளன எனச் செய்திகள் வெளியாகியிருந்தன.

எனினும், தேர்வாளர்களுக்கும் பயிற்றுவிப்பாளருக்குமிடையிலான கருத்துப் பரிமாற்றங்கள் சிறந்த முறையில் காணப்படுவது அவசியம் எனவும், அப்போது தான் முரண்பாடுகளைத் தவிர்க்க முடியும் எனவும், இரு தரப்பிற்குமிடையில் எந்தவித கருத்து முரண்பாடுகளும் கிடையாது எனவும் இக்பால் ஹாசிம் உறுதிபடத் தெரிவித்தார். அத்தோடு எந்தவொரு வீரருக்குமான கதவுகள் அடைக்கப்படவில்லை எனவும், அணியில் இடம்பெறுவதற்குத் தகுதியான வீரர்கள் அனைவருக்கும் வாய்ப்புக்கள் உண்டு எனவும் அவர் தெரிவித்தார்.

# விளையாட மாட்டார் ஜோன்ஸன்



ஆஸ்திரேலியா அணியின் சகலதுறை வீரர் மிச்சல் ஜோன்சன், தற்போது நடைபெற்று வரும் ஐ.பி.எல். போட்டிகளில் விளையாட மாட்டார் என்று உறுதியான அறிவிப்புகள் வெளிவந்துள்ளன.

கடந்த 2011ம் ஆண்டு தென்னாபிரிக்காவிற்கு எதிரான டெஸ்ட் போட்டியின் போது ஜோன்சனுக்கு கால் பெருவிரலில் படுகாயம் ஏற்பட்டது.

அதற்காகச் சிகிச்சை செய்துகொண்ட ஜோன்சன், இன்னும் 5 அல்லது 6 மாதங்களில் மீண்டும் விளையாடுகளம் திரும்பி விடுவார் என்று தெரிவிக்கப்பட்டது. ஆனால் காயம் முழுமையாகக் குணமடையவில்லை. இதையடுத்து பெப்ரவரி மாதம் ஐ.பி.எல். வீரர்களுக்கான ஏலத்தில் மும்பை இந்தியன்ஸ் அணியினால் 3,00,000 அமெரிக்க டொலர்களுக்கு ஜோன்சன் வாங்கப்பட்டார்.

இருப்பினும் காயம் குணமடையாத நிலையில் ஜோன்சனின் மீண்டும் கிரிக்கெட் விளையாடும் காலம் தள்ளிப்போய்க் கொண்டிருந்தது. இந்த நிலையில் ஜோன்சன், ஐந்தவாது ஐ.பி.எல் போட்டிகளில் விளையாடமாட்டார் என்று உறுதியான அறிவிப்பு வெளிவந்துள்ளது.

மும்பை இந்தியன்ஸ் அணிக்கு சிறப்பான ஆட்டத்தை கொடுப்பார் என்று கருதப்பட்டதாலேயே மிச்சல் ஜோன்சன் வாங்கப்பட்டார். ஆனால் இப்போட்டிகளில் ஜோன்சன் விளையாடாமல் போனது மும்பை இந்தியன்ஸ் அணிக்கு ஒரு இழப்பாக அமைந்து விட்

# வருகிறது பாகிஸ்தான்

முழுமையான கிரிக்கெட் தொடரொன்றில் பங்குபற்றுவதற்காகப் பாகிஸ்தான் கிரிக்கெட் அணி இலங்கைக்குச் சுற்றுப்பயணமொன்றை மேற்கொள்ளவுள்ளது.

எதிர்வரும் மே மாதம் 29ஆம் திகதி பாகிஸ்தான் அணி இலங்கையை வந்தடையவுள்ளது. மூன்று டெஸ்ட் போட்டிகள், ஐந்து ஒருநாள் சர்வதேசப் போட்டிகள் மற்றும் இரண்டு 20/20 சர்வதேசப் போட்டிகள் ஆகியவற்றில் பங்குபற்றுவதற்காகவே பாகிஸ்தான் அணி இலங்கைக்கு வரவுள்ளது.

முதலாவது போட்டியாக 20/20 சர்வதேசப் போட்டி ஜூன் முதலாம் திகதி இடம்பெறவுள்ளது. இலங்கை வீரர்கள் சிலர் தற்போது ஐ.பி.எல். போட்டிகளில் பங்குபற்றிவரும் நிலையில், ஐ.பி.எல். தொடரின் இறுதிப்போட்டி மே 27ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

ஆகவே ஐ.பி.எல். இறுதிப் போட்டியில் பங்குபெறவுள்ள இரண்டு அணிகளில் பங்குகொள்ளும் இலங்கை வீரர்கள் இறுதிநேரத்திலேயே இலங்கைத் தேசிய அணியுடன் இணைந்து கொள்வதற்கான வாய்ப்பு உண்டு.

முதலாவது 20/20 போட்டி அம்பாந்தோட்டை மஹிந்த ராஜபக்ஷ சர்வதேச விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இரண்டாவது 20/20 சர்வதேசப் போட்டி அதே மைதானத்தில் ஜூன் 3ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

5 ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் முதலிரண்டு ஒருநாள் சர்வதேசப் போட்டிகளும் பல்லேகல சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் ஜூன் 7 மற்றும் ஜூன் 9ம் திகதிகளில் இடம்பெறவுள்ளன. மிகுதி 3 போட்டிகளும் கொழும்பு ஆர்.பிரேமதாச மைதானத்தில் ஜூன் 13, ஜூன் 16, ஜூன் 18ஆம் திகதிகளில் இடம்பெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

3 டெஸ்ட் போட்டிகளில் முதலாவது டெஸ்ட் போட்டி காலி சர்வதேச மைதானத்தில் ஜூன் 22ஆம் திகதி ஆரம்பமாகும். இரண்டாவது டெஸ்ட் போட்டி ஜூன் 30ஆம் திகதி கொழும்பு எஸ்.எஸ்.சி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

சுற்றுத்தொடரின் இறுதிப் போட்டியாக 3ஆவது டெஸ்ட் போட்டி பல்லேகல சர்வதேச விளையாட்டு மைதானத்தில் ஜூன் 8ஆம் திகதி முதல் நடைபெறும்.

இலங்கை ஆடுகளங்களில் இலங்கைத் துடுப்பாட்ட வீரர்கள் சிறப்பாகச் செயற்படும் வழக்கம் கொண்டவர்கள் என்பதோடு, இலங்கை ஆடுகளங்கள் சுழற்பந்து வீச்சாளர்களுக்கு சாதகத் தன்மையை வழங்கலாம் என்ற அடிப்படையில் பாகிஸ்தானிய சுழற்பந்து வீச்சாளர்களும் இந்தத் தொடரில் ஆதிக்கம் செலுத்துவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

(ந)


மாபெரும் இரசாயனவியல் கருத்தரங்கு By:-அன்பு

★பரீட்சையை எதிர்கொள்ளும் உத்திகள்.
★எதிர்பார்ப்பு வினாக்கள்.
★மாற்றீடு செய்வது எப்படி போன்ற 25 விடய தலைப்புகள்.
★நாள்தோறும் 11.45.
★வெளி மாணவர்கள் கலந்து கொள்ளலாம்.

நாளை 01/05
செவ்வாய் 11.45 ஆரம்பம்.

THE SCIENCE CORNER


# தோல்விக்குக் காரணம் மத்திய வரிசை



ஐ.பி.எல். போட்டியில் நடப்புச் சம்பியனான சென்னை சுப்பர் கிங்ஸ் அணி, பஞ்சாப் அணியிடம் 7 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வி அடைந்தது.

சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் தோல்வி குறித்து தொடக்க வீரர் பிளிசிஸ் கூறியதாவது:

நானும், பத்ரிநாத்தும் சிறப்பான தொடக்கத்தைக் கொடுத்தோம். ஒரு ஓவருக்கு 9 ஓட்டங்கள் வரை எடுத்தோம். முதல் 6 ஓவரில் எங்கள் அணியின் ஆட்டம் நன்றாக இருந்தது.

7 முதல் 13 ஓவர்வரை ஓட்டங்கள் எடுக்க கடினமாக இருந்தது. மத்திய வரிசை துடுப்பாட்ட வீரர்கள் சரியாக விளையாடாமல் விரைவாக ஆட்டம் இழந்ததே தோல்விக்குக் காரணம். இந்த ஆடுகளத்தில் கடைசியில் அதிக ரன் ரேட் என்பது மிகவும் சவாலானது.

கடந்த முறை ஆடியதைவிட ஆடுகளம் மாறுபட்டு இருந்தது. டோனி ஆட்டமிழந்தது போட்டியின் திருப்பு முனையாகும். ஆட்டத்தை தன் கட்டுப்பாட்டுக்குள் வைத்துகொள்வதில் அவர் சிறந்தவர். பஞ்சாப் அணி 6 முதல் 11-வது ஓவர் வரை 50 ஓட்டங்கள் எடுத்தது இந்த போட்டியின் முக்கிய அம்சமாகும்.

பஞ்சாப் அணித்தலைவர் கில்கிறிஸ்ட் கூறும்போது, அசார் மொகமட்டின் பந்துவீச்சு அனைவரையும் மெய்சிலிர்க்க வைத்தது. இதேபோல சாவ்லாவும் நன்றாக வீசினார். இனிவரும் போட்டிகளிலும் இதே மாதிரி விளையாடுவோம் என்றார்.

கில்கிறிஸ்ட் காயம் காரணமாக நேற்றறுமுன்தினம் நடைபெற்ற போட்டி உட்பட 3 போட்டிகளில் விளையாடவில்லை. இந்தப் போட்டியில் சென்னை அணி 4-வது தோல்வியைத் தழுவியது. அதேவேளை பஞ்சாப் அணி 4-வது வெற்றியைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

(ந)

## மரண அறிவித்தல்

### தவச்செல்வம் தவமலர்

புங்குடுதீவு, 6ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், வேலணை மேற்கு, 8ஆம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட தவச்செல்வம் தவமலர் நேற்று (29.04.2012) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை- மனோன்மணி தம்பதியரின் பாசமிகு மகளும், காலஞ்சென்ற தவச்செல்வத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான துரையப்பா- செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், விஜயரூபன், விஜயகாந், வினோத், வைதேவி, வைஷ்ணவி (வேலணை, ம.மகாவித்தியாலயம்), காலஞ்சென்ற விஜிதரனின் அன்புத் தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.04.2012) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 2 மணியளவில் அம்பலவி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

8ஆம் வட்டாரம்,
வேலணை மேற்கு, வேலணை.

தகவல்:
பிள்ளைகள்.


மணல் விற்பனைக்குண்டு

நாற்பது வருடங்களாக கட்டட வேலைகளுக்கும், பூச்சு வேலைகளுக்கும் சிறந்ததெனும் நாமத்தைப் பெற்ற உப்புத் தன்மையற்ற மணல் 26 வருடங்களின் பின் இப்போது யாழ்ப்பாணத்தில்

4 ரெக்டர் - 23,000/-
அரிந்த கல்லும் விற்பனைக்குண்டு.
(கல்லு 1 - 38/-)

தொடர்புகளுக்கு
கண்ணா
0776766499

மானிப்பாயில் முதன் முறையாக
FRANCE, CANADA.
செல்லவுள்ளவர்களுக்கான
French, Classes.
(பிரெஞ்சு மொழி வகுப்புகள் ஆரம்பம்)
(கனடாவில் குடியுரிமை பெறவுள்ளவர்களுக்கும் உகந்தது)
French மொழியில் தகைமையும், அனுபவமும் உள்ள பிரபல ஆசிரியரால் விரிவுரைகள் மேற்கொள்ளப்படும்.
இன்றிலிருந்து அனுமதிகளைப் பெற்றுக் கொள்ளலாம்
மேலதிக விவரங்களுக்கு-
UNI ICT Education (pvt)ltd,
Jaffna Road, Manipay.
T.P- 0212255867, 0777110862.
(மானிப்பாய் பிரதேச சபைக்கு எதிரே)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 30.04.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.